# எங்கள் தமிழ்க் கோவை

(இரண்டாம் புத்தகம்)

பொதுப் பகுதி


தொகுப்பு ஆசிரியர்:

**உயர்திரு. T. S. அருணாசலம் பிள்ளை, B.A., L.T.**

தலைமை ஆசிரியர், போர்டு ஹைஸ்கூல், நாச்சியார் கோயில், தஞ்சை ஜில்லா.

**உயர்திரு. N. நஞ்சப்பா M.A., B.O.L., L.T**

தலைமை ஆசிரியர், போர்டு செகண்டரி ஸ்கூல், பாப்பிரெட்டிபட்டி, சேலம் ஜில்லா

**உயர்திரு. வித்துவான் G. சந்திரமௌலீஸ்வரன்**

தமிழ் ஆசிரியர்,

லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம்.



## விந்தியா வெளியீடு

**1/1, பெரியண்ண மேஸ்திரி தெரு.**

**சென்னை—1.**



பதிப்புரிமை]


[விலை ரூ. 1.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.

# முன்னுரை

**‘எங்கள் தமிழ்க் கோவை’** என்னும் பெயரோடு வெளிவரும் இக்கோவை நூல்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நான்கு - ஐந்தாம் படிவங்களில் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூல்களாக அமைவதற்குரியனவாகும். மண்டலமொழி முதன்மொழியாக்கப் பட்ட பின்னர், அந்நிலைக் கேற்ப அரசியலாரால் அண்மையில் வெளியிடப்பட்ட பாடவியலை நன்கு ஆராய்ந்து முற்றிலும் அதற்கு ஒத்த முறையில் இவை தொகுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் நன்மையைக் கருதியும், ஆசிரிய அறிஞர் பலர் ஆலோசனைக்கு இணங்கியும் பொதுப் பயிற்சிக்குரிய பகுதியும், சிறப்புப் பயிற்சிக்குரிய பகுதியும் தனித்தனி வெவ்வேறு புத்தகங் களாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அவ்வப் பகுதிக்கெனப் பாடவியலில் குறிக்கபட்டுள்ள அளவினும் சிறிது மிகுதியாகவே செய்யுட்களும் உரை நடைப் பாடல்களும் சேர்க்கப் பட்டுள்ளன ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்திற்கும் மாணவர் களின் தகுதிக்கும் ஏற்பப் பாடங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு நடத்துவதற்கு இடமிருக்கவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. செய்யுட்களுக்கு விளக்கமான குறிப்புரையும் உரைநடைப் பாடங்கட்குப் பயிற்சி வினாக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் துணைகொண்டு மாணவர்கள் பொருளுணர்ச்சியும் மொழிப் பயிற்சியும் பெறலாம்.

இவ்வாறு பலவகையாலும் மாணவர்கட்குப் பெரும்பயன் தருவதாக வெளிவரும் இக் ‘கோவை’ நூல் வரிசையை ஆசிரியர் களும் அதிகாரிகளும் விரும்பி ஏற்று ஆதரவு நல்குவர் என நம்புகின்றோம்.

இந்நூல்களைத் தொகுப்பதிலும், பதிப்பிப்பதிலும் உடனிருந்து உதவிய திருவாளர்கள், **வித்துவான், ம. வி. இராகவன், வித்துவான் எஸ். இலக்குமண சர்மா** ஆகிய அன்பர்கட்கு எமது அகம்கெழுமிய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தங்கள் செய்யுட் களையும் கட்டுரைகளையும் இக்‘கோவை’ வரிசையில் கோத்துக் கொள்ள இசைவு தந்த அறிஞர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரியதாகும்.

**தொகுத்தோர்.**

# பொருளடக்கம்

## செய்யுள்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| **I.** | **கடவுள் வாழ்த்து :—** | | |
| | *தாயுமானவர் பாடல்* | ... | 1 |
| **II.** | **நீதி :—** | | |
| 1 | *புறநானூறு* | ... | 2 |
| 2. | *திருக்குறள்* | ... | 3 |
| 3. | *நாலடியார்* | ... | 5 |
| 4. | *ஆசாரக்கோவை* | ... | 6 |
| **III.** | **கதை :—** | | |
| 1. | *பெரிய புராணம்* | ... | 8 |
| 2. | *கம்பராமாயணம்* | ... | 16 |
| 3 | *சிலப்பதிகாரம்* | ... | 22 |
| 4. | *தேம்பாவணி* | ... | 26 |
| **IV** | **சிறு நூல்கள் :—** | | |
| 1. | *திருவேங்கடத்தந்தாதி* | ... | 31 |
| 2. | *திருவெங்கைக் கலம்பகம்* | ... | 32 |
| 3. | *கலைசைச் சிலேடை வெண்பா* | ... | 32 |
| 4. | *சோணசைல மாலை* | ... | 33 |
| 5. | *மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்* | ... | 33 |
| **V.** | **வருணனை** | ... | 36 |
| **VI.** | **தனிப்பாடல்** | ... | 40 |


### உரை நடை


| | | | |
|---|---|---|---|
| 1. | *வஞ்சினம் கூறல்*<br>வித்துவான் டாக்டர் மு. வரதராசன். **M. O. L. Phd.** | ... | 43 |
| 2. | *இசையின் பெருமை*<br>டாக்டர். உ. வே. சுவாமிநாதையர் | ... | 53 |

3. கலைகள் ... 59
திரு. வி. கலியாண சுந்தர முதலியார்

4. ஆதிரை பிச்சையிட்ட காதை ... 65
டாக்டர். மா. இராசமாணிக்கம் M. A. L. T. M. O. L., PHD.

5. மலேயா நாட்டுக் கப்பற் பிரயாணம் ... 69
T. பத்மாவதி அம்மாள்

6. அஞ்சியும் ஔவையாரும் ... 76
ஆ. கார்மேகக்கோன்

7. செல்வத்தின் சிறப்பு ... 86
நோபம் நா. நடராசன் M. A.

8. கிராமச் சிறுகைத்தொழில் ... 92
திரு, முத்தையா M. A.

9. நிலக்கரி ... 97
திரு, R. K. விசுவநாதன். M. A.

10. ஜேம்ஸ் குக்கின் முதற் கடற் செலவு ... 102
வித்துவான், பு. செல்வராசன் அவர்கள்.

# எங்கள் தமிழ்க் கோவை

## இரண்டாம் புத்தகம்

## பொதுப் பகுதி

---

## செய்யுள்

### I. கடவுள் வாழ்த்து

#### தாயுமானவர் பாடல்

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது? சமயகோ டிகளெல்லாம்
தந்தெய்வம் எந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது?
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெது? மேற்
கங்குல்பகல் அறநின்ற எல்லையுள தெது? அது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாம்மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

நித்தியமாய், நிர்மலமாய், நிட்களமாய், நிராமயமாய்,
நிறைவாய், நீங்காச்
சுத்தமுமாய்த், தூரமுமாய்ச், சமீபமுமாய்த், துரியநிறை
சுடராய், எல்லாம்
வைத்திருந்த தாரகமாய், ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச், சுகாரம்பப்பெருவெளியைச்
சிந்தை செய்வாம். 2

—தாயுமானவர்.

### குறிப்புரை

தாயுமானவர் சோழநாட்டில் திருமறைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர். தந்தை கேடிலியப்பப் பிள்ளை. தாயுமானவர் திரிசிரபுரத்தில் வாழ்ந்து வந்தார்; விசய ரகுநாத சொக்கலிங்க நாயக மன்னரிடம் வேலையில் இருந்தார்; பிறகு துறவியானார். இவரது காலம் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி.

### அருஞ் சொற்கள்

1. கங்குல் - இரவு. அஞ்சலி செய்தல் - கும்பிடுதல்.

2. நிட்களம் - உருவில்லாமை. நிர் ஆமயம் - நோயில்லாமை. துரியம் - சுத்தநிலை (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலைகளுள் நான்காவது). தாரகம் - ஆதாரம். சித்உரு - அறிவுருவம்.

# II. நீதி

## 1. புறநானூறு

திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி.

யாண்டுபல வாக நரையில ஆகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. 1

—பிசிராந்தையார்.

திணை—பொதுவியல். துறை—பொருண்மொழிக்காஞ்சி.

பல்சான் றீரே பல்சான் றீரே,
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுள்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே,
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ.
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல்லாற்றுப் படூஉம் நெறியு மாரதுவே. 2

—நரிவெரூஉத்தலையார்.

### குறிப்புரை

இந்நூல், சங்க நூற்களின் தொகுதியாகிய எட்டுத்தொகை நூற்களுள் ஒன்றாகும். எட்டுத்தொகை நூல்கள் :—நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். புறநானூறு, புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கப்படும். புறத்திணைகளுக்குரிய **400** அகவற்பாக்களை யுடைமையின் இந்நூல் புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இது புறப்பொருளால் தொகுக்கப்பட்டது. இதனைப் பாடிய புலவர்கள் பலர். இந்நூலால் பண்டைத் தமிழ் அரசர், குறுநில மன்னர் முதலியோர் வரலாறுகளை அறியலாம்.

### அருஞ் சொற்கள்

**1.** யாண்டு - வருடம். யாங்கு ஆகியர்?—எப்படி ஆகுவது? மாண்ட - மாட்சிமைப்பட்ட, நிரம்பினர் - அறிவு நிரம்பினர், இளைஞர் - ஏவல் செய்வோர். அல்லவை - முறையல்லாதவற்றை. ஆன்று - (நற்குணங்களால்) அமைந்து, அவிந்து - (அறவோர் முதலியவரிடத்து) வணங்கியிருந்து, அடங்கிய - ஐம்புலனும் அடங்கிய, கொள்கை - கோட்பாட்டினையுடைய, சான்றோர் - பெரியோர்.

**2.** நரை - நரைமயிர், திரைகவுள்-தோல் சுருங்கிய தாடை. கணிச்சி-மழு. ஒருவன் - யமன். ஓம்புமின் - விலக்குங்கள்.

## 2. திருக்குறள்

### கல்வியின் சிறப்பு

தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக் 1
கற்றனைத் தூறு மறிவு.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் 2
சாந்துணையுங் கல்லாத வாறு.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற் 3
கெழுமையு மேமாப் புடைத்து.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு 4
காமுறுவர் கற்றறிந் தார்.

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு 5
மாடல்ல மற்றை யவை.

**கேள்வி**

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ் 6
செல்வத்து ளெல்லாந் தலை.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது 7
வயிற்றுக்கு மீயப் படும்.

கற்றில னாயினுங் கேட்க; வஃதொருவற் 8
கொற்கத்தி னூற்றாந் துணை.

எனைத்தானு நல்லவை கேட்க; வனைத்தானும் 9
ஆன்ற பெருமை தரும்.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் 10
அவியினும் வாழினு மென்?

**குறிப்புரை**

திருக்குறளின் ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். இவர் வள்ளுவர் குடியில் பிறந்தவர். இக்குடியினர் அரசனது பட்டத்து யானையின்மேல் முரசினை ஏற்றித் தாமும் உடனிருந்து முரசறைந்து திருவிழா, திருமணம், படையெழுச்சி முதலிய நற்செய்திகளை நகரமாந்தருக்கு அறிவிப்பது மரபாகும். இவரது காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும். திருக்குறளுக்குப் பதின்மர் உரை எழுதி யுள்ளனர். அவ்வுரைகளுள் பரிமேலழகர் எழுதிய உரையே சிறந்ததாகும்.

**அருஞ்சொற்கள்**

கல்வி — கற்றற்குரிய நூல்களைக் கற்றல்

1. கேணி - குளத்தில் உள்ள நீர்.
2. சாந்துணையும் - இறக்குமளவும்.

3. ஒருமை - ஒரு பிறப்பு; எழுமை - ஏழுபிறப்புகள், ஏமாப்பு - சென்று உதவுதல்.

4. காமுறுவர் - விரும்புவர்.

5. கேடுஇல் - அழிவில்லாத. விழு - சீரிய. மாடு - செல்வம்.

கேள்வி — கேட்கப்படும் நூற் பொருள்களைக் கற்றறிந்தார் கூற கேட்டல்

6. செவிச் செல்வம் — செவியால் வரும் செல்வம்.

8. ஒற்கத்தின் - தளர்ச்சிவந்த இடத்து. ஊற்று ஆம் - பற்றுக் கோடாகும்.

9. எனைத்தானும் - சிறியதாயினும். ஆன்ற - நிறைந்த.

## 3. நாலடியார்

### கல்வியே உயர்ச்சிக்குக் காரணம்

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோர் ஆயினும், கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 1

### குடிப்பிறந்தார் தன்மை

ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். 2

### சிற்றறிவுடையார் தன்மை

தாமேயும் இன்புறார்; தக்கார்க்கும் நன்றாற்றார்;
ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார். 3

### தானே தன் உயர்வுக்குக் காரணம்

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். 4

### நல்லினஞ்சேர்தல்

அறிமின் அறநெறி; யஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; யெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

### குறிப்புரை

நாலடியார் என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் இயற்றப்பட்ட நூல் ஆதலின் இது நாலடியார் என்னும் பெயர் பெற்றது. நான்கு+அடி+ஆர்—நாலடியார். 'ஆர்' சிறப்புப் பற்றிய விகுதி. இதன் வேறு பெயர் நாலடி நானூறு. "ஆலும் வேலும் பல்லுக் குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்னும் பழமொழியால் இது திருக்குறளோடு வைத்து எண்ணப்படும் தகுதியுடையது என்பது விளங்கும். இப்பாடல்கள் சமண முனிவர்களால் பாடப்பட்டவை. பிற்காலத்தவரான பதுமனார் என்னும் புலவர் இந்நூலுக்குப் பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடு செய்தார்.

### அருஞ்சொற்கள்

1. களர் - உவர் நிலம். கடை நிலத்தோர் - இழிவான வகுப்பில் பிறந்தவர். தலை நிலம் - மேன்மையான இடம். பிறப்புப் பற்றி உயர்வு, தாழ்வு பாராட்டாமல் கல்விச் சிறப்பால் நன்கு மதிக்கவேண்டும்.

2. ஒரு புடை - ஒரு பகுதி. ஞாலம் - பூமி. செல்லாமை - வறுமை, செவ்வன் - நன்றாக. ஒப்புரவு - உபகாரம்.

3. நன்று ஆற்றார் - தானம் செய்ய மாட்டார், ஏமம் சார் - உயிர்க்குப் பாதுகாப்பாகப் பொருந்திய, ஆக்கம் - செல்வம், அவத்தம் - வீண்.

4. நிறுப்பானும் - வைப்பவனும்.

5. அறநெறி - தருமவழி, கூற்றம் - எமன், போற்றுமின் - (உம்மிடம் வராதபடி தடுத்துப்) பாதுகாத்துக் கொள்ளுங்கள், கேண்மை-நட்பு.

## 4. ஆசாரக் கோவை

### அற்றைக் கடன்

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

## சிந்திக்கத் தகாதவை

பொய்குறளை வெளவல் அழுக்கா(று) இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்; சிந்திப்பின்
ஐயம் புகுவித்(து) அருநிரயத்(து) உய்த்துவிடும்;
தெய்வமும் செற்று விடும். 2

## பிறரிடம் ஒன்றுரைக்கும் முறை

விரைந்துரையார்; மேன்மேல் உரையார்; பொய்யாய
பரந்துரையார்; பாரித்(து) உரையார்; ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. 3

## பொன்போல் போற்றத் தக்கவை

தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்(று)
உன்னித்து வைத்த பொருளோ(டு)—இவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க; உய்யாக்கால்
மன்னிய ஏதம் தரும். 4

## இல்வாழ்க்கையின் சிறப்பு

நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க்(கு) ஆசாரம்
எப்பெற்றி யானும் படும். 5

—பெருவாயின் முள்ளியார்.

### குறிப்புரை

**1.** வைகறையாமம்-விடியற் காலமாகிய (இரவின்) பின்யாமம், துயில்-தூக்கம். அறம்-தருமம், ஒண்பொருளும்-சிறந்த பொருளையும், வாய் வதில்-உண்மையாக, முந்தையோர்-முன்னோர்.

**2.** குறளை - கோள் சொல்லுதல், வெளவல் - (பிறர்பொருளைக்) கவர்ந்து கொள்ளுதல். அழுக்காறு-பொறாமை, ஐயம் தீர்-சந்தேகம் அற்ற, தெளிவான. காட்சியர்-அறிவுடையார், ஐயம்-பிச்சை. நிரயத்து - நரகத்தில், செற்றுவிடும்-கெடுத்துவிடும்.

**3.** பரந்து-பரபரப்புக்கொண்டு, பாரித்து - பரப்பி, செவ்வி - தக்கசமயம்.

**4.** தாரம் - மனைவி, உன்னித்து வைத்த - எண்ணி (ச்சேர்த்து) வைத்த, ஏதம் - துன்பம்.

**5.** நந்து எறும்பு - ஆக்கமுள்ள எறும்பு, கடைப்பிடித்து - சோராமல் கொண்டு, ஆசாரம் - நல்லொழுக்கம், படும் - சிறப்புறும்.

# III. கதை

## 1. பெரிய புராணம்

### அப்பூதியடிகள் புராணம்

**அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரால் பல அறங்கள் செய்தல்**

தாண்டவம் புரிய வல்ல
தம்பிரா னுருக் கன்பர்
ஈண்டிய புகழின் பாலா
ரெல்லையி றவத்தின் மிக்கார்
ஆண்டசீ ரரசின் பாத
மடைந்தவ ரறியா முன்னே
காண்டகு காதல் கூரக்
கலந்தவன் பினரா யுள்ளார். 1

களவுபொய் காமங் கோபம்
முதலிய குற்றங் காய்ந்தார்;
வளமிகு மனையின் வாழ்க்கை
நிலையினர் மனைப்பா லுள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள்
ஆவொடு மேதி மற்றும்
உளவெலா மரசின் நாமஞ்
சாற்றுமவ் வொழுக்க லாற்றார். 2

வடிவுதாங் காணா ராயும்
மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானா
ரருளுங்கேட் டவர்நா மத்தாற்

படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப்
பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து
முறைமையால் வாழு நாளில். 3

### அப்பர் எங்கும் தம் பெயரையே காணுதல்

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருட னமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை யெம்மருங்குந் தாங்கண்டார். 4

### திருநாவுக்கரசர் வினவும், அப்பூதியடிகள் விடையும்

"ஆறணியுஞ் சடை முடியா
ரடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந்
தரில்நும்பே ரெழுதாதே
வேறொருபேர் முன்னெழுத
வேண்டியகா ரணமென்கொல்?
கூறு" மென வெதிர்மொழிந்தார்
கோதில்மொழிக் கொற்றவனார். 5

நின்றமறை யோர்கேளா
நிலையழிந்த சிந்தையராய்
"நன்றருளிச் செய்திலீர்
நாணிலமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி
திருத்தொண்டி னுறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ
வேறொருபேர்?" எனவெகுள்வார். 6

"நம்மையுடை யவர்கழற்கீழ்
நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென
வென்போல்வா ருந்தெளியச்

செம்மைபுரி திருநாவுக்
கரசர்திருப் பெயரெழுத
வெம்மைமொழி யான்கேட்க
விளம்பினீ " ரெனவிளம்பி. 7

" பொங்குகடற் கன்மிதப்பிற்
போந்தேறு மவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தி
லறியாதார் யாருளரே ?
மங்கலமாந் திருவேடத்
துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் ? நீர்தாம்யார்?
இயம்பு "மென வியம்பினர். 8

**திருநாவுக்கரசர் தம்மை வெளிப்படுத்துதல்**

திருமறையோ ரதுமொழியத்
திருநாவுக் கரசரவர்
பெருமையறிந் துரைசெய்வார்
" பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினு
லாட்கொள்ள வடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத
சிறுமையேன் யா"னென்றார். 9

**அப்பூதியடிகளின் செயல்**

அரசறிய வுரைசெய்ய வப்பூதி யடிகள்தாங்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி யுடம்பெல்லா முரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகம லம்பூண்டார். 10

மற்றவரை யெதிர்வணங்கி வாகீச ரெடுத்தருள
அற்றவர்க ளருநிதியம் பெற்றார்போ லருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ வோடினர் பாடினர். 11

**[அப்பூதியடிகள் திருநாவுக்கரசருக்குத் திருவமுது படைக்கக் கருதி வாழைக் குருத்தொன்று கொண்டு வருமாறு தமது மூத்த புதல்வரை அனுப்பினர்]**

**அரவு தீண்டுதல்**

"நல்லதாய் தந்தை யேவ
நானிது செயப்பெற் றே"னென்(று)
ஒல்லையில் விரைந்து தோட்டத்
துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும்
பொழுதினில் வாளராவொன்(று)
அல்லலுற் றழுங்கிச் சோர
வங்கையிற் றீண்டிற் றன்றே. 12

கையினிற் கவர்ந்து சுற்றிக்
கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப்
பதைப்புடன் "பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா
முன்னம்வே கத்தா லெய்திக்
கொய்தவிக் குருத்தைச் சென்று
கொடுப்ப'னென் றோடி வந்தான். 13

பொருந்திய விடவே கத்திற்
போதுவான் வேகம் முந்த
வருந்தியே யணையும் போழ்து
"மாசுணங் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவ ரமுது செய்யத்
தாழ்க்கையா னறையே" னென்று
திருந்திய கருத்தி னோடுஞ்
செழுமனை சென்று புக்கான். 14

எரிவிடம் முறையே யேறித்
தலைக்கொண்ட வேழாம் வேகந்
தெரிவுற வெயிறுங் கண்ணு
மேனியுங் கருகித் தீய்ந்து

விரிவுரை குழறி யாவி
விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயர்
பால்வைத்துப் படிமேல் விழ்ந்தான். 15

**அப்பூதியடிகள் இறந்த மகனை மறைத்துத் திருநாவுக்கரசரை அமுது செய்ய அழைத்தல்**

தளர்ந்துவிழ் மகனைக் கண்டு
தாயருந் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி
யுதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியுங் கண்டு
" விடத்தினுல் விந்தா " னென்று
துளங்குத லின்றித் தொண்ட
ரமுதுசெய் வதற்குச் சூழ்வார். 16

பெறலரும் புதல்வன் தன்னைப்
பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர்
புடையினில் மறைத்து வைத்தே
" அறவிது தெரியா வண்ண
மமுதுசெய் விப்போ " மென்று
விறலுடைத் தொண்ட ஞர்பால்
விருப்பொடு விரைந்து வந்தார். 17

**திருநாவுக்கரசர் பிள்ளையை உயிர்ப்பித்தல்**

நாவினுக் கரசர் கேளா
" நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவரித் தன்மை செய்வா "
ரென்றுமுன் னெழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி
யண்ணலா ரருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப்
பணிவிடம் பாற்று வித்தார். 18

தீவிடம் நீங்க வுய்ந்த
திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய வுறக்கம் நீங்கி
விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட
திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு
புனிதநீ றளித்தா ரன்றே. 19

புகழ்ந்தகோ மயத்து நீரால்
பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச்
சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தவக் கதலி நீண்ட
குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி யீர்வாய்
வலம்பெற மரபின் வைத்தார். 20

### திருநாவுக்கரசர் அமுது செய்தல்

மைந்தரும் மறையோர் தாமும்
மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர்
திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக்
கூத்தனு ரடியா ரோடும்
அந்தமி லாளி யாரங்
கமுதுசெய் தருளினரே. 21

### திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் தொண்டைச் சிறப்பித்துப் பாடுதல்

மாதவ மறையோர் செல்வ
மனையிடை அமுது செய்து
காதனண் பளித்துப் பன்னுள்
கலந்துட னிருந்த பின்றை

மேதகு நாவின் மன்னர்
விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து
நற்றமிழ்ப் பதிகஞ் செய்வார். 22

அப்பூதி யடிக ளார்த
மடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி யணிந்தார் தம்மை
விரும்புசொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோ
ரெல்லையி லன்பா லென்றுஞ்
செப்பூதி யங்கைக் கொண்டார்
திருநாவுக் கரசர் பாதம். 23

## குறிப்புரை

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அதில் கடைசியாகச் சேர்க்கப்பட்ட நூல் பெரியபுராணம். இது சிவனடியார்களின் வரலாற்றை உணர்த்தும் நூல். செயற்கரிய செயல்களைச் செய்து பெருமைபெற்ற சிவனடியாரது பெருமையைக் குறிக்கும் நூலாதலால் இது பெரியபுராணம் என்ற பெயரைப் பெற்றது. இது திருத்தொண்டர் புராணம் என்றும் கூறப்படும்.

இந்நூலாசிரியர் சேக்கிழார். அவர் தொண்டை நாட்டில் உள்ள குன்றத்தூரில் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர். இவர் இரண்டாம் குலோத்துங்கனுக்கு அமைச்சராக விளங்கியவர். இவரது காலம் 12 -ம் நூற்றாண்டின் முற்பகுதி.

## அருஞ்சொற்கள்

1. தம்பிரான் - தலைவர்.

2. காய்ந்தார் - முனிந்தவர், நிறைகோல் - துலாக்கோல்.

3. படிநிகழ் - உலகத்தில் நிகழ்கின்ற.

4. மந்தமாருதம் - இளந்தென்றற்காற்று, சந்தம் - அழகு, எம்மருங்கும் எல்லாப் பக்கங்களிலும்.

5. ஈறுஇல் - முடிவு இல்லாத, கோது - குற்றம்.

6. கேளா - கேட்டு, உறைப்பால் - வலிமையால், வெகுள்வார் கோபிப்பார்.

7. வெம்மை - கொடிய.

8. மிதப்பு - மிதப்பது, தெப்பம். அரசன் திருநாவுக்கரசரைக் கல்லிற் கட்டிக் கடலிலிட அவர் அக்கல்லேயே தெப்பமாகக் கொண்டு கரையேறிய வரலாறு இங்கறியத்தக்கது. இவ்வரசன் மகேந்திரவர்ம பல்லவன் (கி பி. 600-630) என்ப.

9. பிற துறை-சைவ சமயமல்லாத பிற சமயத் துறை;இங்குச் சமண சமயத்தைக் குறிக்கும், தெருளும்-தெளிவுள்ள.

10 கர கமலம் மிசை குவிய-கைகளாகிய தாமரைகள்(தலைக்கு) மேலே தாமாகவே சென்று குவிய, சரண கமலம்-அடித்தாமரை.

11. வாகீசர் - நாவுக்கரசர் அற்றவர்கள் - பொருளற்றவர்கள், உற்ற - பொருந்திய.

12. ஒல்லை-விரைவு, மல்லல் அம் குருத்து-வளப்பம் பொருந்திய அழகிய குருத்து, ஈரும்-அறுக்கும், வாள் அரா-ஒளியுள்ள பாம்பு.

13. கண் எரி காந்துகின்ற-கண்ணில் நெருப்புப் பொறி வீசுகின்ற, பை அரா-படத்தையுடைய பாம்பு, பாந்தள்-பாம்பு.

14. மாசுணம்-பாம்பு, தாழ்க்க-தாமதமாகும்படி, அறைகுவேன்-கூறேன், தன்மை யொருமை வினைமுற்று.

15. ஏழாம் வேகம்-பாம்பினது ஏழாவது வேகமும், முழு வேகமும், எயிறு-பற்கள், பரிகலம்-உண்பதற்கிடும் கலமாகிய குருத்து, படி-பூமி.

16. உதிரம்-இரத்தம், வீழ்ந்தான்-இறந்தான்.

17. பாங்கு-பக்கம், ஓர்புடை-ஓர் இடத்தில்.

18. பாற்றுவித்தார்-மாற்றியருளினர்.

19. சே உகைத்தவர்-எருதை (வாகனமாக) ஏறிச் செலுத்தும் சிவபெருமான், புனித - தூய்மையான.

20. நீவி - மெழுகி, திகழ்ந்த வான் சுதையும் போக்கி - விளங்குகின்ற வெள்ளிய கோலமிட்டு, ஈர் வாய் - அறுத்த பக்கத்தை.

21. மருங்கு - பக்கத்தில் (இருந்து), கொந்து அவிழ் கொன்றைவேணி - கொத்துக்களாக விரிந்து மலர்கின்ற கொன்றைப் பூக்களை அணிந்துள்ள சடைமுடி.

22. மாதவ மறையோர் - அப்பூதியடிகள், காதனண்பு : காதல்+நண்பு, பன்னாள் : பல்+நாள், பலநாள், மேதகு - மேன்மை+தகு, மூதூர் : முதுமை+ஊர்.

23. ஆன்ற - பெருமை சான்ற, சொல் மாலை - சொற்களாலாகிய பாமாலை.

# 2. கம்ப ராமாயணம்

## பால காண்டம்

### கையடைப் படலம்

#### தசரதன் கொலு மண்டபம்

நனைவரு கற்பக நாட்டு நல்நகர்
அனைவரும் அனைதர அயிர்க்கும் சிந்தையால்
நினையவும் அரியது விசும்பின் நீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தியே. 1

தூயமெல் அரியணைப் பொலிந்து தோன்றினன்
சேயிரு விசும்பிடைத் திரியும் சாரணர்
நாயகன் இவன் கொலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிரம் இல்லைஎன் றையம் நீங்கினர். 2

#### தசரதனிடம் விசுவாமித்திர முனிவர் வருதல்

மடங்கல் போல் மொய்ம்பினன் முன்னர், 'மன்னுயிர்
அடங்கலும் உலகும்வே றமைத்துத் தேவரோ(டு)
இடங்கொள்நான் முகனையும் படைப்பன் ஈண்டெ'னுத்
தொடங்கிய கோசிக முனிவன் தோன்றினன். 3

#### தசரதன் உபசாரம்

வந்துமுனி எய்துதலும் மார்பிலணி ஆரம்
அந்தரநி லத்திரவி அஞ்ச ஒளி விஞ்ச
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடி தெழுந்தடி பணிந்தான். 4

பணிந்துமணி செற்றுபுகு யிற்றி அவிர் பைம்பொன்
அணிந்ததவி சிட்டினித ருத்தியொ டிருத்தி
இணைந்தகம லச்சரண்அ ருச்சனை செய்' தின்றே
துணிந்ததெம்வி னைத்தொடர்பெ' னத்தொழுது சொல்லும் 5

#### தசரதன் முகமன் கூறல்

நிலம்செய்தவம் என்றுணரின் அன்றுநெடி போய் !என்
நலம் செய்வினை உண்டெனினும் அன்றுநகர் நீயான்
வலஞ்செய்துவ ணங்கஎளி வந்த இதுமுந்தெம்
குலஞ்செய்தவம்' என்றினிது கூறமுனி கூறும். 6

### விசுவாமித்திரர் தசரதனைப் புகழ்தல்

'என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறுற்ன் றுடையர் ஆனல்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன் நகரும் கற்பகநாட் டணிநகரும்
அணிமாட அயோத்தி என்னும்
பொன் நகரும் அல்லாது புகலுண்டோ ?
இகல்கடந்த புலவு வேலோய்!' 7

இன்தளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து
நின்றளிக்கும் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்கும் குருமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீகொண்(டு)
அன்றளித்த அரசன்றே புரந்தரனின்(று)
ஆள்கின்ற தரச!' வென்றான். 8

### தசரதன், விசுவாமித்திரரை நோக்கி யான்செய்ய வேண்டிய பணி யாது எனக் கேட்டல்.

உரைசெய்யு மளவினவன் முகநோக்கி
யுள்ளத்தி னுருவ் ராலுங்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி,
அரசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச்செய்வ தருளு கென்று
முரசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியு முனிவ னுங்கே 9

### கோசிகன் விருப்பம்

தருவனத்துள் யானியற்றும் தகைவேள்விக்(கு)
இடையூருய்த் தவஞ்செய் வோரை
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்

செருமுகத்துக் காத்திஎன நின்சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதி' என உயிர்இரக்கும்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான். 10

**தசரதன் துன்ப நிலை**

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
ஆருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரம் கால வேலான். 11

**தசரதன் விண்ணப்பம்**

தொடையூற்றில் தேன்துளிக்கும் நறுந்தாரான்
ஒரு வண்ணம் துயரம் நீங்கிப்
படையூற்றம் இலன்சிறியன் இவன்பெரியோய்
பணிஇதுவேல் பனிநீர்க் கங்கை
புடையூற்றும் சடையானும் புரந்தரனும்
வெகுண்டெழுந்து புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறாய் யான் காப்பன்
பெருவேள்விக் கெழுக' என்றான். 12

**கோசிகன் கடுங்கோப முறுதல்**

என்றனன்என் றலுமுனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி; இறுதிக் காலம்
அன்றெனஆம் என இமையோர் அயிர்த்தனர்; மேல்
வெயில் கரந்த(து); அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தன; மீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றன; வந் ததுநகையும்; சிவந்தனகண்;
இருண்டனபோய்த் திசைகள் எல்லாம் 13

### வசிட்டன் கூற்று

கறுத்த மாமுனி கருத்தை உன்னி' நீ
பொறுத்தி' என்றவர் புகழ்ந்து 'நின்மகற்கு(கு)
உறுத்தல் ஆகலா உறுதி எய்துநாள்
மறுத்தியோ ?'என வசிட்டன் கூறினன். 14

பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய! நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே. 15

### இராமன் வருகை

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
'திருவின் கேள்வனைக் கொணர்தி சென்'றென
'வருக என்றனன்' என்ன லோடும்வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான். 16

### கையடை

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி "நல்
தந்தை நீதனித் தாயும் நீ இவர்க்(கு)
எந்தை! தந்தனன் இயைந்த செய்கெ"ன்றான். 17

### கோசிகன்பின் குமாரர் போதல்

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைமுந்(து)
எடுத்த சீற்றம்விட் டினிதுவாழ்த்தி " மேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம்"என
நடத்தல் மேயினான் நவைக்கண் நீங்கினான். 18

### இராமன் படைக்கலங்களை எடுத்துக் கொள்ளுதல்

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோ
லென்றுந் தேய்வுறாத் தூணி யாத்திரு
குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவி
லொன்று தாங்கினா னுலகந் தாங்கினான். 19

அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர் வழிக்கொண் டாலெனச்
சொன்ன மாதவன் தொடர்ந்து சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன். 20

### மூவரும் சரயு நதியைச் சார்தல்

வரங்கண் மாசறத் தவஞ்செய் தோர்கள்வாழ்
புரங்க ணேரிலா நகர நீங்கிப்போய்
அரங்கி னுடுவார் சிலம்பி னன்னநின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினர். 21

### நதியைக் கடத்தல்

தாழு மாமழை தழுவு நெற்றியாற்
சூழி யானைபோற் றேன்று மால்வரைப்
பாழி மாமுகட் டுச்சிப் பச்சைமா
வேழு மேறப்போ யாறு மேறினர். 22

### குறிப்புரை

சொற்சுவை, பொருட்சுவை செறிந்து விளங்குஞ் சிறந்த காவியங்களுள் கம்பராமாயணம் ஒன்று.

கம்பருடைய பிறப்பு வளர்ப்புக்களைப் பற்றிய வரலாறு இருளிற் புதைபட்டுக் கிடக்கின்றது. இவர் சோழவள நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் என்பவருக்குப் பிள்ளையாகத் தோன்றினர் என்பர். கம்பர் இளம் பருவத்திலேயே திருவெண்ணெய் நல்லூரில் பெருஞ் செல்வராயும், சிறந்த வள்ளலாயும் விளங்கிய சடையப்ப முதலியாரை அடைந்து, அவரால் ஆதரிக்கப்பட்டு, பெரும் புலமையுற்று விளங்கினர். கம்பர், தம்மை ஆதரித்த அவ்வள்ளலை, நன்றியறிதற் காரணமாகப் பத்து இடங்களில் புகழ்ந்துள்ளார். "கல்வியிற் பெரியவன் கம்பன்" என்று வருவதும், "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" என்னும் முதுமொழியும், "கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயங் களியாதே," என்ற கூற்றும், பிறவும் கம்பருடைய புலமை மாட்சியை விளக்குகின்றன. இவர் பாடிய வேறு நூல்கள் ஏரெழுபது, சடகோபரந்தாதி முதலியன.

கம்பருடைய காலம் கி. பி. **9**-ம் நூற்றாண்டு என்று ஒரு சாராரும், **12**-ம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர்.

கம்பராமாயணம் என்பது கம்பரது ராமாயணம் என விரியும். ஆறும் வேற்றுமைத் தொகை. இராமாயணம் = இராம + அயநம் = இராமனது நெறி. இந்நூல் 'இராமாவதாரம்' என்றும் பெயர் பெறும்.

கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள் உள்ளன. அவை பால காண்டம் அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன.

கையடைப் படலம் பால காண்டத்தில் உள்ளது. இது, தசரதன் இராம லக்ஷ்மணரைக் கோசிகன் கையில் அடைக்கலமாகக் கொடுத்ததைக் கூறும்.

1. நனை - அரும்புகள், வரு-அரும்புகின்ற, கற்பகநாட்டு நல் நகர் - அமராவதி நகரம், புனை மணி மண்டபம் - அலங்கரிக்கப்பட்ட அழகிய மண்டபம், எய்தி - (தசரதன்) போய்,

2. சேய் இரு விசும்பிடை திரியும் சாரணர் - உயர்ந்த பெரிய ஆகாய மார்க்கத்திலே சஞ்சரிக்கும் தேவ சாதியார், நாயகன் இவன் கொல் என்று அயிர்த்து - தேவேந்திரன் இவனோ என்று (முதலில்) சந்தேகித்து, நாட்டம் - கண்கள்.

3. மடங்கல்போல் மொய்ம்பினான் முன்னர் - சிங்கம்போன்ற வலிமை உடையவனாகிய தசரதன் முன். கோசிக முனிவன் - விசுவாமித்திரன்.

4. அந்தர நிலம் - ஆகாயம், இரவி - சூரியன், விஞ்ச - மிகுதியாக, கந்த மலரிற் கடவுள் - பிரம்மதேவன், கந்தமலர் - தாமரை.

5. மணி செற்றுபு குயிற்றி-இரத்தினங்களை நெருக்கமாகப் பதித்ததினால், அவிர் பைம்பொன் அணிந்த தவிசு - விளங்குகின்ற பசும் பொன்னினால் அழகாகச் செய்யப்பட்ட ஆசனத்தை, அருத்தி - அன்பு, இருத்தி - இருக்கச்செய்து.

6. நெடியோய் - தவத்தாற் பெரியோய்!, நிலம் - நிலத்தினர், இடவாகு பெயர்.

7. இகல் கடந்த - பகைவரை வென்ற, புலவு - மாமிச நாற்றம், வேலோய் - வேலாயுதத்தையுடைய தசரதனே! பல் நகமும் - பல மலைகளும், நகு - சிரிக்கின்ற, வெள்ளிப்பனிவரை - கயிலாயமலை, பதும பீடத்தன் நகரும் - சத்தியலோகமும், நகு வெள்ளி: வினைத்தொகை, புகல் - அடைக்கலம்.

8. இன் தளிர் - இனிமையான தளிர்களை உடைய, குன்று அளிக்கும் - மலையை ஒத்த, குருமணி தோள் சம்பரனை - சிறந்த மணிகள் அழுத்திச் செய்யப்பட்ட அணியைப் பூண்ட புஜங்களை உடைய சம்பரன் என்னும் அசுரனை, புரந்தரன் - இந்திரன்.

9. அரைசு - அரசு, முரைசு - முரசு, பேரிகை; இரண்டும் இடைப்போலி.

10. தருவனம் - மரங்கள் அடர்ந்த காடு, இயற்றும் - செய்யவும், தகை - சிறப்பு, வெருவரல் - அஞ்சுதல், வேள்வி - யாகம், நிருதர் - அரக்கர், செருமுகத்து - போரில், உளைய - வருந்த.

11. எண்ணிலா: எண் + இலா—கணக்கற்ற, மருமம் - மார்பு, உண்ணிலாவிய: உள் + நிலாவிய, உந்த - தள்ள, கால வேலான் - யமனை ஒத்த வேலாயுதத்தை உடையனாகிய,

**12.** தொடை ஊற்றில் - (துளிகள்) தொடுத்து வருதலோடு கூடிய ஒழுக்கைப்போல, படை ஊற்றம் - படைக்கலப் பயிற்சி, புடை - ஒரு பக்கத்திலே, ஊற்றும் - ஒழுகவிட்ட, பெரு வேள்வி: பண்புத் தொகை.

**13.** மண்படைத்த முனி-விசுவாமித்திரன், வேறு ஓர் உலகம் உண்டாக்கியதைக் குறிக்கிறது.

**14.** கறுத்த - கோபங்கொண்ட, உறுத்தல் ஆகலா உறுதி - அடைவிக்க முடியாத நன்மை.

**15.** மொய் - வலிமை, வேலை - கடல், விஞ்சை - வித்தை, எதிர்ந்தது - நேர்ந்துளது, எய்து காலம்: வினைத் தொகை.

**16.** திருவின் கேள்வன் - இலக்குமியின் கணவனுன இராமன்.

**17.** நம்பி - ஆடவரில் சிறந்தவனுன இராமன், முந்தை நான்மறை - முந்தினவாய நான்கு வேதங்கள், எந்தை - எம் தந்தை: (மரூஉ).

**18.** சீற்றம் - கோபம், நவைக்கண் நீங்கினுன் - குற்றத்திலிருந்து நீங்கினவனுகிய விசுவாமித்திரன்.

**19.** வென்றி - வெற்றி, புடை விசித்து - பக்கத்தில் கட்டி, தூணி - அம்பறுத்தூணி, கொற்றம் - வெற்றி, உலகம் தாங்கினுன் - எல்லா உலகங்களையும் காப்பவனுன ,இராமன்.

**20.** ஐயனும் மன்னன் - தலைவனுகிய தசரதனுடைய, சொன்ன மாதவன் - விசுவாமித்திரன், சாயை - நிழல், புரிசை - மதில்,

**21.** மாசு - குற்றம், நவம் செய்தோர்கள் வாழ்புரங்கள் - அமராவதி முதலிய நகரங்கள், அரங்கு - நாடகமேடை, இரங்கும் - ஒலிக்கும், வார்புனல் சரயு-பெரிய வெள்ளத்தையுடைய சரயுநதி.

**22.** தாழு - தங்குகின்ற, மா - பெரிய, மழை - மேகங்கள், தழுவு நெற்றியால் - தங்கும் மேலிடத்தை உடைமையால், சூழி - முகபடாம், மால் - பெரிய, வரை - உதயகிரியினது, பாழி - வலிமை, மா முகடு உச்சி - பெரிய சிகரத்தின் நுனியிலே, பச்சை மா ஏழும் ஏற - (சூரியனுடைய) பசுமை நிறமுடைய குதிரைகள் ஏழும் ஏற (சூரியன் உதிக்குங்காலத்தில்), போய் ஆறும் ஏறினுன் - இராமன் நதியைக் கடந்து ஏறினுன்.

## 3. சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதை

### புறஞ்சேரியில் நின்றும் நீங்கி மதுரை நகருக்குள் போயிருக்கும்படி மாடலனும் கவுந்தியடிகளும் கோவலனை வேண்டல்

அறத்துறை மாக்கட் கல்ல திந்தப்
புறச்சிறை யிருக்கை பொருந்தா தாகலின்
அரைசர் பின்னோ ரகநகர் மருங்கினின்

உரையிற் கொள்வரிங் கொழிகநின் னிருப்புக்
காதலி தன்னொடு கதிர்செல் வதன்முன்

மாட மதுரை மாநகர் புகுகென
மாதவத் தாட்டியு மாமறை முதல்வனுங்
**கோவலன்** றனக்குக் கூறுங் காலை

### மாதரி ஆங்கு வரல்

அறம்புரி நெஞ்சி னறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்க ணியக்கிக்குப்

பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் **மாதரி** யென்போள்
**காவுந்தி** யையையைக் கண்டடி தொழலும்
ஆகாத் தோம்பி யாப்பா ளளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும் பாடில்லை

தீதிலண் முதுமகள் செவ்வியள ளளியள்
மாதரி தன்னுடன் மடந்தையை யிருத்துதற்
கேத மின்றென வெண்ணின ளாகி

### மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாகத் தந்து, காவுந்தி அடிகள் அடைக்கலப் பொருளாகிய கண்ணகியின் கற்பு மேம்பாட்டுச் சிறப்பைத் தெரிவித்தல்

மாதரி கேளிம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில் தன்குல வாணர்

அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்

செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கிங்

கென்னெடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணுத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்

**கற்புடைப் பெண்டிர் வசிக்கும் நாட்டின் சிறப்பை அடிகள் கூறல்**

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடென்னும்
அத்தகு நல்லுரை யறியா யோநீ
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருமது கேளாய் (என்று)
கவுந்தி கூற உவந்தனள் ஏத்தி

**அதைக்கேட்ட மாதரி உவந்து அவர்களை அழைத்துக்கொண்டு மதுரை புகல்**

முளையிள வெண்பின் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமயத்துக்
கன்றுதே ராவின் கனைகுரலியம்ப
மறித்தோ ணவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ

**மாதரி மதுரை நகரும், காவற்காடும், கிடங்கும், மதிலும் கழிந்து தன் மனைபுகல்**

மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்,
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்

எழுவும் சீப்பும் உழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிறுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

## குறிப்புரை

'நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகாரம்' என்று போற்றப் பெறுவதும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்றும் ஆகிய இந்நூல், இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது. கோவலன், கண்ணகி இவர்களின் வரலாறு இதன்கண் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்னும் உண்மைகளைக் கண்ணகியின் சிலம்பு காரணமாக இவர் பாடுதலின், இந்நூல் சிலப்பதிகாரம் என்னும் பெயர் பெற்றது. இதன்கண், இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் கலந்து வருதலின் இது, இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகும்.

இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவன் தம்பியாவர். இளமையிலே அரசு துறந்திருந்தமையின் இவர் அடிகள் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண் டென்பர்.

இந்நூலுக்கு அரும்பத உரை யொன்றும், அடியார்க்கு நல்லார் உரை யொன்றும் உள்ளன. அரும்பத உரை எழுதியவர் பெயர் தெரியவில்லை.

இந்நூல், புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது.

கவுந்தி அடிகளோடு மதுரைவந்து புறஞ்சேரியில் தங்கினர் கோவலனும் கண்ணகியும். புறஞ்சேரியில் இருப்பது தகாது; ஊருக்குள் போதலே நன்று என்று அடிகள் கூறுங்காலை, ஆண்டுவந்த மாதரி நல்லாளிடம் கண்ணகியை அடைக்கலமாக அடிகள் ஒப்புவித்த செய்தியைத் தெரிவிக்கும்.

## குறிப்புரை

**1.** புறத்துறை - புறம்பின் கண் பள்ளி. அரைசர் பின்னோர் - வாணிகர். உரையில் - (மாசாத்து மகன் என்னும்) புகழால். **13.** ஐயனுக்குப் பெண்பால் ஐயை. **14.** ஆப்பயன் - பால் முதலியன. **15.** கொடும்பாடு - கொடுமை. **16.** தீதிலள் - மனத்தில் அழுக்காறு இல்லாதவள். செவ்வியள் - மனக்கோட்டமில்லாதவள். **21.** பெறுநரின் - பெற்றார் போல. **28.** உடீஇ - உடுத்து. தொல்லோர் சிறப்பின் - பழையோராகச் சிறப்பித்துக் கூறப்பட்ட ஆயம். **32.** வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள் - அழகிய சிறிய அடியை முன் மண்

மகளும் கண்டறியாள். அதாவது அகம்விட்டுப் புறப்பட்டறியாள். இவள் கால் கொப்புளங்கண்டு நிலத்திற் பாவவில்லை, என்றுமாம். **35**. தன்றுயர் காணு - தனது துயரென வேருகத் தனிந்துக் காறுது. (கணவனது துயரைத் தன் துயராகவே கருதி என்க.)

**46**. முளையிள - இளமுளை என மாற்றுக. இளைய முளைபோன்ற. முதுக்குறை - சிறிய பருவத்தே பெரிய அறிவினையுடைய. **47**. செல்சுடர் - சுருங்கின சுடரையுடைய. **49**. மறித்தோள் நவியம் - ஆட்டு மறியையும் கோடரியையுமுடைய தோளிலே. **51**. மிளை - காவற்காடு. கிடங்கு - அகழி. வளைவிற்பொறி - வளைந்து தானே எய்யும் எந்திரவில். **52**. கரு விரல் ஊகம் - கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி. **53**. பரிவுறு வெந்நெயும் - காய்ந் திறைத்தலாற் சேர்ந்தாரை வருத்தும் நெய்யும், பாகடு குழிசியும் - செம்புருக்கும் மிடாவும் (அல்லது) அங்ஙனம் இறைத்தற்குப் பாகு காயும் குழிசிகளுமாம். **55**. தொடக்கு = கழுக்கோல்போலக் கழுத்திற் பூட்டி முறுக்கும் சங்கிலியும். (கயிற்றுத் தொடக்கும் ஆகும்.)

**56**. கழு - கழுக்கோல். புதை - அம்புக்கட்டு. புழை - (அம்புவைக்கும்) அறைகளும். **61**. ஞாயில் - குருவித் தலைகள். நாட்கொடி - நாள்தோறும் வென்று வென்று எடுத்த கொடி. நுடங்கும் - அசையும். கோவலர் மடந்தை - மாதரி. (இடைக்குலப் பெண்.)

## தேம்பாவணி

**அகஸ்டஸ் ராயன் (Caesar Augustus) ஆணைப்படி பெயரும் வரியும் கொடுக்கப் பெத்லேம் நகரம் வந்தசூசைக்கும் இயேசு நாதரைக் கர்ப்பத்தில் தாங்கியிருந்த மரி அம்மைக்கும் அந்நகரத்தார் இடங்கொடாமையால் அவர்கள் வருந்தி ஒரு கற்குகையை அடைந்தார்கள். அவ்விடத்தில்**

### இயேசுநாதர் பிறத்தல்

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய
இலையை மூன்றினும் இழிவில் கன்னியாய்
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிறப்ப ஈன்றனள். 1

மாத மார்கழி வைகல் ஐயைந்தாய்
ஏதி லாநிசிக் கிருத்தை மூவைந்தாய்
ஆதி நாளென ஆதி நாதனைக்
காதல் நாயகி களிப்பின் நல்கினள். 2

## தேவதூதர் குழந்தையை ஏந்தல்

சொக்க ளாவுருந் தோன்றிய தோன்றலை
மிக்க யேலொடு காபிரி யேல்விழைந்
தொக்க வேந்தினர் ஒக்கவுந் தாய்முனர்
மக்கள் நாதனை மாண்பெழக் காட்டினர். 3

## தாய்மகிழ்தல்

பொதிர்கொள் பூமணம் போன்மக வின்றவள்
கதிர்கொள் சேயொடு கண்கள் கலந்தகால்
எதிர்கொள் வெஞ்சுடர் காண்முழு இந்தெனு
முதிர்கொள் இன்ப முகத்து விளங்கினள். 4

**திருக்குமாரன் தாயை நோக்கி, 'என்னைப்பெற்ற தாயே, நீயும் என்னைப்போலிரு' வென்றான். தாயும் தேவகுமாரனை வணங் கினாள். முன் சொன்ன வானவரிருவரும் திருக்குமாரனைத் தாயின் கரத்தில் தந்து முன்னே விழுந்து வணங்கினர்.**

காந்தணேரிய செங்கரத் தேந்தினள்
ஏந்தமார்பி லிறுகவுஞ் சேர்த்தனள்
வாய்ந்த பூம்பதம் நீவி வணங்கினள்
ஆய்ந்த நூற்கடந் தாருணர் வெய்தினள். 5

**பின்னர்த் தேவகுமாரனைப் பலவாறு துதித்துப் புகழ்ந்தனள்; பின்பு**

தெருள் சுரந்த திரைப்புவி யாரந்துணைப்
பொருள்சு ரந்துயிர்க்(கு) உண்டி பொழிந்தனன்
மருள் சுரந்த வடுக்கெட மைந்தனாய்
அருள் சுரந்தமு தாய்தர நுங்கினன். 6

**மரியாள் சூசையைத் தேவகுமாரன் வடிவினைக்கண்டு மகிழ அழைத்தனள்.**

## சூசை குமாரனைக்காணுதல்

இந்து நேர்நுதல் மீன்கள் நேர்விழி
இண்டை நேர்முக நீர்மையாற்

கந்த நேர்நளிர் தூது நேருடல்
காட்டு நாதனை அம்புயச்
சந்தம் நேரிய கன்னி நேர்கையில்
தாம நேரிய முத்தெனச்
சிந்து நேர்நயம் மூழ்கு சீர்மையில்
தேற நோக்கினன் சூசையே; 7

**வியப்புற்று நின்ற சூசையை நோக்கிக் கன்னிமரி 'நம் நாதனை உன் கையில் ஏந்திக்கொள் என்று மலர்க்கையை நீட்டினுள் ; அவனும்,**

கைத்த லத்தி லெடுத்து மார்பொடு
காத லோங்க அணைத்தலும்
முத்த மிட்டலும் நோக்கில் தீட்டலும்
முற்ற நீரில் நனைத்தலும்
சித்த முற்றலும் நாண் மலர்க்கழல்
சென்னி யின்மிசை வைத்தலும்
இத்தி றத்திலும் உண்மகிழ்ந்துறும்
இன்ப மெல்லையு மில்லையே. 8

**இன்பக்கடலில் மூழ்கிய சூசை குமாரனைத் தாய்கைக் கொடுக்கத் தேவகுமாரன் விரிந்த செந்தாமரை மெத்தையின் மேல் அன்னக்குஞ்சு போலக் கன்னித்தாயின் கையிலே தூங்கினுன்; சூசை யிவ்வாறு பாராட்டிச் சீராட்டித் துதித்தனன்.**

களித்த நாளில் அரும்புந்தென்
காலே ! இனிதிங் கரும்புதியே
துளித்த நானத் தேனரும்பத்
துணர்நாண் மலர்காள் ! அரும்புதிரே
விளித்த நாகு மாங்குயில்காள் !
விளைதேன் பாவை அரும்புதிரே
அளித்த நாதன் நான்கனிய
அன்பு துயிலாத் துயில்கின்றுன். 9

கண்பட் டுறங்கக் கண்டேனே
கருணை கரனே ! களிக்கடலே !

புண்பட் டுளையும் நெஞ்சிற்கோர்
பொருவா மருந்தே ! அருளன்பே !
மண்பட் டலையும் கடலன்ன
மருளென் னெஞ்சிற் குயிர்நிலையே !
எண்பட் டுயர்ந்த செல்வரசே !
எம்மே லிரங்குந் தயையிதுவோ ? 10

என்றான் அழுதான் உள்ளுருகி
யின்பக் கடலாழ்ந் தன்றாழ்ந்தான்
குன்றா விறையோன் தயைக்கடலுட்
குளித்தான் நீந்திக் கரைகாணான்
சென்றா னென்ன மெய்ம்மறந்தே
சிறிதோர் கால்நின் றுணர்ந்தவைவான்
நின்றார் கண்டுள் ளதிசயிப்ப
நிகரில் அன்பால் மீண்டுரைப்பான். 11

அறந்தாய் தந்தை சுற்றமுமற்
றனைத்தும் நீயே கதிநீயே
பிறந்தா யுலகிற் குயிரன்னாய்
பிறந்தெம் துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறைதீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தா யிவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ. 12

**என்று பலவாறு தொழுதான். அவ்வளவில்,**

துஞ்சுந் தன்மைத் தெவ்வுலகும்
துணையற் றாள்வோ ளிவைகேட்டு
விஞ்சுந் தன்மைத் தோங்கவளன்
விளைவே விளக்கும் விழிவிழித்தான்
எஞ்சுந் தன்மை யுதவியதா
னியைந்த தன்மை யுலகுணர்த்த
அஞ்சுந் தன்மைத் தெதிரிறைஞ்சும்
அமரர்க் குரையா தேவலிட்டான். 13

## குறிப்புரை

இதனை இயற்றிய ஆசிரியர் பெஸ்கி (**constantius Pschi**) என்னும் **வீர மா முனிவர்.** இவர் ஐரோப்பியர்; வட இத்தாலி தேசத்தில் வெனிஸ் நகருக்கு மேற்கேயுள்ள காஷ்டிக் கிளியானி (**castiglione**) என்னுமூரில் கி. பி. **1680**-ஆம் ஆண்டில் பிறந்தவர்; **2709**-ம் ஆண்டில் இந்தியாவிற்குக் கிறிஸ்தவ மத போதகராக வந்தவர். இவர் தமிழ் நாட்டில் மதுரை முதலிய நகரங்களில் தங்கித் தமிழ்ப்புலவர்களை யடுத்துத் தமிழ் மொழியைக் கற்றுச் சிறந்த புலவராகத் திகழ்ந்தார். தமிழ் மொழியில் அகராதி, சில இலக்கணங்கள், பிரபந்தங்கள், வசன நூல்கள் முதலிய பல நூல்களை யியற்றியுள்ளார். கீழ்வரும் பாடம். தேம்பவாணி முதற்காண்டம் 10-வது மகவருள் படலத்தைச் சேர்ந்தவை, இதில் ஏசுநாதர் அவதாரம் கூறப்பட்டுள்ளது. தேம்பவாணியில் காவியச் சுவைகள் மலிந்துள்ளன.

**1.** இலயை மூன்றினும் - பிள்ளையைப் பெறுமுன்னும் பெறும்போதும், பெற்றபின்னும் (முக்காலத்தும்.) இழிவில் கன்னி - அழியாத கன்னி; அலகுஇல்- அளவில்லாத. மூன்றினுள் - கர்த்தாவாகிய மூன்றுட்களில்; அவர்கள் பிதா - மகன் - பரிசுத்த ஆவி (**The Holy Ghost**) எனப்படுவர்.

**2.** வைகல் - நாள்; (தேதி) ஐ + ஐந்து - இருபத்தைந்து. ஆதிநாள் - ஞாயிற்றுக் கிழமை. ஆதிநாதன் - இயேசுவை. நல்கினள் - பெற்றுள்.

**3.** சொக்கு - அழகு; வடிவு. அளா உரு-(அளாவு) கலந்த உருவம், (விகாரம்). மிக்கயேல் ஒடு காபிரியேல்-(**Michael and Gabriel**) தேவ தூதர்.

**4.** பொதிர்....மணம்போல் - தான் குறை படாமல் பூ முகை வாசனை விட்டது போல். மகவு. பிள்ளை; (உரிச்சொல்) ஈன்றனள் - (கன்னியழியாமல்) பெற்றனள். சேயோடு - குமரன் கண்களோடு. கண்கள் கலந்த கால் - தனது கண்கள் கலந்து பார்த்த போது.
வெம்சுடர்காண் - சூரியனைக்கண்ட. முழு இந்து என - பூரண சந்திரன் போல; இன்ப முகத்தோடு விளங்கினன் என்க.

**5.** காந்தள் - கார்த்திகைப் பூ; செங்காந்தள். ஏந்த - ஏந்திய; உயர்ந்த. நிவி-தடவி. ஆய்ந்த நூல்கடந்த ஆர் உணர்வு-ஆராய்ந் தடைந்த கல்விகளைக் கடந்த ஞானம். கடந்த + ஆர் + உணர்வு-கடந்தார்; உணர்வு, தொகுத்தல்.

**6.** தெருள் - தெளிவு. திரை-கடல், (ஆகுபெயர்) உண்டி - உண்டிகளை. பொழிந்தனன் - தருகின்ற நாதன், மருள் சுரந்த வடுக்கெட - மயக்கத்தால் வந்த பாவங்களை நீக்குதற்கு, அருள் சுரந்தமுது - அன்பு நிறைந்த பால், தாய்தர நுங்கினன் - (தாய்கொடுக்க) உண்டான்.

**7.** இந்துநேர் - பிறையை ஒத்த, மீன்கண் - விண்மீன் போன்றகண், இண்டை நேர்முகம் -தாமரை மலரை ஒத்த முகம். நீர்மையால் - தன்மையால், கந்தம் நேர் தளிர் தாது நேர் உடல்- வாசனை பொருந்திய குளிர்ந்த மகரந்தத்தை யுடைய (மலரை) ஒத்த உடம்பு, நாதன் - தேவகுமாரன், கன்னி - கன்னித்தாயின், அம்புயச் சந்த நேரிய கையால் - சிறந்த கைத்தாமரையின் மேல், தாம

நேரிய முத்து என - ஒளிவிட்ட முத்தின் சாயலாக, சூசைதேர நோக்கினன் என்க, சிந்து - இன்பக்கடல், மூழ்கு - மூழ்கி, தேற-உண்மை தெளிய, (தாமரை முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்று.)

**8.** நோக்கில் நிட்டலும் -கண்ணில் ஒற்றி, நீர் - கண்ணீர், நாண் மலர் - புதிய மலர் போன்ற, கழல்- திருவடி, (ஆகுபெயர்). சென்னி- சிரசு, சித்தம் முற்றிலும். - மனம் ஓங்கி

**9.** அரும்பும் தென்காலே-வீசுகின்ற தென்றல் காற்றே! துளித்த-துளியாய், நானத்தேன் - வாசனைத் தேன், அரும்பு - வீசு, விளித்த - அழைத்த, நாகு மாங்குயில்காள் - இளங் குயில்காள் (நாகு இளமைப் பெயர்) தேன்பாவை - தேன்போன்ற இசைப்பாட்டை, நான்களிய - நான்களிகூர, அன்பு துயிலா - அன்பு குறையாமல்.

**10.** கண்பட்டு - கண்மூடி, கருணைகரன் - கிருபைக்கு இடமானவன். உளையும் - வருந்தும், பொருவா - பிறங்கிராத, மண்பட்டு - பூவுலகத்தைச் சூழ்ந்து, மருள் - மயங்குகின்ற, எண்பட்டு - எண்ண முடியாது மேம்பட்டு.

**11.** ஆழ்ந்தன்று ஆழ்ந்தான் - அமிழ்ந்து முழுகினன். இறையோன் - கர்த்தர், குன்றுத் தயைக் கடல் - குறையாத கிருபாசாகரம், சிறிது ஓர்க்கால் - சிறிது நேரம்.

**12.** துறந்தாய் - அகற்றினய், துகள் பூட்டிய - (நாங்கள் செய்த) பாவமானது அடைத்த, விட்டு உயர் வாயில் - மோட்ச வாசலை, திறன் செய்து - வல்லமையும் தயையுங்கொண்டு; இவற்றை யாவரும் அறிய இரங்கிச் செய்யாயோ என்க.

**13.** துஞ்சும் தன்மைத்து - தூங்கின தன்மையைக் காட்டி; விஞ்சும் தன்மைத்து வளன் ஓங்க - மிகவும் [சூசை] மனதிலோங்க, விழிவிழித்தான் - தன் திருவிழியை விழித்தான், ஒருவன் சிறுமையைக் கொண்ட தன்மைக்கு உதவியைச் செய்யும் கர்த்தா, இங்கே பிறந்தமைந்த செய்தியை உலகத்தார்க்கு உணர்த்த அஞ்சி எதிரே வணங்கி நின்றவராகிய வானவர்க்கு வாக்கினல் உரையாமல் அதனை உணர்த்த மனத்துள் நின்று ஏவினன் என்பது பின்னிரண்டடியின் பொருள்.

# IV. சிறுநூல்கள்

## 1. திருவேங்கடத்தந்தாதி

திருவேங்கடத்து நிலைபெற்று நின்றன சிற்றன்னையால்
தருவேங் கடத்துத் தரைமே னடந்தன தாழ்பிறப்பின்
உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன உற்றழைக்க
வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றேடின மால்கழலே. 1

கடமா மலையின் மருப்பொசித் தாய்க்குக் கவிநடத்தத்
தடமா மலைவற்ற வாளிதொட் டாய்க்கென் றனிநெஞ்சமே
வடமா மலையுந் திருப்பாற் கடலும்மை குந்தமும்போல்
இடமா மலைவற்று நின்றுங் கிடந்து மிருப்பதற்கே. 2

## 2. திருவெங்கைக் கலம்பகம்.

### மறம்

விற்றதார் ? கலை பாதியோடு
வனத்திலே யழவிட்டதார் ?
வெஞ்சிறைப் புகவிட்டதார் ?
துகிலுரிய விட்டு விழித்ததார் ?
உற்ற தாரமும் வேண்டுமென்றினி
மன்னர் பெண்கொள வொண்ணுமோ ?
உமியடா மணமென்ற வாய்கிழித்
தோலை காற்றி லுருட்டடா
வெற்றியாகிய முத்தி தந்தருள்
வெங்கை மாநகர் வேடர்யாம் !
விமலரானவர் எமை யடுத்தினி
தெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர் தமக்கு யாமொரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம்;
பெற்ற பிள்ளை கொடுப்பரோ விதென்
பேய் பிடித்திடு தூதரே ! 1

## 3. கலைசைச் சிலேடை வெண்பா

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே—மேவும்
அரிவையம்(பு) ஆகத்தான் அரண்ஒருமூன்(று) எய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம். 1

ஆயச் சிருர்படமும் ஆர்க்குங் கடாசலமுங்
காயத் திரியுங் கலைசையே—நேயமுடன்
பைத்த பதஞ்சலியார் பார்த்(து)உருகப் பொற்பொதுவில்
வைத்த பதஞ்சலியார் வாழ்வு. 2

—தொட்டிக்கலை, சுப்பிரமணிய முனிவர்.

## 4. சோணசைல மாலை

தோற்றிடும் பிறவி எனுங்கடல் வீழ்ந்து
துயர்ப்பிணி எனும்அலை அலைப்பக்
கூற்(று)எனும் முதலை விழுங்குமுன் நினது
குரைகழற் கரைபுக விடுப்பாய்;
ஏற்றிடும் விளக்கின் வேறுபட்(டு)அகத்தின்
இருளெலாந் தன்பெயர் ஒருகால்
சாற்றினும் ஒழிக்கும் விளக்(கு)எனும் சோண
சைலனே! கைலைநா யகனே!

—சிவப்பிரகாச சுவாமிகள்.

## 5. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

### வருகைப் பருவம்

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக! வருகவே!

—குமரகுருபர சுவாமிகள்.

## குறிப்புரை

**1. திருவேங்கடத் தந்தாதி:-** திருவேங்கடம் என்னும் திருப்பதி பற்றிய அந்தாதி. திருவேங்கடம்: மலை நாட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று; சித்தூர்ச் சில்லாவில் உள்ளது. திரு, அடைமொழி. வேங்கடம் - திருப்பதி. அந்தாதி:- முன்செய்யுளின் இறுதியைப் பின் செய்யுள் முதலாகப் பெற்று வருமாறு பாடப்படும் ஒரு வகைப் பிரபந்தம்.

இதனை இயற்றியவர் பிள்ளைப் பெருமாளையங்கார் என்பவர். இவருக்கு அழகிய மணவாள தாசர் என்னும் பெயரும் உண்டு. இவர் வைணவ சமயத்தினர்: கவிபாடுவதில் வல்லவர்; முதுமையில் திருவரங்கப் பெருமானுக்குத் தொண்டு செய்து கொண்டு திருவரங்கத்தில் வாழ்ந்தவர். இவர் காலம் 700-ஆண்டுகட்கு முன் என்பர்.

(1) சிற்றன்னை - சிறிய தாய்; கைகேயி. தரு - மரம். வேம் - தீயப் பெற்ற. கடம் - பாலைவனம். தத்து - ஆபத்து. கடம் - மதம். தும்பி - யானை.

(2) கடமா - யானை. மருப்பு - கொம்பு, தந்தம். ஒசித்தல் - ஒடித்தல். கவி - வானர சேனை. தடம் ஆம் அலை-பெரிய கடல். வட மாமலை - திருவேங்கட மலை. அலைவற்று - அசைவில்லாமல்.

**2. திருவெங்கைக் கலம்பகம்:-** வெங்கணூர் என்னும் திருப்பதி பற்றிய கலம்பகம் என்னும் பிரபந்தம், வெங்கை -வெங்கணூர் என்பதன் மரூஉ. வெங்கணூர் என்பது விருத்தாசலத்திற்கு அருகில் உள்ளதொரு சிவத்தலம். கலம்பகம் - புயவகுப்பு. தவம், மறம், குறம் முதலிய பதினெட்டு உறுப்புக்களையுடையதாகப் பலவகைப் பாக்களால் அந்தாதியாகப் பாடப்படுவதொரு பிரபந்தம்.

இதனைப் பாடியவர் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் பிறந்தது **காஞ்சிபுரம்**; வாழ்ந்திருந்தது **துறை மங்கலம்**. இவர் 'கற்பனைக்களஞ்சியம்' என்று கற்றுவல்ல புலவர்களால் போற்றப் படுகிறார். இவரது காலம் ஏறக்குறைய 200—ஆண்டுகளுக்கு முன் என்று தெரிகிறது.

மறம் - மறம் என்பது மறச்சாதி மகள் ஒருத்தியை ஒரு மன்னன் மணம் பேசி விடுப்ப, அச்செய்தியை அறிவிக்கும் திருமுகத்தைக் கொண்டு வரும் தூதனை நோக்கி, மறக்குடித் தலைவன் சினந்து கூறுவது.

கலை - ஆடை. தாரம் - மனைவி. விமலர் - சிவபெருமான். மிச்சில் - எச்சில். வேலர் - முருகப்பெருமான். பெண் - வள்ளி.

### 3. கலைசைச் சிலேடை வெண்பா

கலைசை யென்னும் ஊரைப் பற்றிச் சிலேடை வெண்பாக்களால் சிறப்பித்துக் கூறும் நூல், கலைசைச் சிலேடை வெண்பா. கலைசை - **தொட்டிக்கலை** யென்பதன் மரூஉ. சிலேடை - பல பொருள்படுவது.

இதனை இயற்றியவர் **தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்** என்பவர். இவர் தொண்டை மண்டலத்திலுள்ள தொட்டிக்கலை என்னும் ஊரில் பிறந்தவர்; சைவ சமயத்தவர்; கவிபாடுவதில் வல்லமையுள்ளவர். இவரது காலம் ஏறக்குறைய **140**-ஆண்டுகளுக்கு முன் என்று தெரிகிறது.

**4.** பாவலர் - புலவர். காவலர் - அரசர்; கா அலர் - சோலையிலுள்ள பூக்கள். அரி - திருமால். வை - கூர்மை. அம்பு - பாணம்.

## 4. சோணசைல மாலை

சோணசைலத்தைப் பற்றிய மாலையாகிய நூல், சோணசைல மாலை; சோண சைலம் - திருவண்ணாமலை. சோணம் - சிவப்பு. சைலம் - மலை. **மாலை** என்பது, மலர்களால் தொடுக்கப்பெற்ற பூமாலை போலச் சொற்களால் தொடுக்கப் பெற்ற பாமாலைப் பிரபந்தம் என்று பொருள் படும்; மாலை: உவமையாகு பெயர்.

இதனை இயற்றியவர் **சிவப்பிரகாச சுவாமிகள்.**

**8.** குரை - ஒலிக்கிறது. கழல் - திருவடி; தானியாகுபெயர். குரை கழல்: வினைத்தொகை. பிறவி எனும் கடல், பிணி எனும் அலை, கூற்றெனும் முதலை - உருவகங்கள். அகத்தின் இருள் -மனத்தினை மறைக்கும் ஆணவ முதலிய இருட் கூட்டம். சோணசைலம் - திருவண்ணாமலை.

## 5. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

**மீ**னாட்சியம்மை பிள்ளைத்தமிழைப் பாடியவர் குமரகுருபர சுவாமிகள்.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் உள்ள **96** வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகும். இதுஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப் படும். ஒருபுலவன் தான் பாடக்கருதிய தெய்வத்தையோ தலைவரையோ குழந்தையாகக் கருதிப்பாடுங்கால், குழந்தையின் வளர்ச்சி முறைக்கேற்பப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப்பாடுவர். அவை: காப்பு, செங்கீரை, தால், சப்பாணி முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன. இவை ஆண் பாலுக்குரியவை. பெண் பாலுக்கு ஈற்றிலுள்ள மூன்று பருவங்களும் அம்மானை, நீராடல், ஊசல் என்று வரும்.

குமரகுருபரர் ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் ஸ்ரீவை குண்டம் என்று வழங்கும் கைலாச புரத்தில் சைவ வேளாள மரபில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமியம்மைக்கும் பிள்ளையாய்த் தோன்றினர். திருச்செந்தூர் முருகக் கடவுளின் அருள் பெற்றவர். மாசிலாமணி தேசிகரால் ஞான உபதேசம் பெற்றார். இவர் காசியில் ஒரு மடம் கட்டியிருக்கிறார். இவர் இயற்றிய வேறு நூல்கள்: மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை, மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம், சிதம்பரச் செய்யுட் கோவை, நீதிநெறி விளக்கம் முதலியன.

## அருஞ் சொற்கள்

அகந்தை - நான் என்னும் ஆணவம். தொழும்பர் - தொண்டர். பொருப்பு மலை. எறிதரங்கம்—மோதுகின்ற அலை(கடல்). மதுகரம் - வண்டு. குழற்காடு - கூந்தல் தொகுதி.

## V. வருணனை

### சூரியன் தோற்றம்

பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையின்
பொருள்வயினிற் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலிவகலுங் கற்பி னூர்போல்
புண்டரிகம் முகமலர அகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம். 1

### சூரியன் மறைவு

வரவு நேர்ந்தழைப் பவரென ஆம்பல்வாய் மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழவுயிர்த் துணைவர்
பிரிவு நோக்கினர் எனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகடல் நீந்த. 2

### சந்திரன் தோற்றம்

பெருந்திண் ணெடுமால் வரைநிறுவிப்
பிணித்த பாம்பின் மணித்தாம்பின்
விரிந்த திவலை உதிர்ந்தமணி
விசும்பின் மீனின் மேல்விளங்க
வருந்த அமரர் கலக்கியநா
ளமுது நிறைந்த பொற்கலசம்
இருந்த் திடைவந் தெழுந்ததென
எழுந்த தாழி வெண்டிங்கள். 3

### நிலாக்கற்றை

வண்ண மாலைக் கைபரப்பி
யுலகை வளைந்த விருளெல்லா
முண்ண வெண்ணித் தண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை

விண்ணு மண்ணும் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால். 4

## பொருநையாறு

கல்லெனக் கரைந்து வீழும்
கடும்புனற் குழவி கானத்
தொல்லெனத் தவழ்ந்து தீம்பா
லூண்டொரீஇத் திண்டோள் மள்ளர்
செல்லெனத் தெழிக்கும் பம்பைத்
தீங்குரல் செவிவாய்த் தேக்கி
மெல்லெனக் காலிற் போகிப்
பணைதொறும் விளையாட் டெய்தி. 5

பன்மலர் மாலை வேய்ந்து
பானுரைப் போர்வை போர்த்துத்
தென்மலைத் தேய்ந்த சாந்த
மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி யாரந் தாங்கிப்
பொருநையாங் கன்னி முந்நீர்த்
தன்மகிழ் கிழவ னாகந்
தழீஇக்கொடு கலந்த தன்றே. 6

## மருதநிலம்

ஆறுபாய் அரவம் மள்ளர்
ஆலைபாய் அமலை ஆலைச்
சாறுபாய் ஓசை வேலை
சங்குவாய் பொங்கும் ஓதை
ஏறுபாய் தமரம் நீரில்
எருமைபாய் துழனி இன்ன
மாறுமா றாகித் தம்மில்
மயங்குமா மருத வேலி. 7

### யானைப் படை

கடல்க ளைச்சொரி மலையுள வெனஇரு
கடத டத்திடை பொழிமத முடையன,
கனல்வி ளைப்பன முகிலுள வெனவிழி
கனல்சி னத்தன கரியொடு பரிகளின்
உடல்பி ளப்பன பிறைசில உளஎன
உயர்ம ருப்பின உலகுகள் குலைதர
உருமி டிப்பன வடஅனல் உளஎன
ஒலிமு ழக்கின கடகரி மிடையவே. 8

### குதிரைப்படை

முனைக ளொட்டுநர் முனைகளை இடறுவ
முடியின் முத்தினை விளைபுகழ் எனநிலம்
முதுகில் வித்துவ நிலமுறு துகளற
முகில்மி திப்பன முகில்விடு துளியொடு
கனைக டல்திரை நிரையென விரைவொடு
கடலி டத்தினை வலமிடம் வருவன
கடலி டத்(து)இறும் இடியென அடியிடு
கவன மிக்கன கதழ்பரி கடுகவே. 9

### தேர்ப் படை

இருநி லத்திடர் உடைபடும் உருளன
இருபு டைச்சிற(கு) உடையன முனைபெறின்
எதிர்ப றப்பன விடுநுக மொடுகடி(து)
இவுளி முற்படின் இதுபரி பவமெனும்
ஒருநி னைப்பினை யுடையன வினையன
உயர்செய் மொட்டொடு நறுமலர் என அவிழ்(வு)
ஒழித ரச்செரு உறுபுனல் உமிழ்வன
உலக ளப்பன இரதமும் விரவவே. 10

### காலாட்படை

அலகில் வெற்றியும் உரிமையும் இவையென
அவய வத்தினில் எழுதிய அறிகுறி
அவையெ னப்பல வடுநிரை யுடையவர்
அடிபி றக்கிடில் அமரர்தம் உலகொ(டு)இவ்

உலகு கைப்படும் எனினும(து) ஒழிபவர்
உடலெ மக்(கு)ஒரு சுமையென முனிபவர்
உயிரை விற்(று)உறு புகழ்கொள உழல்பவர்
ஒருவர் ஒப்பவர் படைஞர்கள் மிடையவே. 11

## அருஞ்சொற்பொருள்

**1.** இது கம்பராமாயணச் செய்யுள். வருங்குறி - வருங்காலத்தின் அடையாளம். தெரியல் - மலை. கொழுநர் - கணவர். மெலிவு - வருத்தம். புண்டரிகம் - தாமரை. பொய்கை - தடாகம்.

**2.** இச்செய்யுள் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் உள்ளது. வரவு - வருகை. நேர்ந்து - விரும்பி. ஆம்பல் - அல்லிமலர். கான்று - தோற்றுவித்து. நகைத்து - புன்முறுவல் செய்து. கள்நீர் பில்கு - தேனாகிய நீர் பெருகும். நிரை - வரிசை.

**3.** இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் கம்பராமாயணம் பாலகாண்டத்தில் உள்ளவை. பெருந்திண் நெடுமால் வரை - சிறந்த வலிய உயர்ந்த பெரிய மந்தரமலை. பாம்பு - வாசுகி என்னும் பாம்பு. மணித்தாம்பு - முறுக்கேறிய கயிறு. திவலை - நீர்த்துளி. உதிர்ந்த மணி - சிதறிய இரத்தினங்கள். கலக்கிய நாள் - கடைந்த காலத்து. இச்செய்யுளில் தற்குறிப்பேற்றவணி வந்துள்ளது.

**4.** வண்ணமாலை கைபரப்பி - செந்நிறமுள்ள மாலைப் பொழுதாகிய தனது செங்கையை விரித்து நீட்டி. பண்ணை - வயல்.

**5.** இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்து உள்ளவை. கல் என - கல் என்று ஒலித்து. கடும்புனல் குழவி - கடிய வேகத்தினையுடைய பொருநை நீராகிய குழந்தை. கானத்து - முல்லை நிலத்தில். செல் எனத் தெழிக்கும் - மேகம் போல் உரப்புகின்ற. செவிவாய்த் தேக்கி - என்பது உபசாரம். பண்ணை - மகளிர் விளையாட்டிடம். 'பணை' என இடைக்குறைந்து நின்றது.

**6.** சாந்தம் மான்மதச்சேறு பூசி - சந்தனத்தோடு கலந்த கஸ்தூரிக் குழம்பை அணிந்து. தன் கிழவன் எனக் கூட்டுக. ஆகம் - மார்பு.

**7.** இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் கம்பராமாயணம் பாலகாண்டத்தில் உள்ளவை. அரவம், அமலை, ஓசை, ஓதை, தமரம், துழனி என்ற சொற்கள் வந்தது **பொருட் பின்வரு நிலையணியாம்.** மருதம் வேலி - மருத நிலத்து எல்லை. ஆலை - கரும்பாலை. சாறு - கரும்புச்சாறு. ஏறுபாய் தமரம் - எருதுகள் ஒன்றோடொன்று பொருது தாக்குதலால் உண்டாகும் ஓசை. மயங்கும் - கலந்திருக்கும்.

**8, 9, 10, 11** ஆகிய நான்கு செய்யுட்களும் சயங்கொண்டாரால் இயற்றப்பட்ட கலிங்கத்துப் பரணியிலிருந்து எடுக்கப்பட்டன.

**8.** தடகடம் - பெரிய கன்னம். உரும் - இடி, வட அனல் - வடவா முகாக்கினி, மிடைய - நெருங்க.

**9.** முனைகள் ஒட்டினர் - யுத்தகளத்திற்குச் சபதம் செய்து கொண்டு வந்த வீரர்கள், நிரை - வரிசை, கவனம் - வேகம், கதழ் - கோபம், பரி - குதிரை.

**10.** உருள் - சக்கரம், இவுளி - குதிரை, பரிபவம் - அவமானம், மொட்டு கொடிஞ்சி, திடர் - மேடு.

**11.** அறிகுறி - அடையாளம், அமரர் - தேவர்.

# VI தனிப்பாடல்கள்

## காளமேகப் புலவர்

### கங்கை குடத்திலே அடங்கும்

விண்ணுக் கடங்காமல், வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கைஅடங் கும். 1

## சிலேடை

### ஆமணக்குக்கும் யானைக்கும்

முத்திருக்கும்; கொம்பசைக்கும்; மூரித்தண் டேந்திவரும்;
கொத்திருக்கும்; நேரே குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கும் மால்யானை யாம். 2

கம்பமத கடகளிற்றான் தில்லை வாழுங்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தார்; அயில்வேல் செங்கை
உடையஅறு முகவனுங்கண் ணீரா றானான்;
பம்புசுடர்க் கண்ணனுமோ நஞ்சுண் டான்; மால்
பயமடைந்தான்; உமையும் உடல் பாதி யானாள்;
அம்புவியைப் படைத்திடுவ தவமதே யென்று
அயனும் அன்னம் இறங்காமல் அலைகின் றானே. 3

## இராமச்சந்திர கவிராயர்

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்,
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்,
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் 'அப்பா!
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும், வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும், கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த புண்ணும்,
பார்' என்றே காட்டிநின்றான் பரமன் தானே. 4

## குறிப்புரை

காளமேகப் புலவர் 'வசைபாடக் காளமேகம்' எனச் சிறப்பிக்கப்பட்டவர். இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள நாதன் கோயில் எனப்படும் நந்திபுரத்தின் கண் வேதியர் குலத்தில் **450** ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். இவர் இயற்பெயர் வரதர். சமயம் சைவம்.

## அருஞ் சொற்கள்

**1.** மகுடம் என்றதைப் பிரித்துக் குடத்திலே என்று ,

**2.** முத்து - ஆமணக்கின் முத்து; தந்தத்தினின்! முத்து. தண்டு - தாள், சேனை. தேம் - மணம். மால் - பெருமை.

**3.** கம்பம் - கட்டுத்தறி. களிறு - ஆண்யானை. தில்லை - சிதம்பரம். கணபதி - கணங்களுக்குத்தலைவர், விழித்திருந்தார் - இமையாத கண்ணை யுடையவராதலின், அயில் - கூர்மை.

கண்ணீராறுனன்—கண் + நீர் + ஆறு + ஆனன்;

கண் + ஈர் + ஆறு + ஆனன் என்றும் பிரித்துக் கொள்க.

பம்பல் - பொலிதல். சுடர்க் கண்ணன் - சிவன். பால் - பாற்கடல். உமை உடல் பாதியாயது - அம்மை அப்பன் வடிவம்.

**4.** இராமச்சந்திர கவிராயர் தொண்டை மண்டலத்துள்ள இராச நல்லூரிற் பிறந்தவர். இற்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர்.

சங்கரன் - உயிர்கட்கு இன்பத்தைச் செய்பவன்.

## புதுமைப் பாமலர்

### செல்வச் சிறுமியர் களிப்பு

பாகமாகச் செய்த பண்டமுண்போம்—நன்றாய்ப்
பக்குவம் வந்த பழங்களுண்போம்
தாகமா றுல்பல பானகமும்—தாயார்
தந்திட உண்டு மகிழ்ந்திடுவோம். 1

காலத்துக் கேற்ற உடையணிவோம்—வாசம்
கட்டிய சந்தனம் பூசிடுவோம்
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து—மலர்
கூந்தலிற் சூட்டி அழகு செய்வோம். 2

பந்துகள் ஆடிப் பழகிடுவோம்—கழல்
பாங்கியர் தம்மொடும் ஆடிடுவோம்
சந்தமெழக் கும்மி பாடிடுவோம்—சுற்றிச்
சப்பாணி கொட்டிச் சிரித்திடுவோம். 3

### ஏழைச் சிறுமியர் மனப்புழுக்கம்

நல்லபண் டங்களைக் கண்டறியோம்—ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம்—பசி
ஆற வழியின்றி வாடிடுவோம். 4

அன்னப்பால் காணுத ஏழைகட்கு—நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்குமம்மா
என்னப்பா யாம்படும் பாட்டையெல்லாம்—சென்று
யாரிடம் சொல்லி அழுவோமம்மா. 5

இட்டெலி ஐந்தாறு தின்றேமென்பீர்—நீங்கள்
ஏதும் கருணை யிலீரோ அம்மா
பட்டினி யாக இறந்திடினும்---நாங்கள்
பாவம் பழிசெய்ய மாட்டோமம்மா. 6

### குறிப்புரை

இதனைப் பாடியவர் புலவர், கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள். இவர் திருவிதாங்கூர் நாட்டில் உள்ள சுசீந்திரத்தை அடுத்த தேரூர் என்னும் சிற்றூரில் கி. பி. **1876**-ம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர் சிவதாணுப் பிள்ளை, ஆதிலக்ஷ்மியம்மாள்.

# உரை நடை

## 1. வஞ்சினங் கூறல்

(வித்துவான் டாக்டர். மு. வரதராசன் அவர்கள், M.O.L., Ph.D.)

தன்னைத் தான் காத்துக்கொள்ள உதவுவது அறிவு. திண்ணிய கால்களும் வாலும் கூரிய நகங்களும் பற்களும் வலிய அலகும் சிறகும் கொண்டு விலங்குகளும் பறவைகளும் தற்காப்புத் தேடி வாழ்கின்றன. மனிதனுக்கு அத்துணைக் கருவிகள் இன்றியே அஞ்சாது வாழும் வாழ்வு வாய்த்துள்ளது எனின், அஃது அவன் பெற்றுள்ள அறிவின் சிறப்பே ஆகும். தற்காப்புக் கருவியாக அறிவு பயன்படுமளவு கால் வால் முதலியவற்றின் திண்மையும் நகம் பல் முதலியவற்றின் கூர்மையும் பயன்படுதல் இல்லை. அறிவு என்ற ஒரு சிறந்த கருவி வாய்ப்பின், ஏனையவை வேண்டா; வேண்டிய பிற கருவிகளைப் படைத்துக் கொள்ளும் ஆற்றல் அறிவிற்கு உண்டு. ஆதலின் அறிவே சிறந்த தற்காப்புக் கருவி.

"அறி(வு) அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்"

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்உடைய ரேனும் இலர்"

என்னும் திருக்குறள் மொழிகளைக் காண்க.

தற்காப்புக் கருவியாக உள்ள அறிவிற்கும் பகையாக ஒன்று உள்ளது. அதுதான் சினம் என்பது. தன்னைத் தான் காப்பது வேண்டுமேல் அறிவு வேண்டும். சினம் ஆகாது. தன்னைத்தான் அழிக்க வல்லது—கொல்ல வல்லது சினம்.

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக் கால்
தன்னையே கொல்லும் சினம்."

அறிவை அழிக்கவல்ல நஞ்சும் பித்தும் நெடிது நிலைப்பன; கள்ளும் சினமும் தோன்றி அழிவன. நிற்கும் நேரத்தால் வேறுபாடே அன்றிப் பிறிது இல்லை. ஆயினும் பித்து, நஞ்சு, கள் இவற்றிலும் கொடுமை

மிக்கது—விரைந்து கெடுக்கும் ஆற்றல் மிக்கது சினம், ஆதலின் "தன்னைத்தான் காக்கின் சினம் காக்க' என ஒன்றையே எடுத்தோது வாராயினர் சான்றோர்.

நன்னலத்தால் சினம் எழுவதே பெரும்பான்மை. பொது நலம் கருதியும் சிறுபான்மை சினம் எழுதல் உண்டு. தீமையே விளைக்கும் இயல்பினதாகிய சினம் பொதுநலம் கருதியபோது நன்மையும் விளைத்தல் உண்டு. கொள்ளைக்கூட்டத்தார் ஓர் ஊரிற் புகுந்து கொள்ளையடித்து மக்களை வருத்தியது கேட்ட அவ்வூர்த் தலைவன் ஒருவன், வருந்தி நெட்டுயிர்த்துச் சோர்வுற்று நிற்பானோ? உள்ளங் கொதித்துப் பதைப்பான்; அவன் சினம் பொதுநலம் கருதியதே அன்றோ? "அக்கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்து என் கையால் பிணித்துக் கொணர்ந்து தலை தறித்திடும் வரையில் உண்ணேன்; உறங்கேன் அவ்வாறு செய்யேனாயின், என் தலைமை இழப்பேனாக; இழந்து யானும் கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவனாகுக" எனச் சினந்து கூறுவான். அச் சினம் அவனுடைய பொதுநல நோக்கிற்கு ஆற்றல் அளித்து அவனைக் கடமை செய்யத் தூண்டும்; இத்தகைய சினங்கொண்டு கூறும் கூற்று வஞ்சினம் எனப்படும்.

தமிழ்நாட்டு வேந்தர் பொதுநலம் மிக்க தலைவர்; நாடாளும் கடமையில் ஆர்வம் மிக்கவர்; அவரது ஆட்சிக்கு எவரேனும் இடையூறு செய்ய முயன்றாலும் அல்லது முயல்வதாகக் கேள்வி யுற்றாலும் கொதித்தெழுந்து வஞ்சினம் மொழிந்துள்ளனர். அவ்வாறு மொழிந்த வஞ்சினக் கூற்றுக்கள் சில பாட்டு வடிவுபெற்று வாழ்கின்றன. பாடியவர் வேந்தரே. பூவேந்தரும் பாவேந்தராக விளங்கிய காலம் அது. அப் பாடல்களுள் சிறந்து நின்றுள்ளன மூன்று. ஒன்று, ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் பாட்டு; மற்றொன்று, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடியது; இன்னொன்று, சோழன் நலங்கிள்ளி பாடியது.

இப் பெருவேந்தர் பாடிய பாடல்களில் அவர்கொண்ட பேருணர்வு விளங்குகின்றது. இவ் வஞ்சினப் பாடல்கள் உள்ளத்து உணர்வு மிகுதியைப் புலப்படுத்தும் பாடல்களாக இருத்தலால், பழங்காலத் தலைவரது உணர்வின் பெற்றியை அறிந்து அவர் தம் நாகரிகச் சிறப்பினைத் தெளிதற்கு மிக உதவுகின்றன. அவற்றை இங்கு ஆராய்வாம்.

மூன்று பாடல்களிலும் பகைபரசர் செய்த சூழ்ச்சியும், இகழ்ந்து கூறிய சிறு சொல்லும் குறித்து நாடாளும் தலைவர் சினம் கொண்டமை அறியப்படுகின்றது. அவ்வாறு வெல்லச் சூழ்ந்து இகழ்ந்து சிறுசொல் சொல்லிய அரசரைப் புறங்காணல் வேண்டும்; போர்க்களத்தே சிறைபத் தாக்கி முரசும் குடையும் கைப்பற்றல் வேண்டும்; அவர் வருந்தப் பொருதல் வேண்டும் என்று உள்ளக் கொதிப்புடன் மொழிந் துள்ளனர். இப் பகுதிகள் அவர்தம் ஊக்க மிகுதியைப் புலப்படுத்து கின்றன. ஆனால் இவற்றைத் தொடர்ந்து, "இவ்வாறு செய்யாவிடின் இன்ன இன்ன நிலைமை எய்துவேனாக" எனக் கூறும் பகுதிகளே அவர்தம் உணர்வின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

ஒருவன் தன் நண்பனுக்கு ஓர் உதவி செய்யக் கருதி, "உனக்கு நான் இந்த உதவி செய்யத் தவறினால், பெற்ற தாய்க்கு உதவாத பேதை என்று என்னை நினைத்துக்கொள்" என்று கூறுவானாயின், அவன் அதனினும் மிகுதியாக, அவன் தன்னை ஈன்ற அன்னையிடம் கொண் டுள்ள உணர்வு நன்கு விளங்கும். அன்றியும், வஞ்சினங் கூறுங் கால், மேற்கொண்ட கடமையிலும் பெரியதும் சிறந்ததுமாகிய தன் உள்ளக் கோட்பாட்டினைக் கூறுதலே வழக்கம். நண்பனுக்கு உதவி செய்யும் கடப்பாடு சிறந்ததாயினும் ஈன்ற தாயைப் போற்றுதல் மிகச் சிறந்தது என்று கருதியே அவன் இவ்வாறு கூறுவான். இது போன்றே வஞ்சினம் கூறிய வேந்தர்கள் பகைவரோடு பொருது அவரைப் புறங் கண்டு வெல்லுதல் சிறந்த கடமையாகக் கொண்டனர்; ஆயினும் அதனைக் கூறுமிடத்து அவர் உடன் மொழிந்த கடமைகள் அதனினும் உயர்ந்தவை, மிகச் சிறந்தவை, உள்ளத்தே நெடுங்காலம் உணர்வாய்க் கிடந்தவை என்பது அறிதல் வேண்டும். அவ்வாறு அவர்கள் மொழிந்த கோட்பாடுகளாவன,

……………… சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக;
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக; மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பின்
பொய்யா யாணர் மையல் கோமான்
மாவனும் மன்எயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்

வெஞ்சின இயக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பின் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

(புறம். 71)

இது பூதப் பாண்டியன் உயர்ந்த கோட்பாடுகளாக உணர்ந்து கூறிய வற்றைத் தெரிவிக்கும் பகுதி.

......................பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்(கு) ஈயா இன்மையான் உறவே.

(புறம். 72)

இது பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய னது உள்ளத்தே மிக்கிருந்த உணர்வுகள் இன்ன இன்ன எனக் காட்டும் பகுதி.

......................பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே.

(புறம். 73)

இது சோழன் நலங்கிள்ளி தன் உயிரினும் சிறந்ததாய் உள்ளத்தே வைத்துப் போற்றிய கொள்கையினை விளக்கும் பகுதி யாகும்.

தன் வாழ்க்கைத் துணையாய் விளங்கிய அரசியைப் பிரியாது வாழும் வாழ்வைப் பூதப் பாண்டியன் விழுமிதாகப் போற்றினான். வஞ்சினங் கூறியபோது, துணைவியின் அருகே இருந்து கூறியதாகத் தெரிகின்றது. "சிறந்த பேரமர் உண்கண் இவளினும் பிரிக" என்ற

தொடரில் இவள் எனச் சுட்டியுள்ளான். அவளைப் பிரிந்து பிற ரொடுங் கூடி வாழுங் கற்பில்லா வாழ்வு, பகைவர்க்குத் தோற்றிடும் தோல்வியினும் கொடியது என்று உணர்த்தியுள்ளான்.

செங்கோல் செலுத்தும் அரசன் பொறுப்பு மிகப் பெரிது தன் கையில் செவ்விய கோலை ஏந்துவதனால் அது தீர்வதில்லை; தன்னிடம் நேரில் வந்த வழக்குகளை நேர்மையாத் தீர்க்கு மளவில் பொறுப்பு நிற்பதில்லை; முறை செய்யும் அவையோர் அறம் திரியாதவராக விளங்கு மாறு காத்தல் வேண்டும்; திறனில்லாதவன் ஒருவனை அங்கே அமைத்து அவனால் முறையும் நேர்மையும் கெடாதவாறு அரசன் காத்திடல் வேண்டும். சுருங்கக் கூறின், தன் நாட்டின்கண் அவைக் களந்தோறும் அறமும் திறமும் மிக்கோரை நிலைநாட்டிச் செங்கோல் செலுத்தல்வேண்டும். இதுவே இரண்டாவதாக வேந்தன் உணர்ந்து கூறியது.

புலமை மிக்கவரும் ஆண்மை மிக்கவருமாகிய தக்கோரைப் பூதப் பாண்டியன் கண்போன்ற நண்புடைய கேளிராகக் கொண்டு அவரோடு கூடி இனிது களித்து மகிழ்ந்து நகைமிக்கு வாழும் வாழ்வை உடையவன். அத்தகைய தக்கோருடைய கூட்டுறவு பெறு தற்கரியது என்று உணர்ந்த வேந்தன் அதனை இழக்குமாறு இழைத் திடும் தவறு மிக்க கொடியது எனவும் உணர்ந்தான்; பகைவர்க்குத் தோற்றலினும் கொடியது என உணர்ந்தே அதனையும் உரைத்தான், அவ்வுறவைப் பாராட்ட முயன்ற வேந்தன் பூதப் பாண்டியன்—புலவர் பூதப்பாண்டியனார்—பாவேந்தனாயிருந்து தொடுத்த சொற்களைக் கருதுக. தான் பெற்ற இன்பப் பேற்றை இனிமை, களிப்பு, மகிழ்ச்சி, நகை என்னும் பல சொற்களாலும் கூறல் அமையாது என உணர்ந்து, "இன்களிமகிழ்நகை" என ஒரு தொடராய்க் கூறிப் போற்றினன்.

அரசன் நினைவில் தன் குடிப்பிறப்பும் வந்துற்றது. பாண்டியர் குடி உலகங் காத்தலில் பெரும் புகழ்பெற்ற நற்குடி. அக்குடியில் பிறந்ததே பெறற்கரிய பேறு என எண்ணிவந்த பூதப் பாண்டியன், வஞ்சினங் கூறியபோது அதனை நினைந்து. "பகைவர்க்குத் தோற்பின் அக் குடிப்பிறப்பை இழந்தவனாய், பிறநாட்டுக் கொடுங்கோல் மன்னர் குடியில் பிறப்பேனாக" எனக் கொதித்தான். எனவே, அவன் உள் ளத்தே ஓங்கியிருந்த இவ்வுணர்வின் உண்மைநிலை தெளிவாகின்றது.

பாண்டியர் குடியில் என் முன்னோர் எல்லோரும் மக்களைச் செவ்விய முறையில் ஓம்பிக்காத்து ஒப்பற்ற புகழ் படைத்தனர். அவர் மரபில் பிறந்த யானும் அவர்போல் மன்பதை காத்து மாண்புற வேண்டும். அதுவே இக்குடியில் பிறந்ததன் பயன். காக்கும் காவலே என் கடமை அதனை நிறைவேற்றவே யான் பாண்டியனாய்ப் பிறந்தேன்" என்னும் இச் சீரிய உணர்வு விளங்குகின்றது.

துணைவியோடு அன்பு கலந்து வாழும் கற்பு வாழ்க்கை, தக்கோரை நாட்டி அறம் காக்கும் அறிவு உடைமை, நல்லோருடன் கூடி இனிது மகிழும் உறவு உடைமை, காக்கும் மாண்பு உடைமை இந் நான்கையும் பூதப் பாண்டியன் சிறந்தனவாக உணர்ந்து தன் வாழ்க்கையில் போற்றியது தெளிவாகின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே, பூதப்பாண்டியன் ஈற்றில் குறித்ததையே முதலில் கூறினான். "என் காவலில் உள்ள குடிகள் கலங்கிக் கண்ணீர் சொரிந்து வாடி என்னைக் கொடியவன் என்று பழி தூற்றும் நிலைமை உறுக" எனச் சீறினான். இவ் வஞ்சினக் கூற்றில், பகைவர்க்கு அஞ்சாத பெருமகன்—பாண்டியவேந்தன்—குடிகளின் கண்ணீருக்கு அஞ்சும் அச்சம் புலனாகின்றது. வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாது நின்ற நெஞ்சம் கண்ணீர்ப் படைக்கு அஞ்சும் பெருந்தகைமை பெற்றிருந்தது. இளமையிலேயே தான் ஒருவனாய்ப் பெரும்பகைவர் எழுவரை வென்ற வீரன்—"புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க, ஒரு தான் ஆகிப் பொருதுகளத் தடலே . . . . . இன்றி னோங்கோ கேளலம்" எனப் புலவர் வியந்து போற்ற இளமையிலேயே பெரும்போர் கண்டு வென்ற வீரன்—கண்ணீர்ப் படைக்கு இவ்வாறு அஞ்சிய நிலையே நாகரிகம். "என்னை எள்ளிச் சிறுசொல் சொல்லிய வேந்தரைத் தாக்கி வெல்லேனாயின், என் குடிகள் கண்ணீர் பரப்புங் கொடுங்கோலன் ஆவேனாக" என்னும் கருத்தில், அவன் ஆட்சி முறையைப் பற்றிக் கொண்டிருந்த உயர்ந்த கொள்கை தெளிவாகின்றது.

இரண்டாவதாக, நெடுஞ்செழியன் போற்றியது புலவரால் எய்தும் புகழ் நிலையே. தன் நாடு வாழவேண்டுமானால்—சிறக்கவேண்டுமானால், புலவர் அதனைப் பாடவேண்டும் என்று விழைந்த வேந்தன் ஆதலின் இவ்வாறு குறித்தான். இது மூட நம்பிக்கையின்பாற்பட்டதன்று. புலவர் பொருள் பெறக்கருதிக் கண்ட நாட்டையெல்லாம்

புகழ்ந்து பாடுவார் அல்லர். அவ்வாறு புகழ்ந்து பாடும் புலவர் அக் காலத்தில் இருந்திருப்பின், "புலவர் பாடவேண்டுமே" என்று நெடுஞ் செழியன் இத்துணைக் கவலையோடு வருந்த வேண்டியதில்லை. ஆதலின் அரசன் விழைந்தது மூட நம்பிக்கை அன்று. புலவர் பாடவேண்டு மாயின், அன்பும் அறமும் செறிந்த நாடாக அது விளங்க வேண்டும்; வெறு மாடமாளிகைகள் கண்டோ, பொன்னும் மணியும் கண்டோ, புலவர் ஒரு நாட்டைப் புகழ்ந்து பாடார் என்பதை நன்கு உணர்ந்தே நெடுஞ்செழியன் இவ்வாறு கூறினன். "புலவர் பாடல் நிரம்புமாறு, அன்பும் அறமும் விளங்க வல்ல நாடாக இதனை நான் ஓம்பி அப் பெருமக்களை வரவேற்கவேண்டும்" என்பதே அரசன் உள்ளத்தே ததும்பிய உணர்வு. அதனை உணர்த்தியபோது, தான் அறிந்த புலவர் பலரையும் நினைந்து அவருள் தலைவராய் விளங்கிய மாங்குடி மருத னரைக் குறித்துப் போற்றுவாராயினன். ஓங்கிய சிறப்பு, உயர்ந்த கேள்வி, உலகமொடு நிலைஇய புகழ் இவற்றைப் புலவரிடம் காணும் பேறு பெற்றவன் இவ்வரசன்.

அரசனைச் சார்ந்துவாழும் மாந்தர் பலர் உண்டு. அவர் அனை வரையும் புரத்தல் அரசன் கடமை. அரசனுக்கு அவர் பல்லாற்றானும் உதவி செய்து அரணாக அமைந்திருப்பர். அரசன் கைம்மாறாக அவர்க்குச் செய்யவேண்டுவது ஒன்றே; அஃதாவது அவர்க்குத் துன்பம் தோன்றாவாறு பொருள் உதவிப் புரத்தல் ஆகும். வெளி நாட்டிலிருந்தோ தன்னாட்டில் பல ஊர்களிலிருந்தோ, அவனிடம் வந்து பொருள் இரப்போரும் உண்டு. அவரால் அரசர்க்கு உதவி யாதும் இல்லை எனினும் வயிறு படைத்த இனம் என்ற ஒரே எண்ணங்கொண்டு அவரையுங் காத்தல் அரசனுக்குக் கடமை. புரக்கப்படுவோரும் இரப் போருமாகிய அவ்விரு திறத்தாரும் அரசனை நம்பி வாழ்ந்திடுவோர். அரசன்பால் அன்பும் அருளும் இல்லையானால், புரக்கப்படுவோர் வாழ்வும் இரப்போர் வாழ்வும் முடிந்திடும்; அழியும். ஆதலின், அரசன் அவரைக் காத்தலைக் கடமையாகக் கொள்வான். நெடுஞ்செழியன் அவ்விரு சாராரும் துன்பம் உறாதவாறு காத்தவன். "பகைவரை வெல்லவில்லை யானல், என்னால் புரக்கப்படுவோர் துன்பப்படுமாறும், இரப்போருக்கு இல்லை என்னுமாறும் என்கடமையினின்றும் தவறு வேனாக" எனக் குறித்தான். இரப்பவர்க்கு ஈயவொட்டாத நிலை யினையே வறுமை என்றும் கருதியுரைத்தான். அரச வாழ்வே ஆயினும் ஈகை இல்லையேல் நல்குரவே—இன்மையே; என்னும் கருத்து விழு

மிது. நெடுஞ்செழியன் நயனுடையான் என்பது இதனால் தெளிவாகின்றது.

"நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு."

குடிகள் கண்ணீர்விட்டு வருந்தாதவாறு இனிது காத்தல், புலவர் பாடுமாறு நாட்டைச் சிறப்புறச் செய்தல், தன்னைச் சார்ந்தவர் வறுமையைக் களைந்து வாழ்வித்தல்—இம் மூன்றும் நெடுஞ் செழியன் நெஞ்சத்தே மிக்கிருந்த கோட்பாடுகள்.

சோழன் நலங்கிள்ளி, தன் காதல் துணைவியாகிய அரசியோடு வாழும் கற்பு நெறி தவறாதவன். "என் உள்ளம் எள்ளிய மடவோன் வருந்துமாறு பொருது வெல்லேனாயின், என் வாழ்வு பரத்தையர்பால் உறுவதாக; உள்ளத்துக் காதல் கொள்ளாத அப் பொதுமகளிரின் பொருந்தாக் கூட்டத்தினால் கெடுவேனாகை" என்று அவன் மொழிந்த வஞ்சினக் கூற்று, அவனுடைய திண்ணிய கற்பைத் தெளிவாக்குகின்றது. நாட்டை ஆளும் தலைவன் ஒருவன் எத்துணைக் கருத்தாய்த் தன் ஒழுக்கங் காக்க முயன்று வந்தான் என்பதையும், செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்க்கு ஒழுக்க வரையறை வேண்டா என்று தடுமாறிக் கெடுவார் போக்கையும் ஒப்பிட வல்லார்க்கு நாகரிகத்தின் உண்மைத் தோற்றம் புலனாகும். ஒழுக்கம் ஒன்றே விழுப்பம் தருவது; அதுவே இனிய உயிரினும் சிறந்ததாய் ஓம்பப்படுவது. அரசனாயினும் பிறன் எவனாயினும் இவ்வரம்பு கடந்தானாயின், தானும் கெடுவான்; உலகமும் கெடுப்பான்.

எளியவன் ஒழுக்கக் கேடு, அவனுக்கும் அவனைச் சார்ந்த சிலர்க்கும் மட்டும் கேடு விளைக்கலாம். ஆயின், அரிய தலைவன் ஒழுக்கம் கெடுவானாயின், அதனால் அவன் கேடுறுதல் போல அவன் தலைமையின்கீழ் வாழும் உலகமும் கேடுறும். ஆதலின் உலகை ஓம்பும் தலைமக்களே ஒழுக்கந் தவறாது வாழும் கடப்பாடு மிக்கவர். அவர் கெடின், உலகம் கெடும். அவர் நல்வழி ஒழுகின், அவரைப் பின்பற்றி உலகம் திருந்தும். அன்றியும், தன் நெஞ்சத்தை நல்வழி விடுத்து அல்வழித் தடுத்துக் காக்க இயலாத ஒருவன் தலைவனாயின், அவன் தலைமையால் பயன் இல்லை. தன் நெஞ்சத்தைக் காக்கும் வலியற்றவன் உலகைக் காக்க முன் வருதல் நன்மை கருதியது

ஆகுமோ? அன்பைப் பெருக்கி அருளை விளக்கும் காதல் வாழ்வில் பண்பட்டுச் சான்றோனாக வாழாது தவறியவன் தலைமை உலகைக் கெடுக்குமே அன்றிக் காக்குமோ?

சோழன் நலங்கிள்ளி தான் தக்க நல்வழியை விளங்கி உலகைக் காக்க விரும்பிய பேருணர்விற்கு அடிப்படையாய் விளங்கியது அவன் ஒழுக்கத்தைப் போற்றிய விழுப்பமே. ஆதலாலேயே பண்பட்ட காதல் வாழ்வைப் போற்றுவானாகி "யான் சோர்ந்து தோற்பேனாயின் ஒழுக்கங் கெட்டுப் பொதுமகளிர்பால் வாழ்ந்து இழிவு உறுவேனாக," என்று தன் உறுதியை விளக்கினான்.

ஆனால், இந் நாகரிக வாழ்வினைப் போற்றவும் அறியாத நிலை பிற் காலத்தே வந்துற்றது. அரசன் எனின் மகளிர் பலருடன் கூடி வாழும் செல்வம் பெற்றவன் என்னும் கருத்துப் படுமாறு பாடல்கள் பல்கின; நாடகங்களும் பரவின. அவ்வளவிலும் நின்றிடாமல், அரசன் தேர் முதலியவற்றின் மீது ஊர்ந்து உலா வருங்கால், அவனைக் கண்டு பொதுமகளிர் பற்பலர் காமுறுவதாகவும் தூது விடுப்பதாகவும் நூல் களும் எழுதப்பட்டுத் தனிப் பெயரும் அமைப்பு முறையும் பெறலா யின. உலா என்னும் நூல்வகை இவ்வாறு அமைந்ததே யாகும். தம்மை நாடாத ஒருவனை—நாடக் கூசும் நெஞ்சினனை ஒரு தலைவனைப் பரத் தையர் கண்டு காமுறுதல் ஒல்லுமோ? அவ்வாறு கற்பனையாக நூல் எழுதினும் அத்தலைவன் அதனைக் கேட்கவும் இணங்குவனோ? ஆயின், அத்தகைய நூல்களைப் புலவர் பாடவும் புரவலர் பரிசில் வழங்கவும் காலம் மாறியது என்னென்பது! சோழன் நலங்கிள்ளி பாடிய இப் பொன்மொழியை அந் நூல்களின் முகப்பில் அமைத்திடின், அவற்றைக் கற்பவர் தலைமை சான்ற நலங்கிள்ளியின் உள்ளத்து உயர்வையும் அஃது இல்லாது (நூலுலகில்) உலா வந்து மயங்கிய அரசர் பெருமை யையும் ஒப்பிட்டு நோக்குவர்; அந்நோக்கங் கொண்டு சிறந்தது இன்னது என நன்கு அறியும் வாய்ப்பும் வாய்க்கப் பெறுவர்.

தமிழ் நாட்டை ஆண்ட பெருவேந்தர் பாடிய பாடல்களுள் தம் உள்ளத்து உணர்வுமிக்கு வஞ்சினம் கூறிய கூற்றுக்களாக உள்ளவை இம் மூன்றுமாம். அவை சினம் பொங்கக் கூறியவை ஆயினும் உண்மைக் கொள்கைகளை உணர்வு ததும்ப விளக்குவன. அவ்வாறு வஞ்சினம் மொழிதலாக அமைந்த பாடல்களில் நாகரிக நெஞ்சினராகிய அவ்வேந்தர், காதல் மிக்க கற்பு வாழ்வினையும், அறம் திறம்பாச் செங்

கோல் முறையினையும், குடிகளின் கண்ணீர் காணுக் காவல் நெறியினையும், புலவர் விரும்ப வாழும் பெரு நிலையினையும், வறுமையைத் துரத்தி வெல்லும் வண்மையினையும் சிறந்தனவாகக் கொண்டு போற்றிய சிறப்பெல்லாம் தெளிவாகின்றது.

## பயிற்சி

I பொருள் எழுதுக:--

திண்மை, அற்றம், நெட்டுயிர்த்து, பெற்றி, கடப்பாடு, புலமை, புரத்தல்,

II வாக்கியங்களில் அமைக்க:-

அத்துணை, உள்ளத்து உணர்வு, சிறுசொல் சொல்லுதல், புறங்கண்டு வெல்லுதல், கற்பில்லா வாழ்வு, பெறற்கரிய பேறு, கைம்மாறுக..

III விடை எழுதுக:-

1. அறிவு எவ்வாறு சிறந்த தற்காப்புக் கருவியாகும்?
2. "தன்னைத்தான் காக்கின் சினம் காக்க" எனச் சான்றோர் கூறக் காரணம் யாது?
3. வஞ்சினம் என்பது யாது?
4. வஞ்சினம் கூறுங்கால் தன் உள்ளக் கோட்பாட்டினைக் கூறுதலே வழக்கம் என்பதற்கு ஒரு சான்று கூறு.
5. பூதப்பாண்டியனுடைய உயர்ந்த கோட்பாடுகள் எவை?
6. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனது கோட்பாடுகள் எவை?
7. வஞ்சினம் கூறும் பாடல்களால் நாம் அறிவன யாவை?

# 2. இசையின் பெருமை

(மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்)

## இசையின் பெருமை

இசையினுடைய பெருமையை ஓர்ந்தே முத்தமிழுள் இசைத் தமிழை நடுநாயகமாக வைத்திருக்கிறார்கள். இயற்றமிழாகிய இலக்கிய நூல்கள் செய்யுட்களாலியன்றன. அவை இசையுடனேயே பயிலப்பட வேண்டும். நாடகத்திற்கு இசை இன்றியமையாததென்பதை யாவரும் அறிவர். இலக்கிய இலக்கணப் பயிற்சி, ஆங்கிலம் தெலுங்கு முதலிய பாஷைப் பயிற்சி முதலியன உடையாரால் அவ்வக்கலைகளில் அறிவுடையாரையே இன்புறுத்த முடியும். ஆனால் இசையோ கற்றார், கல்லார், விலங்கினங்கள், பறவைகள் முதலிய எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருதிணை யுயிர்களும் இசையின் வயப்பட்டு நின்றனவென்று பல இடங்களிற் கூறப் பட்டுள்ளன.

காட்டிலுள்ள புஷ்பங்கள் மலரும் பருவத்தில் வண்டுகள் சென்று அவற்றிலிருந்து ஊதும். மலரும் பருவத்திலிருக்கும் பேரரும்பு 'போது' என்று தமிழிற் கூறப்படும். காட்டிலுள்ள முனிவர் முதலியவர்களும் பிறரும் சிலசில போதுகள் மலர்வதால் காலத்தை யறிந்து வந்தனர். மலர்தலாலும் குவிதலாலும் போதினைப் புலப்படுத்துதலின் போதெனப் பெயர் பெற்றன. அப்போதுகளில் வண்டுகள் இசைபாட அவை மலரும்; 'முல்லை, வரி வண்டுதே வாய் நெகிழ்ந்தனவே' என்பது குறுந்தொகை. பாம்பு இசைக்கு அடங்கும்என்றும் கூறப்படுகிறது. மதம் பிடித்து அலையும் யானைகளும் இசையினால் அடங்கிவிடும். பரிக்கோல் குத்துக்கோல் முதலிய ஆயுதங்களாலும் அடக்க முடியாத ஒரு யானை வீணையிசைக்கு அடங்கிவிடுவது உவமானமாகக் 'காழ் வரை நில்லாக் கடுங்களிற்றொருத்தல் யாழ்வரைத் தங்கியாங்கு' எனக் கலித்தொகை யென்ற சங்கநூலிற் கூறப்பட்டிருககிறது. இன்னும் 'அணியிழை மகளிரும் யானையும் வணக்கும், மணியொலி வீணையும்' என்று பெருங்கதையிலும், 'மகரயாழ் வல்லமைந்த னொருவனைக் கண்ட மத்தப், புகர்முகக் களிற்றின்' என்று மேருமந்தர புராணத்திலும் சொல்லப்பட்டிருக் கின்றது. அகநானூற்றில் குறிஞ்சி நிலத்தில் தினைக்கொல்லையைக் காக்

கும் ஒரு பெண் தெள்ளிய சுனையில் நீராடிப் பரணின் மேல் நின்று இனிய காற்றில் தன் கூந்தலை ஆற்றிக்கொண்டு மிகுந்த களிப்புடன் அந் நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கையில் தினைக் கதிரை யுண்பதற்காக அங்கே வந்த யானையொன்று அந்தப் பெண்ணின் இசையில் மயங்கிக் கதிரையுண்ணுமல் தான் கொண்ட பெரும் பசியையும் மறந்து மயங்கி நின்றதாக ஒரு செய்தி காணப்படு கின்றது. இந்தக் காட்சியையே,

> "ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
> பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
> குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
> படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
> மறம்புகன் மழகளி றுறங்கும் நாடன்"

என் அடிகள் காட்டுகின்றன.

உதயணன் சரித்திரமாகிய பெருங்கதையில், உதயணன் நளகிரி யென்ற மதம்பிடித்த யானையை வீணை வாசித்து அடக்கி அதன்மேல் ஏறி ஆயுதங்களை அதையே எடுத்துத்தர ஏவி ஊர்ந்தானென்று ஒரு செய்தி காணப்படுகிறது. இசையினால் வணக்கப்பட்ட அந்த யானை உதயணனுக்கு அடங்கி நின்றதை ஆசிரியர் கூறுகையில் 'குருவினி டத்து மிகுந்த பக்தியுள்ள ஒரு சிஷ்யன் போல யானை படிந்தது என்னும் பொருள்பட "வீணை கெழீஇ வீதியி னடப்ப, ஆணையாசாற் கடியுறை செய்யு, மாணிபோல மதக்களிறு படிய', என்று பாடியுள் ளார். இதே நிகழ்ச்சியைக் கூறும் உதயண குமார காவியம் செய்த வர், இங்கே, தந்தையைக்கண்டு வணங்கும் ஓர் உத்தம புத்திரனை உவமை காட்டுகிறார்.

பசுக்கள் இசையின் வயப்படுகின்றன என்பதைக் கண்ணன் கதை விளக்கும். பசுக்களைப் பல இடங்களிலும் மேயவிட்டு விளை யாடிக்கொண்டிருந்த கண்ணபிரான் மாலைக்காலத்திற் பசுக்களை ஆயர் பாடிக்கு ஓட்டிச்செல்ல வேறு ஏதும் செய்வதில்லை. குழலையெடுத்து ஊதுவார். உடனே பல இடங்களிலும் நின்று மேய்ந்த பசுக்களெல்லாம் ஒருங்கே திரண்டு கண்ணன்பால் வந்து சேரும், இதனையே "ஆக்கு வித்தார்குழ லாலரங் கேசர்,' என்று திவ்ய கவி ஒருவர் சுருக்கமாக விளக்குகின்றார். பெரிய புராணத்திற் கூறப்படும் நாயன்மார்களுள் ஆனாய நாயனாருடைய புராணத்தும் இத்தகைய செய்திகள் காணப்படு கின்றன.

அசுணமா வென்பதொரு விலங்குண்டு. அதைப் பறவை யென்பாருமுளர். அது இசையையறிவதிற் சிறந்தது. இனிய இசையைக் கேட்டுக் களிக்கும்; இன்னா விசையைக் கேட்பின் மூர்ச்சையுற்று விழுந்துவிடும். அதன் தன்மையை, "இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ் செத்து, இருங்கல் விடரளை யசுண மோர்க்கும்" என்ற அகநானூற்றடிகளாலும், "இன்னளிக்குரல் கேட்ட வசுணமா, வன்ன ளாய் மகிழ் வெய்துவித்தாள்" என்ற சிந்தாமணிப் பாட்டாலும், "யாழ், நறை யடுத்த வசுணநன் மாச்செவிப், பறையடித்தது போலும்" என்ற கம்பர் வாக்காலும் அறியலாம். அதனைப் பிடிக்க வெண்ணினவர்கள் செடி மறைவிலிருந்து யாழ் வாசிப்பார்களென்றும், அதன் இசையைக் கேட்டு அருகுற்று அசுணம் களிக்கு மென்றும், அப்பொழுது அதனைப் பிடித்துக் கொள்வார்களென்றும் தெரிகிறது. அவர்கள் கை, முதலில் யாழின் இசையால் அசுணத்திற்கு இன்பத்தை விளைவித்துப் பின்பு அதன் உயிருக்கே அழிவு சூழ்வதை நற்றிணையில் உவமையாக எடுத்தாள்கையில் "அசுணம் கொல்பவர் கைபோனன்றும், இன்பமுந் துன்பமு முடைத்தே" என்று ஒரு நல்லிசைப் புலவர் பாடியிருக்கிறார்.

கின்னரப் பறவையும் இத்தன்மையதே. வண்டி மாடு, ஏற்றக் காளைகள் முதலியவற்றை இயக்கும்பொழுது தெம்மாங்கு முதலிய பாடல்களைப் பாடுவதையும், அவைகளைக் கேட்டு அவ் விலங்குகள் தம் வேலையை வருத்தமின்றி அமைதியாகச் செய்து வருவதையும் இன்றும் காண்கிறோம். அந்தத் தெம்மாங்கு தேன்பாங்கு போலும். குழந்தைகள் அன்னையின் இனிய தாலாட்டிசையைக் கேட்டு அழுகை யோய்ந்து உறங்குவதை எவர்தாம் அறியார்?

வன்மனக் கள்வரும் தம் கொடுஞ் செயலை மறந்து இசை வயத்தராவர். பழைய நூலில் இத்தகைய செய்தியொன்று காணப்படுகிறது. பாலை நிலத்தில் ஆறலை கள்வர் வழி வருவோர் பொருளையும் உயிரையும் கவர்வார்; பொருளில்லை யெனினும் வாளால் வெட்டப்பட்ட உடம்பு துள்ளுவதைப் பார்த்தேனும் களிக்கக் கொலை செய்வர். அவர்முன் பொருநர்கள் பாலைப்பண்ணைப் பாடினால் அக் கள்வர் தம் கையிலுள்ள ஆயுதங்களை நழுவவிட்டுத் தங்கள் வன்றொழிலை மறந்து அன்புற்று இசைக்கு உருகுவார்களாம். இதனையே "ஆறலை கள்வர் படைவிட வருளின், மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை" என்ற அடிகள் உணர்த்துகின்றன.

சீவக சிந்தாமணியின் கதா நாயகனை சீவகன் ஆண்களைப் பார்ப்பது மில்லை என்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின் பால் ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று இசைபாடி அவளை வசப்படுத்தினன்; அவன் இசையைக் கேட்ட பெண்கள் யாவரும் வேடன், பறவைபோற் கத்தும் ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே கூட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப்போல விரைந்து வந்தனர் என்று கவி அவ்விடத்தில் வர்ணிக்கிறார்.

"கள்ள மூப்பி னந்தணன் கனிந்த கீத விதியே
வள்ளி வென்ற நுண்ணிடை மழை மலர்த் தடங்கணும்
புள்ளு வர்ம திர்மகன் புணர்ந்த வோசை பெற்றுகன்
றுள்ளம் வைத்த மாமயிற் றழாத்தி னோடி யெய்தினர்"

என்பது அந்தப் பாட்டு.

இசை, பிறரைத் தன் வயப்படுத்தும் என்னும்போது என்னுடைய இளமைக் காலத்தில் நடந்த ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. என்னுடைய தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடத்துச் சிறப்புப்பாயிரம் பெறப் பல புலவர்கள் முயற்சி செய்வதுண்டு. சிறந்த சங்கீத வித்வானும் மிக்க சிவ பக்தரும் ஆகிய கோபாலகிருஷ்ண பாரதியவர்கள் தாம் இயற்றிய நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் கொடுத்துதவுமாறு பிள்ளையவர்களை வேண்டினார்கள். அதிற் பிழைகள் காணப்பட்டமையாற் சிறப்புப்பாயிரம் தரமாட்டேனென்று பிள்ளையவர்கள் மறுத்து விட்டார்கள். மறுத்தும் பாரதியார் முயன்றே வந்தார். ஒரு நாள் பிள்ளையவர்கள் உள்ளே படுத்திருக்கும்போது அவர்கள் வீட்டிற்கு வந்த பாரதியவர்கள் பிள்ளையவர்கள் நித்திரை செய்கிறார்களென்பதையறிந்து எழுப்புதல் கூடாதென்றெண்ணிப் புறத்தேயிருந்து தமது நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள "கனகசபாபதி தரிசனம் ஒருநாள் கண்டாற் கலிதீரும்" என்ற கீர்த்தனையை இனிமையாக மெல்லப் பாடிக் கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் விழித்துக்கொண்டு எழுந்து கீர்த்தனை முழுவதும் பாடும் வரையில் இருந்து கேட்டு மனமுருகி "இதற்குச் சிறப்புப்பாயிரம் கொடாமலிருப்பது முறையன்று" என்று உடனே வந்து சிறப்புப்பாயிரமொன்றை வழங்கினார்கள்.

ஈசுவரனே இசையின் வடிவமாயிருப்பவரென்றும், இசையிற் பிரியம் உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஏழிசையா யிசைப்பயனாய்," "இயலவன் இசையவன்," "இயலிசைப்

பொருள்களாகி," "ஏழிசையை" எனவரும் தேவாரப் பகுதிகள் பரமசிவன் இசையுருவினரென்பதைத் தெரிவிக்கின்றன. இசையிலுள்ள விருப்பத்தினால் அனவரதமும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டுக் கம்பளர், அசுவதரர் என்ற இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் காதிற் குழையாக வைத்தருளியிருக்கின்றனரென்று நூல்கள் கூறும். "இசை விரும்பும் கூத்தனார்" என்பதும் இறைவனுடைய இசை விருப்பத்தை வெளியிடும். ஈசுவரன் கையில் வீணையை வைத்து வாசித்தின்புறுவதாகப் பெரியோர் கூறுவர். "எம் மிறை வீணைவாசிக்குமே" என்பது தேவாரம். இத்தகைய மூர்த்தி "வீணாதட்சிணா மூர்த்தி" என்று வழங்கப்படுவார். கண்ணன் வேய்ங்குழலோடும் விளங்கி இசை பரப்பியதை அறியாதார் யார்? கடவுளாலேயே விரும்பப்படுவது இசை யென்பதை இன்னும் விரிக்கிற் பெருகும்.

இசை, கடவுளுக்கு விருப்பமாவதறிந்து பல தொண்டர்கள் இசையாலேயே இறைவனை வழிபட்டிருக்கின்றார்கள். நாயன்மார்களுள் ஆனாய நாயனார், திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பரமனையே பாடுவார் முதலியவர்கள் இசையால் வழிபட்டுப் பேறு பெற்றோர்கள். ஆனாய நாயனார், ஸ்ரீ பஞ்சாட்சரத்தைக் குழலில் இசைத்து ஊதி வழிபட்டார். மதுரையில் பாணபத்திரரென்னும் அடியார் யாழ் வாசித்துச் சிவபெருமானை வணங்கி வந்தார். அவருக்காகச் சோமசுந்தரக் கடவுள் விறகு சுமந்து இசை பாடி அவருடைய எதிரியைப் பயந்தோடச் செய்தார். திருமாலடியார்களுள்ளும் திருப்பாணாழ்வார், நம்பாடுவான் முதலியோர் இசை பாடித் திருமாலை வழிபட்டவர்கள். இன்ன வகையார் இன்னும் பலருளர். கடவுளைத் துதிக்கும் தோத்திரங்களெல்லாம் இசைப் பாட்டாக அமைந்து விளங்குதல் கடவுளுக்கு இசையிலுள்ள விருப்பத்தை விளக்குமன்றோ? தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்யப் பிரபந்தமும், திருப்புகழும், தத்துவராயர் பாடுதுறை முதலியனவும் இசைப் பாட்டுகளாலாகிய நூல்களே. தேவாரங்களின் பண்கள், முன் கூறப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் பரம்பரையில் வந்த ஒருவரால் அமைக்கப்பட்டன. அது போலவே திவ்யப் பிரபந்தத்திற்கும் பண்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றைத் தெரிவிக்கும் நூல் தேவகானமென்பர். எல்லாரும் அனுசந்திக்க இயலுமாறு ஒருவித இசையுடன் இப்பொழுது பயிலப்பட்டு வரினும் திவ்யப் பிரபந்தத்தில் ஒவ்வொரு

பதிகத்திற்குமுரிய பண்கள் முன்பு அமைந்திருந்திருக்க வேண்டும். இப்பொழுது பதிக்கப்பட்டுள்ள திவ்யப் பிரபந்தப் புத்தகங்களிற் பல வித ராகங்களைப் பொருத்தமின்றிப் பிணைத்திருக்கின்றார்கள். ஒரே பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிற்கும் தனித்தனி இராகங்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. அவ்வாறு இருப்பது முறையன்று.

**பயிற்சி**

I. பொருள் எழுதுக:—

ஓர்ந்தே, பரிக்கோல், ஒருத்தல், மகரயாழ், வார்மயிர், கொடிச்சி, குரல், மாணி, அளை.

II. வாக்கியங்களில் அமைக்க:—

மேன்மேலும், இன்றியமையாது, இசையின் வயப்பட்டு.

III. விடை எழுதுக:—

1. இசை எல்லா உயிர்க்கும் இன்பம் நல்கும் என்பதனை விளக்குக.
2. 'போது' எனப்படுவது எது? ஏன் அதற்கு அப்பெயர் வந்தது?
3. யானையை அடக்குவதற்குரிய ஆயுதங்கள் எவை?
4. இசைக்கு யானையும் வசப்படும் என்பதனைப் புலப்படுத்த அகநானூற்றில் கூறப்பட்ட செய்தி யாது?
5. ஆக்குவித்தார்குழ லாலரங் கேசர்,—இதனை விளக்குக.
6. அசுணமா எவ்வாறு பிடிக்கப்பட்டது?
7. தெம்மாங்கு பாடக் காரணம் யாது?
8. வன்மனக் கள்வரும் இசை வயத்தராவர் என்பதனை விளக்குக.
9. சுரமஞ்சரியின் விரதம் யாது?
10. நந்தன் சரித்திரக் கீர்த்தனத்திற்குச் சிறப்புப்பாயிரம் எவ்வாறு கிடைத்தது?
11. கடவுளாலேயே விரும்பப்படுவது இசை என்று சொல்லக் காரணம் யாது?
12. இசையால் வழிபட்டுப் பேறு பெற்ற நாயன்மார்கள் யாவர்?

# 3. கலைகள்

(திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள்)

பழைய இந்தியாவில் வாழ்வுக்குரிய கலைகள் படிப்படியே பிறந்தன; வளர்ந்தன, அவை தொகையில் ஆறு; வகையில் அறுபத்து நான்கு. அவைகளிற் சிறந்து விளங்குவன சிலவே. அறம் மலிந்த அரசாட்சியில்—வறுமையற்ற ஆட்சிமுறையில் – நல்ல கலைகள் அறிஞர் வாயிலாகப் பிறத்தல் இயல்பு. முற்கால இந்தியாவிலேயே சிறந்த கலைகள் தோன்றின எனில், நம் நாட்டின் தொன்மையை என்னென்று புகழ்வது ?

காவியக்கலையில் இந்தியா பேர் பெற்றது. இந்தியக் காவியங்கள் மலையெனக் குவிந்துகிடக்கின்றன; கடலெனப் பரந்து கிடக்கின்றன. பழைய இந்தியக் கவிகள் இயற்கைச் சூழலிடை வாழ்ந்தவர்கள். அவர் தம் புலன்களும் மனமும் இயற்கையில் ஒன்றி இயற்கை வண்ணமானவை. இயற்கை மனத்தினின்றுஞ் சுரக்கும் எண்ணங்கள் இயற்கைப் பாக்களாகுமல்லவோ ? இயற்கைப் படங்களே இயற்கைப் பாக்கள் என்பன.

இந்திய காவியத்துக்குக் கால்கொண்டவர் எவர்? வால்மீகி என்று இந்தியக் காவிய உலகங் கூறும். வால்மீகி இயற்கைப் பசுமையிடை—பறவைப் பாட்டிடை—வாழ்ந்தவர்; வளர்ந்தவர். அவரே பழைய இந்தியக் காவியத் தந்தை. அவர் வாயினின்றும் பிறந்த இராமாயணம், காவிய உலகுக்கோர் இலக்கியம்; வாழ்வுக்கோர் எடுத்துக்காட்டு; பழம் பாரதத்தின் உயிரோவியம்; இயற்கை நிலையம்; அறத்தின் உறையுள்; சரித்திரக் கூடம்; காதலின் காதல்; வீரத்தின் வீரம்; வால்மீகியின் வழிவழித் தோன்றிய சேய்கள் பல.

கி. மு. ஆறும் நூற்றுண்டிலேயே பதினைந்து வித இலக்கணங்கள் தோன்றின என்று சரித்திர ஆசிரியன்மார் கூறுகின்றனர். அந் நூற்றுண்டுக்கு முன்னரே பல நற்காவியங்கள் நாட்டிடை மலிந்திருத்தல் வேண்டும். இந்தியக் காவிய உலகின் தொன்மையை என்னென்று கூறுவது !

ஓவியம் காவியம் போன்றதே. காவியமும் இயற்கைப் படம் ஓவியமும் இயற்கைப் படம்; இயற்கைக் கூறுகள் காவியத்தில் ஒரு விதமாகவும் ஓவியத்தில் வேறு விதமாகவும் இறக்கப்படும். இறக்கப் படும் விதத்தில் இரண்டுக்கும் வேற்றுமையுண்டு. பொருட் பயனில் இரண்டுக்கும் வேற்றுமை இல்லை. ஓவியம் காவியமே; காவியம் ஓவியமே.

பாரதமாதாவே ஓர் ஓவியம். மலைமுடியும், ஆற்றணிகளும், பசும் போர்வையும், நீலக்கடலுடையும் கொண்ட ஓரழகிய வடிவம் ஓவிய மன்றோ? தாயின் ஓவிய இயல் அவள் கருவிடைத் தோன்றும் சேய்களி டத்திலும் அமைதல் இயல்பன்றோ ?

இந்தியா ஓர் ஓவியக் கூடம். எவ்வோவியத்தை ஈண்டு எடுத்துக் காட்டுவது? பல தோன்றித் தோன்றி மறைகின்றன. ஒன்று நினை வில் உறுத்து நிற்கிறது. அஃது எது? அஃது **எல்லோரா**.

எல்லோரா, இமயக் கொடியில் பொலியும் ஒரு வெள்ளிய மல ரின் ஓவியம். அவ்வோவியத்தைக் காண்போர், இது 'மனிதனால் செய்யப்பட்டதா? தெய்வத்தால் செய்யப்பட்டதா? என்று ஐயுறுவர். ஒரு பெரும்பாறை, எல்லோரா ஓவியமாக அமைந்துள்ளது; அதை வடித்த ஓவியரே, அதைப் பார்த்துப் பார்த்து, 'இஃது என்னிடத் தினின்று முகிழ்த்ததா' என்று ஐயுறுவாராம். இதையொட்டி ஓர் அற்புதக் கதையும் வழங்கப்படுகிறது. 'ஓவியத் தெய்வமே ஒரு சிற்பனுருக்கொண்டு எல்லோராவை அமைத்தது போலும்' என்று பேசுவோருமுளர்.

எல்லோராவை யொத்த ஓவியங்கள் பலப்பல பாரதத்தை அழகு செய்கின்றன. பழைய இந்தியர் கோயில்களில் உயிரோவியங்கள் பல இன்னுங் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

பழைய இந்திய ஓவியங்களை எடுத்த அறிஞர், பள்ளிகளில் பணந் தந்து படித்துப் பட்டம் பெற்றவரல்லர்; பிறநாடு சென்று தேர்ச்சி பெற்று வந்தவரல்லர். ஏட்டுப்படிப்பில் அவர் நாட்டஞ் செலுத்திய தில்லை. முன்னாளில் ஓவியக்கலை எப்படி வளர்ந்தது? அது வழிவழியே வளர்ந்து வந்தது. பழைய இந்திய ஓவியர் எவ்வழியில் காவியப் புலவோர்க்குக் குறைந்தவராவர்? முன்னாக. தொழிற் கல்வியின் மாண்பு என்னே! என்னே! மற்றுமுள்ள தொழிற் கல்வித் துறைகள் பலவும் வழி வழிப் பிறந்து வளர்ந்தனவே.

இந்திய இசைக்கு ஒப்பாகவோ உயர்வாகவோ வேறு ஒரு நாட்டு இசை இன்னும் தோன்றவில்லை; இனியும் தோன்றா தென்றே கூறலாம். இந்தியாவின் தட்ப வெப்ப இயற்கை நிலை இசை வளர்ச்சிக்குத் துணை செய்யும் நீர்மையது. அதனால் இந்திய மக்கள், சரித்திரக் காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இசையின் எல்லையைக் காணும் பேறுபெற்றார்கள்.

நம் முன்னோர் நாதத்தின் இசைநுட்பம் கண்டவராதலின் அவரிடத்திலிருந்து ஏழிசையும், யாழ் குழல் என்ற இசைக்கருவிகளும் பிறந்தன. யாழுங் குழலும் விலங்குகளையும் வயப்படுத்தும் நீர்மையன; மனிதரிடத்திலுள்ள விலங்கியல்புகளைக் கல்லியொழிக்குந் தன்மையன. கண்ணபிரானும் ஆயரும் இசை முழக்கிய போது பலவித விலங்குகளெல்லாம் தங்களை மறந்து - பகைமை மறந்து - ஒன்றாகி, இன்பம் நுகர்ந்ததை நமது நாட்டு நூல்களிற் காண்க. **தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்** இயற்றிய **கருணாமிர்த சாகரம்** என்னும் நூலில் முற்கால இந்தியரின் இசை நுட்பங்கள் பேசப்பட்டுள்ளன.

நமது நாட்டு இசை, நாத தத்துவத்தினின்றும் தோன்றிய ஒன்றாதலானும், அத் தத்துவத்துக்கு மேல் வேறு தத்துவம் இன்மையானும், அதைக் கடந்து சாந்தத் தெய்வம் விளங்குதலானும், அது தன்னை முழக்குவோரையும் கேட்போரையும் சாந்தத்தில் திளைக்கச் செய்யும். எத்தனையோ யோகியர் எத்துணையோ யாண்டு, தவங்கிடந்தும் அடைய இயலாத சாந்த நிலையை, நமதுநாட்டு நல்லிசை எளிதில் கூட்ட வல்லதெனில், அதன் மாண்பை விரித்துக் கூறுதல் வேண்டுங்கொல்?

கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுக்கு முன்னரே முற்கால இந்தியர் நாதம் காற்றலையில் தோன்றுகிறதா ஆகாய அலையில் தோன்றுகிறதா என்ற ஆராய்ச்சியில் தலைப்பட்டனரென்று சரித்திரஞ் சொல்லுகிறது.

நாட்டியம் இசையுடன் தொடர்பு கொண்டது. இசையின் உணர்ச்சியை வெளிப்படுத்துவது நாட்டியம். நமது நாட்டுப் பரத நாட்டியத்தால் ஒவ்வொரு நாடிநரம்பும் ஒவ்வோர் உறுப்பும் பயிற்சி பெறும். அந் நாட்டியம் தன்னைப் பயில்வோரிடம் பிணி அணுகாதவாறு காத்துவரும்; உடலில் அழகொழுகச் செய்யும். இந்திய நாட்டியக் கலை கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே பண்பட்டு வளம் பெற்றிருந்

தது. இன்னும் அஃது ஆட்சியிலிருந்து வருதல் அதன் மாண்பை உணர்த்துவதாகும்.

இந்தியச் சோதிடக்கலை தொன்மை வாய்ந்தது. சோதிடக் கலை இந்தியாவினின்றும் கிரீஸ் சென்றதென்றும், கிரீஸினின்றும் இந்தியா வந்ததென்றும் சொல்லப்படுகின்றன. இதுபற்றிய ஆராய்ச்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. இதுவரை எழுந்துள்ள ஆராய்ச்சிகளையும், கண்டுள்ள முடிபுகளையும் சிந்தனை செய்தால் சில நுட்பங்கள் இந்தியாவினின்றும் கிரீசுக்குச் சென்றிருக்கலாமென்றும், சில நுட்பங்கள் கிரீஸினின்றும் இந்தியாவுக்கு வந்திருக்கலாமென்றும் விளங்குதல் பெறலாம்.

சோதிடக்கலை இந்நாளில் மேல்நாட்டில் நன்கு பெருகி வளர்ந்து வருகிறது. கோள்களின் நிலைகள் செவ்வனே கணிக்கப் படுகின்றன. ஆனால் பலன் சொல்வதில் இன்னும் மேல்நாட்டார் பண்படவில்லை. இக்காலக் கணித ஞான மில்லாத கிராமச் சோதிடன் சொல்லும் பலனில் பெரிதும் தவறுதல் நேராதிருப்பது கருதற்பாலது.

கிறிஸ்து பிறப்பதற்கு எத்துணையோ ஆண்டுகட்கு முன்னரே இந்தியாவில் மருத்துவக்கலை மருவலாயிற்று. இந்திய மருத்துவத்தில் சத்திரமும் உண்டு; மருந்தும் உண்டு.

சத்திரவித்தை இந்தியாவினின்றும் மேல் நாட்டுக்குச் சென்றது. இதனை ஜெர்மன் மருத்துவ அறிஞர் சிலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டாக இந்தியச் சத்திரவித்தை மேலும் மேலும் ஓங்கா தொழிந்தது. பழைய வழியில் சத்திரஞ் செய்வோர் இன்னும் ஈங்கொருவராக ஆங்கொருவராக இருக்கின்றனர். சுதந்திர மேல் நாட்டில் அவ்வித்தை மேலும் மேலும் வளர்ந்தே செல்கிறது.

மருந்தில் இன்னும் மேல்நாடு இந்தியாவுக்கு ஒப்பாகவும் வர வில்லை என்று கூறலாம். தொழுநோய் (குஷ்டம்), என் புருக்கி (க்ஷயம்), நீரிழிவு (மதுமேகம்) முதலிய பெருநோய்களை முற்றும் – அறவே – போக்கவல்ல மருந்து இன்னும் மேல் நாட்டு மருத்துவத்தில் கருக்கொள்ளவில்லை. அப் பெருநோய்களை அறவே போக்கவல்ல இந்திய மருந்துகள் இந்நாளிலும் கிடைக்கக் கூடியனவாயிருக்கின்றன.

அம்மருந்துகளைச் செய்யும் மருத்துவர் தொகை நாளுக்கு நாள் சுருங்கி வருவது வருந்தத் தக்கது.

முற்கால இந்திய மருத்துவம் இரு கிளையாகப் பிரிந்து நின்றது. ஒன்று சித்தமுறை; இன்னொன்று ஆயுள்வேத முறை. முன்னையது பெரிதும் முறிந்து பண்பட்ட ரசகந்த பாஷாணங்களால் ஆவது; பின்னையது பெரிதும் மூலிகைகளால் ஆவது. இரண்டும் இன்றியமையாதன.

பழங்கால இந்திய மருத்துவத்தில் ஒரு தனிச் சிறப்பிருக்கிறது. அது நாடிபார்த்து நோய்களின் தன்மையை அளந்து கூறுவது.

இந்திய மருத்துவம் இன்று உண்டானதன்று, நேற்று உண்டானதன்று. அஃது அதர்வ வேதத்தில் விளங்குஞ் சிறப்புப் பெற்றுள்ளது. அதர்வ வேத காலம் 800 கி. மு. என்று இக்கால ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். முற்கால இந்திய மருத்துவத்தின் தொன்மை, சிறப்பு முதலியன பி. ஸி. ரே. எழுதிய ஹிந்து மருத்துவ நூலில் விளக்கப்பட்டுள்ளன.

கி. மு. நாலாம் நூற்றுண்டிலேயே இந்திய அரசியற் கலைகளும் பொருளாதாரக் கலைகளும் யாக்கப்பட்டன.

பழங்கால இந்தியரால் சமயக்கலை மிக ஊக்கமுடன் வளர்க்கப் பட்டது. அவர் இயற்கை இயலை-உயிர் இயலை-இறை இயலை-ஆராய்ந்தனர்; அவைகளின் உண்மையையும் படிப்படியே கண்டனர். இயற்கை-உயிர்–இறை ஆகியவற்றின் ஆராய்ச்சியும் தெளிவும் பண்டை இந்தியரிடைச் சமய வொழுக்கத்தைப் புகச் செய்தன.

பழைய இந்தியர் சமயம் எது ? அதன் நிலை எப்படியிருந்தது ? இவை சிக்கலான கேள்விகள். இவைகட்குப் பலர் பலவாறு விடை இறுப்பர்.

சமயம் இந்தியாவின் உயிர்; மற்றவை உடல்-உறுப்புக்கள். இந்தியாவின் கல், மண், புல், புழு முதலிய எல்லாஞ் சமயக்காட்சி வழங்கிய காலமுண்டு. இந்தியச் சமயம் உலகுக்கு இமயமாயிற்று; கங்கையாயிற்று. இமயமும் கங்கையும் சமயக் குறிகள்.

முற்கால இந்தியரின் சமயக் கலைகள் எவை? சித்த நூல்களும். ருக்வேதமும், பிறவு மென்க. பழஞ்சித்த நூல்களில் பல மறைந்தன,

I பொருள் கூறுக :—

இயற்கைச் சூடில். கால் கொண்டவர், தொன்மை, கூறுகள், நிர்ணயம், பாஷாணம், தொழுநோய், புலன்கள்.

II வாக்கியங்களில் வைத்து எழுதுக :—

வாயிலாக, வழிவழி, காட்சி, பல்லாயிரம், ஆராய்ச்சி, ஈறக் குறைய, நாளுக்கு நாள், பண்பட்ட.

III விடை தருக :—

1. நல்ல கலைகள் எங்கு எவ்வாறு பிறக்கும் ?
2. இந்தியக் காவியத்திற்குக் கால் கொண்டவர் யார் ? அவர் இயற்றிய காவியம் யாது ? அது எத்தகையது ?
3. ஓவியத்துக்கும் காவியத்துக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?
4. எல்லோரா ஓவியத்தின் சிறப்பை விளக்குக?
5. நம் நாட்டு இசை மாண்பு யாது ?
6. பரத நாட்டியத்தால் உண்டாகும் பயன் என்ன ?
7. இந்திய சோதிடக் கலையின் தொன்மையை விளக்குக.
8. இந்திய மருத்துவம் எத்தகைய சிறப்பு வாய்ந்தது ?
9. இந்திய மருத்துவத்தின் இரு கிளைகள் யாவை ?
10. பழங்கால இந்தியர் சமயக் கலையை எவ்வாறு வளர்த்தனர் ?
11. சரித்திரம், மருத்துவம், ஆயுள் வேதம், சித்த முறை இவற்றை விளக்குக.

# 4. ஆதிரை பிச்சையிட்ட காதை

(டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள், M.A., L.T. M.O.L. PHD.)

## ஆதிரையின் கற்பின் சிறப்பு

" ஆதிரையின் கணவன் சாதுவன் என்பவன் ; ஒழுக்கம் கெட்டவன் ; கணிகை ஒருத்தியிடம் வாழ்ந்து, அவள் கொடுத்த உணவையே உண்டுவந்தான் ; தன் செல்வம் அனைத்தையும் கணிகையர்க்கும் சூதாட்டத்திற்கும் தொலைத்தான். கணிகையும் அவனைத் துறந்தாள். பிறகு அவன் பொருள் ஈட்டிவரக் கருதி வங்கத்தில் ஏறிச் சென்ற வணிகரோடு கூடிச்சென்றான். கப்பல் காற்றினால் அலைக்கப்பட்டுக் கடலிற் கவிழ்ந்தது. சாதுவன், ஒடிந்த பாய்மரத்துண்டைப் பற்றி நீந்தி, ஆடையற்ற நாகர் வாழும் மலைப்பக்கத்தை அடைந்தான்.

'கப்பலிலிருந்து தப்பிப் பிழைத்துப் பூம்புகாரை அடைந்தோர், 'உன் கணவன் இறந்தனன்' என்று ஆதிரையிடம் அறிவித்தனர். அவள் வருந்திப் புலம்பிச் சுடுகாடடைந்து, குழிவெட்டித் தீயை மூட்டி, " என் கணவன் போன வழியே யானும் போவேன்," என்று அதனில் வீழ்ந்தாள். ஆனால் அந் நெருப்பு அவளுடைய படுக்கையையும் புடவையையும் பூசிய சாந்தையும் சூடிய மாலையையும் சிறிதும் சிதைக்காமலும் அவளை எரிக்காமலும் குளிர்ந்த நீர் போல் இருந்தது. அவள்,

> ' விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த
> திருவின் செய்யோள் போன்றினி திருந்தாள்.'

அவள், 'ஐயோ ! தீயும் கொள்ளாத் தீவினையாட்டியேன் ! என்செய்வேன் !' என்று ஏங்கினாள். அப்பொழுது வானத்தில் அசரீரி தோன்றி, 'ஆதிரையே, உன் கணவன் நாகர் வாழும் மலைப்பக்கத்தில் இருக்கிறான். விரைவில் 'சந்திர தத்தன்' என்னும் வணிகனது கப்பலில் ஏறி இவண் வருவான். நீ துயர் ஒழிக '! என்னும் நற்செய்தியை அறிவித்தது. ஆதிரை ஆனந்தக் கடலில் ஆழ்ந்தவளாய்த் தன் மனையை அடைந்து, கணவன் வருகையை எதிர் நோக்கி, அறங்கள் பலவற்றைச் செய்து கொண்டிருந்தாள். நிற்க,

## சாதுவனும் நாகரும்

"சாதுவன் நாகர் நாட்டில், களைப்புற்று ஒரு மரநிழலில் உறங்கிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் அந்நாட்டு வாழ் ஆடையற்ற நாகர் சிலர் அங்கு வந்தனர்; சாதுவனைக் கண்டு, 'இவன் கடலிலிருந்து துன்பப்பட்டு வந்துள்ளான். ஊன் நிறைந்த இவனது உடல் நமக்கு இனிய உணவாகும்' என்று கருதி, அவனை எழுப்பினர். சாதுவன் எழுந்து அவர்கள் மொழியிலேயே பேச, அவர்கள் வியப்புற்று மரியாதையுடன் நின்று, நீர் எங்கள் தலைவன்பால் வரவேண்டும்' எனக் கூறி அவனை அழைத்துச் சென்றனர்.

"நாகர் குரு கட்குடங்களும் மிகுந்த முடை நாற்றமும் சூழக்காய்ந்த வெண்மையான என்புக் குவியலாகிய ஆசனத்தில், கரடி தன் பிணவொடு இருந்தது போல ஒரு பெண்ணுடன் அமர்ந்திருந்தான். சாதுவன் அவனைக்கண்டு நாகர் மொழியில் பேசி அவனைத் தன் வயமாக்கிக் கொண்டான். அக்குருமகன், 'நீ வந்த காரணம் யாது?' எனச், சாதுவன் கடற், பயணத்தில் தான் அடைந்த இன்னலை விளக்கினன். உடனே குருமகன் தன் ஏவலரை அழைத்து, 'உணவின்றிக் கடலில் உழன்று வந்த இவற்கு ஓர் இளநங்கையையும் கள்ளையும் ஊனையும் வேண்டிய அளவு கொடுங்கள்' என்றான். அக்கொடு மொழி கேட்ட சாதுவன் அயர்ந்து, 'வெவ்வுரை கேட்டேன், வேண்டேன்' என்றான். குருமகன், 'பெண்டிரும் உண்டியும் இன்றெனில், மாக்கட்கு ஞாலத்து உறுபயன் உண்டோ? உண்டெனிற் காட்டு,' என்றான்.

உடனே சாதுவன்,

"மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்  
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்  
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்  
உறங்கலும் விழித்தலும் போன்ற(து) உண்மையின்,  
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்  
அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்  
உண்டென வுணர்தலின் உரவோர் களைந்தனர்"

என்று பதில் கூறினன்.

"உடனே குருமகன் நகைத்து, 'நீ, உடம்பை விட்டு உயிர் வேறு இடம் புகும் என்னும் கருத்துப்படக் கூறுகின்றனை. அவ்வுயிர்

எப்படி வேறிடம் செல்லும்? அதனை விளங்க வுரை' என்றான். சாதுவன், 'நமது உடலில் உயிர் இருக்கையில் ஏதேனும் ஒரு துன்பம் வரின், அதை உணர்ந்து உடல் வருந்துகின்றது. உயிர் நீங்கிய பின் உடலை நெருப்பிலிட்டுக் கொளுத்தினாலும் உணர்வதில்லை அன்றோ? ஆதலால் உடம்பைவிட்டு ஏதோ ஒன்று போய்விட்டது என்பதை நாம் உணர்கிறோம் அல்லவா? அந்த ஒன்றே உயிர் என்பது. அது வேறொரு புகுமிடம் உடைய தென்பதை யாவரு மறிவர். நாம் கனாக் காண்கையில், நமது உடல் இருந்த இடத்தில் இருப்ப, உயிர் வேறோர் உடலின் வழியே மற்றோர் இடத்தை அடைகின்றது என்பதை உணர்கிறோம் அல்லவா?' என்றான்.

"நாகன் நல்லுணர்வடைந்தான்; சாதுவன் அடிகளிற் பணிந்து, 'நான் கள்ளையும் ஊனையும் கைவிடின் உயிர் வாழேன். ஆதலின் எனக்குத் தக்க நல்லற வழியைக் காட்டுக,' என்று வேண்டினான். சாதுவன் இசைந்து, 'கவிழ்ந்த கப்பலிலிருந்து எவரேனும் இவ்விடத்தை அடையின், அவர்களை வதையாது காத்தல் வேண்டும்; தானே இறக்கின்ற உயிரின் ஊனைத் தவிர வேறு எதனையும் கொன்று தின்னலாகாது,' என்றான். குரு, 'இஃது என்னால் பின்பற்றத் தக்கதே. நாங்கள் பன்முறை கப்பல் கவிழ்ந்து அல்லலுற்ற மக்களின் பொருள்களைக் கவர்ந்துள்ளோம்; இங்கு வருபவரைக் கொன்று தின்றுள்ளோம். அவரது செல்வம் இதோ இருக்கின்றது. நீ எடுத்துச்செல்' என்றான்.

"சாதுவன் அச்செல்வத்தை எடுத்துக் கொண்டு சந்திர தத்தன் என்பானது கப்பலில் ஏறிக் கடல் கடந்து பூம்புகாரை அடைந்தான்; தன்னை எதிர்நோக்கி இருந்த மனைவியின் அகமும் முகமும் மலர வீடடைந்தான்; அவளோடு இன்புற்று நல்லறம் புரிந்துகொண்டு பெரியோர் போற்ற வாழ்கின்றான்.

## ஆதிரை பிச்சை இட்டமை

"இத்தகைய பெருமை பொருந்திய பத்தினிப் பெண்மணியான ஆதிரையினிடம் பிச்சை பெறுக," என்று காய சண்டிகை மணிமேகலையிடம் கழறினாள். உடனே மணிமேகலை ஆதிரையின் இல்லத்தின் வாயிலில் புனையா ஓவியம் போல நின்றாள். ஆதிரை வெளிப்போந்து,

மணிமேகலையைத் தொழுது வலங்கொண்டு, 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' எனக் கூறி, அமுத சுரபி நிறையுமாறு அன்ன மிட்டாள்.

I பொருள் கூறுக:-

கணிகை, வங்கம், விரைமலர், அசரீரி, இவண், ஊன், வியப்புற்று, என்பு, ஞாலம், கழறுதல், பாரகம், கோறல், உரவோர்.

II வாக்கியங்களில் அமைக்க:-

ஒழுக்கம் கெட்டவன், ஆனந்தக் கடலில் ஆழ்ந்து, புனையா ஓவியம்போல, உரவோர்.

III விடை எழுதுக:-

1. சாதுவன் யார்?
2. அவன் வணிகரோடு செல்லக் காரணம் யாது?
3. கப்பல் கவிழ்ந்ததும், சாதுவன் எங்குத் தங்கினான்?
4. ஆதிரை யார்? அவள் தீயும் கொள்ளத் தீவினை யாட்டியேன் என்று ஏன் வருந்தினாள்?
5. ஆதிரைக்கு அசரீரி அறிவித்தது யாது?
6. நாகர் சாதுவனை எழுப்பக் காரணம் யாது?
7. குருமகன் சாதுவனை எவ்வாறு வரவேற்றான்?
8. உரவோர் உணர்ந்தவை எவை? அவர் எதைக் களைந்தனர்?
9. சாதுவன் அறவுரை யாது?
10. காயசண்டிகை யார்?

# 5. மலேயா நாட்டுக் கப்பற் பிரயாணம்

(T. பதுமாவதி யம்மையார் அவர்கள்)

யான் பிரயாணம் செய்தது கோடைகாலமாதலால், ஆதித்தன் விடியற் காலையிலேயே கீழ்த்திசையில் அடிவானத்திலிருந்து சிறிது சிறுதாக மேற்கிளம்புவான். அவ்வமயம் யானையைக் காண்பதற்குமுன் அதன் மணியொலி செவிப்படுதல் போன்றும், மன்னனைப் பார்ப்பதற்குமுன் அரசசின்னங்கள் சில காட்சியளித்தல் போன்றும், ஞாயிறு எழுதற்கு முன்பே சில அழகிய இயற்கைத்தோற்றங்கள் ஆகாயத்தில் தோன்றும். குளிர்ந்த காற்றுடன் இவ்வழகின் பொலிவும் நமக்கு மிகுந்த இன்பத்தை ஊட்டுவதாகும். கடலைத் தொட்டுக்கொண்டிருப்பதுபோலத் தோன்றும் தொடுவானத்தில், ஆங்காங்கே செந்நிறமலர்களைத் தூவியதுபோன்று செந்நிறம் விட்டுவிட்டுத் தோன்றும். சில விநாடிகளுக்குள் வானத்தில் செம்பஞ்சுக்குழம்பை ஊற்றியதுபோன்று ஒரே செந்நிறம் பரந்துவிடும். ஞானியின் ஞானஒளி வெகுதூரம் பரவுதல் போன்று, ஆதித்தன் செம்மைஒளி கீழ்வானம் முற்றும் ஒளிராநிற்கும்; சிறிதுபோது கழிந்ததும், கற்றூணை இருபிளவாகப் பிளந்து வெளித் தோன்றிய மானுடமடங்கல் போன்று, வானத்தையும் கடலையும் பிளந்துகொண்டு ஒரு நெருப்புப்பிழம்பெனச் சிவந்த ஞாயிறு சிறிது சிறிதாக மேற்கிளம்பும். அவ்வமயம் கடல் நீரிலும் செந்நிறம் காணலாம். உயரிய பொருள்கள் விரைவில் மறைதல்போன்று இவ்வழகுத்தோற்றம் சில விநாடிகளில் ஓடி ஒளியும். உடனே பகலவன் பல வெள்ளிய கதிர்களை வீசிக்கொண்டு மேல்வானத்தில் வந்துறுவான். அவ்வழகைச் சில விநாடிகளே கண்கூசாமல் காண இயலும். அங்குக் கடலின் பரப்பை நோக்கவேண்டும். என்ன அழகு! என்ன அழகு! கடல் முற்றும் வெள்ளியை உருக்கிவிட்டது போன்று தளதளத்துக் கொண்டிருக்கும். வேறெங்கிருப்பினும் இத்தகைய பரந்த வெள்ளித் தடத்தைக் காண இயலுமோ! இவ்வளவு பெரிய நீர்ப்பாகத்தை ஒரே காலத்தில் பார்த்தற்கு மரக்கலம் தவிர வேறு இடம் உண்டோ? இக்காட்சியைப் பொற்கொல்லன் மூசையில் கொதிக்கும் வெள்ளியுருக்கிற்கு யாங்ஙனம் ஒப்பிடுவது! அளவில் அஃதெங்கே, இக்கடலெங்கே! 'இது மந்தரம் நாட்டிக் கடைந்த பாற்கடலோ!' என்னும் எண்ணமும் தோன்றும்! அடுப்பிலேற்றிய பால்போன்று கொதிக்குங்கால் இஃது உப்பு நீர் என்னும், நினைவு ஏது!

அவ்வாதித்தன் சாயும்போது வானத்தில் அமையும் நிறங்கள் பல வாகும். இவற்றினும் சந்திரன் தோற்றமே மிக்க அழகுடையது. அது மேலெழுங்கால் பொற்கலசமென ஒளிரும். அப் பரந்த மேல்தட்டில் பாலன்ன நிலவின் ஒளி உள்ளத்திற்கு மிக்க உவகையை ஊட்டாநிற் கும். அவண் விட்டு நீங்குதற்குச் சிறிதும் மனமெழுதல் இல்லை. இச் சூரியசந்திரர்களின் வனப்பு மற்ற இடங்களைக்காட்டிலும் பரந்து ஆகாயத்தின் பெரும்பிரிவு நம் கண்ணிற்படக்கூடிய இக் கடற்செலவில் மிகுதியும் நம்மைக் கவராநிற்கின்றது. இவற்றின் சாயல்களினால் கடல் நீர் அப்போதைக்கப்போது நிறவேறுபாட்டைப் பெறுகிறது. தற்சமயம் மின்சார விளக்குக்களின் தொடர்பால் நீர்ஊற்றைப் பல நிறமாய்ப் பர வச் செய்யும் செயற்கைமுறை இவ்வியற்கையை நோக்கித்தான் அமைக் கப்பட்டதோ எனக் கருதவும் இடமுள்ளது.

மீன்களின் துள்ளல் எப்போதும் ஓய்தலில்லை. அவற்றின் துள்ள லால் மேற்கிளம்பும் கடல்நீர் ஒரோவொருசமயம் கப்பலின் மேல் தட்டிலும் வந்து தெறிக்கும். மீன்கள் நீந்தும் அழகும் அவற்றின் விளையாட்டும், பரபரப்பும் காண்பாருக்கு வியப்பையும் மகிழ்வையும் நல்காதிருத்தல் யாங்ஙனம்! மீன் காட்சிச்சாலையில் சிறு கண்ணாடிப் பெட்டிகளில் அடைபட்டிருக்கும் மீன்களின் ஊக்கவிளையாட்டு மக் களுக்கு ஆனந்தத்தை அளிக்கிறதன்றோ! ஆயினும், கடலில் அம் மீன்களின் உல்லாசக் குதியாட்டத்தைப் பார்ப்பவர், அவ்விடம் அவற் றிற்கு ஒரு சிறைச்சாலை என்பதையும். தம் நலமும் இடமும் இழந்தார் படும் துன்பம் இஃதே என்பதையும் உணர்வர். பிற பொருள்கள் கடலை அலைக்குங்கால் அதிலிருந்து எழும் நீர்த்திவலைகள் வானத்திற் சென்று நட்சத்திரங்களைப் போல ஒளிரும் எனக் கவிகள் இயம்பும் உவமை நினைவிற்கு வரும். அவ்வமயம் புலவருக்கு இயற்கையில் இருந்த உயரிய அறிவைக் கொண்டாடாமலிருத்தல் இயலாது. பெரிய மீன்கள் நீரில் நீந்துங்கால் தள்ளப்படும் தண்ணீரின் திரட்சி, பெரிய அலைகள் போன்று கப்பலின்மீது மோதாநிற்கும்.

மரக்கலம் துறைமுகத்திற்கு அருகில் அணையும்போது நிறத்திலும் உருவத்திலும் அமைப்பிலும் மாறுபட்ட பறவைகள் பல காணப்படும். அவைகள் கப்பலைச் சுற்றிச்சுற்றிப் பறந்து ஒலித்துக்கொண்டிருக்கும். சிறுஒலியும் செவிப்படாது இருந்த பிரயாணிகளுக்குத் திடீரென உண் டாகும் இப்பேரோதை வெறுப்புத் தரக்கூடும். அன்றியும், நடுக்

கடலிலும் ஒவ்வொரு வகைப் பறவைகள் தனித்தனிக் கூட்டமாய் உரத்த ஒலியின்றிப் பறந்துகொண்டிருக்கும். அவை எங்கு வதிகின்றன, எவற்றை உண்கின்றன என்பனவற்றை அறிதல் அருமை. அருகிலுள்ள கரைகளைச் சார்ந்த ஊர்களிலும் சோலைகளிலும் அவை வதியும்போலும் என ஒருவாறு யூகிக்கலாம். அவற்றின் தீவிரப் பறப்பும் இனிய ஓசையும், அவை யாதொரு பொறுப்பும் கவலையும் இன்றிச் சுயேச்சையாய் இன்பத்திலேயே மூழ்கியிருத்தல் போன்று காணப்படும். காலையில் எழவும் சுறுசுறுப்புடன் செல்லவும் மக்கள் பறவைகளிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். அவை கூட்டமாய்ப் பறக்கும்போது அவைகளின் சிறகுகள் ஒரே நிலையில் ஒழுங்குடன் அசைதல் மிக்க அழகு வாய்ந்தது. அங்ஙனம் அசைதல், 'இவ்வொழுங்கைக் கண்டுதான் போர்வீரர்கள் (Soldiers) ஒரே அளவாகக் காலடி வைத்து நடக்கக் கற்றுக்கொண்டார்களோ!' என நினைக்கவும் இடந்தரும். பறவைகள் அமர்ந்திருக்கும்போதும் பறக்கும்போதும் அவற்றின்உறுப்புகளும் அழகும் தெளிவாய்த் தோன்றும்.

அவை ஒன்றன்பின் ஒன்றாகப் பல கூட்டங்களாய்ச் சிறிது நேரம் பறந்து கொண்டே இருக்கும். அப்பறப்பு நின்றவுடனே, 'அந்தோ! அக்காட்சி இன்னும் சிறிதுபோது இல்லாமற் போயிற்றே!' என உள்ளம் வருந்தும். அக்காட்சியில் சலிப்பு ஏற்படுதல் இல்லை. சிலபோது அப்பறவைகள் மேல்தட்டில் உள்ளவர்கள் அருகிலேயே பறத்தல் போன்று காணப்படும். அவ்வமயம் அவற்றைத் தொட்டுப் பார்க்க ஆர்வம் மிகும். ஆனால், அவை கைக்கெட்டுதல் இல்லை.

**கப்பலும் பிரயாணிகளும்:**—முற்காலத்தில் மக்கள் கடற்பிரயாணம் செய்தற்குப் பெரிதும் அச்சங்கொள்வார்கள், இப்போதோ, அவ்வச்சம் முக்காற்பங்கு நீங்கிவிட்டது. ஆயினும், இப்போதும் அஞ்சுபவர் சிலருண்டு, கப்பலேறிச் செல்பவர் திரும்பித் தம் ஊர் வருதல் அருமை என்னும் எண்ணம் முற்காலத்தவருக்கு இருந்தது. இக்காலத்தவருக்கு அவ்வெண்ணம் அறவே நீங்கிவிட்டது. இவ்விரண்டிற்கும் பல காரணங்கள் உண்டு. இக்காலத்தும் கப்பலில் செல்கின்றவர்களுள் சிலருக்கு அதில் ஏறும்வரை மிக நடுக்கமாக இருக்கும். பின்பு, அது வீடுபோன்று இருத்தலினாலும், தண்ணீர் கண்ணுக்குக் காணப்படாமையாலும் அந் நடுக்கம் சிறிது சிறிதாக மறைந்துவிடும்.

எவ்வகுப்பில் செல்பவரும் தாம் செல்லும் இடத்திற் கேற்பப் பெறுங் கட்டளைச்சீட்டுடனே உணவுச்செலவையும் செலுத்திவிடுதல்

வேண்டும். இச்செலவு வகுப்பிற்குத் தக்கவாறு குறைந்தும் மிகுந்தும் இருக்கும். மூன்ரும் வகுப்புணவு மிகக் குறைந்த நிலையிலும், இரண்டாம் வகுப்புணவு நடுநிலையிலும், முதல்வகுப்புணவு உயர்நிலையிலும் இருக்கும். பிந்திய இருவகுப்புக்களின் உணவு இருபிரிவுகளை உடையது. காய்கறியுணவைப் பிராமண உணவென்றும், மாமிச உணவை ஐரோப்பிய உணவென்றும் கூறுவர். முன்னது நான்கு வேளைகளோடு அமையும். பின்னது ஆறு வேளைகள் நீளும். ஐரோப்பிய உணவிற்கு ஒவ்வொரு வேளையும் உணவுப்பண்டங்கள் இத்தனை எனக் குறித்த அட்டை எல்லாருக்கும் கொடுக்கப்படும். பிரயாணிகள் அதில் தங்களுக்கு வேண்டுவனவற்றைக் குறிப்பிட்டு அனுப்பின் அதன்படியே அவை பரிமாறப்படும். முதல் இரண்டு வகுப்பினரும், பொதுச்சாப்பாட்டறைக்குச் சென்றே, அன்றித் தம் அறையிலே இருந்தோ உணவை உண்ணலாம். அவர்களுக்கு நீராடத் தனித்தனி அறைகள் இருத்தலின், அவரவர் விரும்பியபோது குளித்தலும் ஆடைகளைத் துவைத்தலும் செய்துகொள்ளலாம்; மறு உணவு வருமட்டும் தாங்கள் விரும்பிய இடங்கட்குச் சென்று மகிழலாம்.

அவண் நடைபெறும் களியாட்டங்கள் பலப்பல, அவை அவரவர்கள் அறிவிற்கும் இயல்பிற்கும் போக்கிற்கும் ஏற்ப அமையும், சிலர் சீட்டாடுவர்; சிலர் இன்னிசையில் ஆழ்ந்திருப்பர்; சிலர் பந்தாட்டத்தில் பதிவர்; சிலர் மேல்தட்டில் உட்கார்ந்து இயற்கையழகில் ஈடுபட்டிருப்பர்; சிலர் நூல்களின் நுட்பப்பொருளை நுகர்ந்துகொண்டிருப்பர்; சிலர் பொதுப்பொருள்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பர்; முன்பே பழக்கமுள்ள நட்பினர் தம் கல்லூரி அனுபவங்களையும் கடற்கரைக் காட்சிகளையும் கூறிக் குலவிக்கொண்டிருப்பர்; சிலர் செய்தித்தாள் படித்துக்கொண்டிருப்பர், சிலரைத் துயில் ஆட்கொள்ளும், வேடிக்கைக்கதைகள் சிலர் காலத்தைக் கவரும், வேளைக்கு வேளை கிடைக்கும் உயர்ந்த உணவும், விசாலமான படுக்கையும், மகிழ்வை யூட்டும் இயற்கைக்காட்சிகளும், ஆனந்தம் நிறைந்த கூட்டுறவும், உட்கார நாற்காலிகளும், சாய்ந்திருக்கச் சாய்வுபலகைகளும், முழுச்சந்திரன் போன்று ஒளிவீசும் மின்சாரவிளக்குக்களும் அளிக்கும் இன்பத்தை இந்திரலோக இன்பம் என்றுதான் கூறல் வேண்டும். குடும்பத்தொல்லையோ, வேலைச்சிரமமோ, பணக்குறைவோ அவண் ஏற்பட வழி இல்லை. சம்பந்திவீட்டில் மருவு உண்ணும் மாப்பிள்ளை வீட்டாரைக்கூடக் கப்பற்பிரயாணிகளுக்கு ஒப்புக்கூறல்

இயலாது. அவ் வாழ்க்கையை அவர்கள் வாழ்க்கையிலேயே ஒரு சிறந்த அனுபவம் எனத்தான் இயம்பல்வேண்டும். ஆனால், கப்பல் நாகப் பட்டினத்தை விட்டவுடன் சிறிது தொலைவுவரையும் கடல் மிகக் கொந்தளிப்பாய் இருத்தலின், ஏறக்குறைய இரண்டு நாட்கள்வரை சிலருக்கு மயக்கம் உண்டாகும். அதுவே மக்களுக்குச் சிறிது துன்பம் தருவதாகும். பலருக்கு மயக்கம் உண்டாதலே இல்லை. மயக்கமுற்றவரும் மூன்றும் நாள் மிக்க ஊக்கத்துடனும் மகிழ்வுடனும் எழுந்து உலவுவர். "முன்பிருந்தவற்றைவிட எங்களுக்குச் சுறுசுறுப்பும் நலமும் ஏற்பட்டுள்ளன!" என அவர்களே கூற யான் கேட்டுள்ளேன். எங்களுக்கு மயக்கம் சிறிதும் உண்டாகாமையின், அவ் வனுபவத்தைப்பற்றி யாங்கள் அறிந்தோமில்லை.

பெரும்பான்மையாக முதலிரு வகுப்புக்களிலும் உணவுப்பொருள்கள் மிகுதியும் வீணாக்கப்படுகின்றன. யாவரும் சேர்ந்து உண்ணும் இடத்திலும் அவர்கள் உண்ணும் அளவைக்காட்டிலும் மிகுதிப்படும் அளவே விஞ்சியிருக்கும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொணர்ந்து கொடுக்கும் உணவும் நிரம்ப இருத்தலின், அதுவும் மீதப் பட்டுப் போகிறது. சோறுமட்டுமா? பிரையிட்ட தயிர், கோக்கோ, சுவையுள்ள காய்கறிகள், நெய்யில் செய்த இனிய பண்டங்கள் யாவுமே கடலில் எறியப்படுகின்றன. வேலைக்காரருக்கும் போதிய உணவு கிடைத்தலின், அவர்களும் அவற்றை விரும்புதல் இல்லை. இம் முறையில் ஒவ்வொரு நாளும் வீணாக்கப்படும் உணவு, பலபேர் வயிற்றை நிரப்பக்கூடும். இதைக்குறித்துப் பிரயாணிகளோ, கப்பல் அதிகாரிகளோ, சிறிதும் கவலைகொள்ளுதலே இல்லை. இங்ஙனம் இவ் வகுப்பினர் வாழ்க்கை இன்பத்துடனும் ஆரவாரத்துடனும் கழிகின்றது.

இனி, மூன்றும் வகுப்பைப்பற்றிச் சிறிது நோக்குவோம்: சிங்கப்பூர்க் கப்பலில் மூன்றும் வகுப்பு ஒன்றுண்டு என்றும், அவ் வகுப்பில் செல்பவர்கள் பெரும்பாலும் கூலிகளே என்றும் முன்னரே தெரிவித்துள்ளோம். அதில் கூலிகள் அல்லாத நம் மனேரும் சிலர் உண்டு. மேல் இருவகுப்பில் உள்ளவர் எத்துணை இன்பம் துய்க்கின்றனரோ அத்துணைத் துன்பம் மூன்றும் வகுப்பினரைச் சார்ந்துள்ளது. கூடம் போன்றிருக்கும் ஒரு பெரிய இடத்தில் அவர்கள் இருப்பினும், கூட்டம் அதிகமாதலால், நெருக்கமாய் உள்ளது. அதில் ஒவ்வொருவருக்கு இத்தனை அடிகள் என அளந்து விடப்பட்டி

ருக்கும். உண்ணல், உறங்கல் யாவும் அங்கேயே நடைபெறும். உலாவவோ, வேறு இடத்திற்குச் செல்லவோ முடியாது. குழந்தைகள் இருப்பின், பெற்றோருக்குப் பெரிதும் துன்பமே. குளித்தற்குத் தண்ணீரும் இடமும் கிடைத்தல் அரிது. அம் மூன்றும் வகுப்பு நீரில் அமைந்து இருத்தலின், அவர்களுக்கு மயக்கமும் அதிகம். அதனால், பலர் வாந்தி எடுப்பர். சிலபோது அந்த அசுத்தத்திலேயே அவர்கள் கிடக்க நேரும், அவர்கள் சுத்தமாக இருத்தற்குப் பழகாதவர்கள். ஆதலின், தங்கள் இடத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவும் அவர்களுக்குத் தெரிதலில்லை. நம்மவர்களுள் சிலரும் அம் மூன்றும் வகுப்பில் இருந்து பெரிதும் துன்பப்படுவர். என் செய்வது! எல்லாப் போகமும் பணத்தைப் பொறுத்தன்றோ உள்ளது! மூன்றும் வகுப்புக் கட்டணம் முப்பத்தாறு ரூபாய். இரண்டாம் வகுப்புக்கட்டணம் நூற்றிருபது ரூபாய். இவ்விரண்டு வகுப்புக்களுக்கும் இடைப்பட்ட வகுப்பு ஒன்றுளது. அதன் கட்டணம் தொண்ணூறு ரூபாய். இறுதி வகுப்பினரும் இரண்டாம் வகுப்பினரைப் போன்றே சில நலங்களைப் பெறலாம்; ஆயினும், உணவிலும், படுக்கையறையிலும், குளிக்குமிடங்களிலும் சிறிது வேறுபாடு உண்டு. அவை அவர்களுக்கு அத்துணைத் துன்பத்தைத் தருதல் இல்லை. இறுதிவகுப்பினர் பல கஷ்டங்களையும் அடைதற்குக் காரணம், அவர்கள் வறுமையே யாகும். புகைவண்டியிலும் இவ்வேறுபாடும் துன்பங்களும் உண்டல்லவா?

மூன்றும் வகுப்பினருக்குச் சோறும், காய்கறி கலந்த சாம்பாரும், வாரம் இருமுறை மாமிசஉணவும் கொடுக்கப்படுகின்றன. பெரிய பாத்திரங்களில் சோறும் குழம்பும் தனித்தனியே வைத்துக்கொண்டு இருவர் நிற்பர். படுக்கையில் இருக்கும் பிணியாளர் தவிர மற்றவர் யாவரும் தாமே போய் உணவைப் பெற்று வரவேண்டும். இந்தச் சோறுதவிர வேறொன்றும் அவர்கட்குக் கிடைத்தல் இல்லை. புகைவண்டிகளில் பெறுவதைப் போலச் சிற்றுண்டிகளும் அவர்கள் பெற முடியாதன்றோ? இந் நிலையில் அம்மக்களின் துன்பம் பெரிதே! கீழ்த்தட்டில் ஓர் அரிய பண்டமும் கிடைக்காமலிருத்தலையும் மேல்தட்டில் அரிய பண்டங்களும் கடற்கிரையாதலையும் நோக்கின், அவை உலகில் ஏழைகளின் வறுமைத்துன்பத்தையும் செல்வரின் ஆரவாரச் செயலையும் வடித்துக் காட்டுதல் போன்றிருக்கும். முதல் இரண்டுவகுப்பினருக்கும், 'எப்போது கரையைக் காணலாம்!' என்னும் ஆர்வம் இருப்பினும், அக் கப்பலின் செலவு இன்னும் இரண்டு நாட்களுக்கு நீடிப்பி

னும் அவர்கள் மிக்க கவலை அடைதல் இல்லை. மூன்றும் வகுப்பி னருக்கோ ஒருமணி நேரம் அதிகப்படுவதும் பெருந்துன்பந் தாரா நிற்கும். வீடு சேர்ந்தபின்பும் இரண்டொரு நாட்களுக்கு உடல் ஊஞ் சலாடுவதைப் போன்ற உணர்ச்சியே அவர்களுக்கு உள்ளதாம்.

I பொருள் கூறுக :—

ஞாயிறு, மடங்கல், மூசை. துயில், இரை.

II வாக்கியங்களில் அமைக்க :—

தொடுவானம், உவகையை ஊட்டாநிற்கும், பொறுப்பும் கவலையும் இன்றி, இயற்கையழகில் ஈடுபட்டிருப்பர். ஊஞ்சலாடுவதைப்போன்ற உணர்ச்சி.

III விடைதருக :—

1. கப்பற் பிரயாணம் செய்வோர் விடியற்காலையில் ஆகாயத்தில் காணும் இயற்கைத் தோற்றங்கள் எவை?
2. கடலில் மீன்களின் குதியாட்டத்தைப் பார்ப்பவர் எதனை உணர்வர்?
3. மக்கள் பறவைகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை எவை?
4. எதனை "இந்திரலோக இன்பம்" எனக் கூறுதல் வேண்டும்?
5. கப்பலில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு உண்டாகும் துன்பங் கள் எவை?

# 6. அஞ்சியும் அவ்வையாரும்

(ஆ. கார்மேகக் கோன் அவர்கள்)

**வடவேங்கடம்** தென்குமரி என்னும் இவ்வெல்லைக்குட்பட்ட தமிழ் வழங்கும் உலகத்தின் ஒருபகுதியாய் விளங்கிய சேரநாட்டில் தமிழ்ப்பழங்குடியாகிய பாணர்குடியிலே **ஔவையார்** என்னும் நல்லிசைப்புலமை மெல்லியலார் பன்னூறாண்டுகட்கு முன்னர்த் தமிழகம் தழைக்கத் தோன்றினர்.

அந்நாளில் நம் தமிழ்மொழி மறுவற்ற மதிபோலத் தன்னொளி பரப்பி நன்னிலையுற்று விளங்கிற்று. தமிழ்நாடோ, ஒரு நாட்டின் அறிவு செல்வம் கல்வி நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அந்நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியாமென்ற நுண்மையை நன்கறிந்ததாகலான், ஆடவர் பெண்டிர் என்ற வடிவுவேற்றுமையினலே இருதிறத்தாருள்ளும் உயர்வு தாழ்வு என்பதில்லை, அறிவுவேற்றுமையே இருவருள்ளும் கருதற்பாலதாம் எனக் கொண்டு, ஆடவர் பெண்டிர் என்ற இருபாலர்க்கும் வேற்றுமையின்றி ஒரே தன்மையான அறிவைக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது; அதனல் அந்நாடு, ஆண் பெண் என்ற பால்வேறுபாட்டை அறவே நீக்கி, விழுமிய கல்வியறிவை வேண்டுவோர்க் கெல்லாம் விழைந்து கொடுத்தது; பிறப்பில் இழிபு கருதாது கடைநிலத்தோராயினும் கற்றறிந்தவர்களைத் தலைநிலத்து வைத்து மகிழ்வு பூத்தது: குடியிலும் தொழிலிலும் கோட்பாட்டிலும் பலதிறப்பட்ட நன்மக்களும் பகைமையின்றி ஒருங்கு குழுமித் தழுவி மகிழ இருந்தது; இத்தன்மையெல்லாம் நம் தண்டமிழ்நாடு கொண்டிருந்தமையினல் குறவர் மறவர் குயவர் பாணர்களது குடியினுள்ளும் அரசர்மரபினுள்ளும் **குறமகள் இளவெயினி, காவற் பெண்டு, வெண்ணிக்குயத்தி, ஆதிமந்தியார், பாரிமகளிர், பூதப்பாண்டியன் தேவியார், வெள்ளிவீதியார், நப்பசலையார், நக்கண்ணையார், பொன்முடியார்** முதலிய பல நல்லிசைப்புலமை மெல்லியலார்கள் தோன்றி நம் தமிழ் நாட்டிற்கு என்றும் பொன்றுப் புகழை நல்கினர். அக்காலத்திய இந்நாட்டின் இவ்வியல்பால், நம் ஔவையார் தடையின்றி இளமையிலேயே இயற்றமிழ்க் கல்வியையும் தம் குடிக்குரிய இசை நாடகக்கலைகளையும் நன்கு பயின்று தேர்ச்சியுற்று, நல்லிசைப் புலமை மெல்லியர் தலைவியராகவும், விறல்பட ஆடும் விறலியராகவும் விளக்கமுற்றிருந்தார்.

இங்ஙனமிருந்து இவர் தம் குலவாழ்க்கையாகிய பரிசில்வாழ்க்கையை மேற்கொண்டு, நம் தமிழகத்தில் நியாயமும் தியாகமும் வீரமும் மிக்க திருவுடை மன்னர் அவைக்களந்தோறுஞ் சென்று, தம் புலமைத் திறலையும், ஆடல் பாடல்களின் விறலையும் வெளிப்படுத்தி, அவர்கள் மனமுவந்தளிக்கும், பெரும் பரிசில்களைப் பெற்று வாழ்ந்துவருவாரா ராயினர்.

இவர்காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதிக்கண் விளங்கிய **தகடூர்** என்னும் ஊரில் **அதியமான் நெடுமானஞ்சி** யென்னும் ஓர் அரசன் அரசு செய்திருந்தனன். அவன் சேரரது உறவினன்; கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; வீரமிகுந்தவன்; **மழவர்** என்னும் ஒருவகை வீரர்கள் அடங்கிய படையையுடையவன்; அவன் இவ்விதச் சிறப்புக்களோடு வண்மையும் மிகுந்தவனுய் விளங்குவதை யறிந்த ஒளவையார் அவனிடத்துப் பரிசில்பெறக் கருதி அவனது தகடூரை அடைந்து, அவனைப் புகழ்ந்து பாடினர். அவ்வரசன் இவர் மீது பேரன்பு காட்டி உபசரித்தானுயினும் 'இப்போதே பரிசில் அளித்தால் இவர் அகன்று விடுவாராகையால், இவரைப் பிரிய நேரிடும்' எனக் கருதிப் பரிசில் அளியாது, சிலநாள் தாழ்த்திருந்தனன். ஒளவையாரும் சின்னுள் அவனது அரண்மனைக்கண் தங்கியிருந்தவர், அவன் பின்னரும் பரிசிலளியாது நீட்டிப்பது கண்டு சினம் மிகுந்து, அவனை நேரிற் பார்ப்பதற்கும் விரும்பாது அவனது வாயிற்காவலாளனிடத்துச் சில கூறிவிட்டுச் செல்லக் கருதினர். அதனுல் காவலாளனை நோக்கி, "வாயில்காப்போய், வாயில்காப்போய், கொடையுடையோரது செவியிடத்துப் பொருள் விளங்குஞ் சொற்களாகிய விதையை விதைத்துத் தாம் நினைந்த பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் மனவலியுடையவர்களும் பெருமைபெறுதற்கே வருந்துகின்றவர்களுமான பரிசில் வாழ்க்கையுடைய புலவர்க்கு அடைக்காத சிறந்த வாயிலைக் காப்போய், குரிசிலாகிய நெடுமானஞ்சி தன் தரம் இத்தன்மையது என்று அறியானே? அதனை அறியாவிடினும், எம் தரத்தையேனும் அறியான் கொல்லோ? அறிவும் புகழுமுடையோர் அனைவரும் இறந்தொழிந்தாராக, இவ்வுலகம் வறிய இடத்தை உடையதாகி விடவில்லையே! ஆகலான் இப்போதே புறப்படுகின்றேம்; எமது யாழ் முதலான கருவிகளை மூட்டையாய்க் கட்டித் தூக்கிச் செல்கின்றேம்; இவனன்றி எங்கட்கு இல்லையோ இடம்? எத்திசைச் செல்லினும், அத்திசையில் எம்மை அன்போடு உபசரித்துச் சோறிடுவார் பலருளர். இதனை நும் அரச

னுக்குக் கூறிவிடுவாயாக" என முனிவுடன் மொழிந்து, அவர் அறிவும் புகழும் உடைய கொடைஞரிடத்துப் பரிசில் பெறுதற்கு விரைந்தெழுந் தார்.

இங்ஙனம் இவர் சினந்து கூறிச் செல்லுதலை வாயில்காப்போனல் அறிந்த அதியமான் அஞ்சி, இவர் முனிவுக்கு அஞ்சி விரைந்து வந்து இவரைக் கண்டு, இவர் கொண்ட கோபந் தணிய வேண்டி நின்று, தனது கொடைமன்றத்துக்கு அழைத்துச் சென்று வீற்றிருக்கச் செய்து, வரிசை மிக்க பரிசில் அளவின்றி அளித்து, உணவிற்கு நெல் லும் சிறந்த ஆடைகள் பலவும் கொடுத்து உபசரித்தான். உடனே ஔவையார் உவந்து 'இத்தகைய வண்மையாளனைப் பரிசில் நீட்டித் தானென்று முனிந்தோமே!' என்று மிக வருந்தித் தம் மனத்தோடு கூறுபவராய், "அதியமான் ஒருநாளல்ல, இருநாளல்ல, பலநாளும் பல ரோடும் செல்லினும், முதல் நாள் கண்டபோது கொண்ட அன்பிற் சிறிதுங் குறையாத அன்பையே உடையான்; இவன் பரிசில் நீட்டிப் பினும், நீட்டியாதொழியினும், யானை கையில் எடுத்த கவளம் வாயி னுட் செல்லுதல் தவருததுபோல, இவன் நமக்குப் பரிசில் தருதல் தப்பாது," என்று, அவன் பழகியோ ரிடத்து என்றும் ஒரு தன்மை யாகக் கொள்ளும் அன்பையும் அருமையையும் மிகுத்துக் கூறி, வண்மையை வாழ்த்திப் புகழ்ந்து, அவனது மனையின்கண்ணே தங்கி யிருந்தனர்.

இங்ஙனம் இருக்குங்கால் ஒருநாள் அதியமான் ஒருமலைப்பக்கத் துக்குச் சென்றிருந்தவன், அம்மலையின் பிளவி லிருந்த ஒரு கருநெல்லிமரத்திற் பழுத்து விளங்கிய கனியொன்றைக் கண்டு, அதனை அரிதின் முயன்று பெற்றான். அவன் அதனை உண்டவர்கள் நெடுங்காலம் உயிர்வாழ்வார் என்றறிந்தும், அக்கனியைத் தானுண்டு உயிர்வாழ்வதினும், தமது நாவன்மையால் சீரிய பாக்கள் இயற்றி உலகை இன்புறுத்தும் ஔவையார்க் கீதலே சாலப் பயனுடையதெனக் கருதி, அக்கனியின் பெருமையைக் கூருமலே புலவர்க்குக் கொடுத்து உண்ணும்படி செய்தான். உண்ட ஔவைப்பிராட்டியார் பின்னர்க் கனியின் விசேடத்தை உணர்ந்து, அதியமான் தன்னினும் தம்மையே மேம் பட மதித்துத் தாம் சாவாது நெடுங்காலம் வாழ்ந்திருக்கக் கருதியதற்கு வியந்து, அவனை நோக்கி "வீரச்செல்வமுடைய அதியர்கோமானே, பெரிய மலையுச்சியிற் பெற்ற அமிழ்தமயமான இனிய நெல்லிக்கனி

பெறுதற்கரியது என்று கருதாமலும் அதன் பயனை வெளிப்படக் கூறு மலும் மறைத்துச் சாதல் நீங்க எமக்கு அளித்தாயாதலால், சந்திர மவுலியும் நீலகண்டனுமாகிய சிவபெருமான் நஞ்சை யுண்டும் நிலை பெற்றிருப்பதுபோல, நீ நெடுங்காலம் நிலைபெற்று வாழ்வாயாக" என்ற கருத்தமைத்து ஒரு செய்யுளைப் பாடி வாழ்த்தினர். பின்பு அவனுக்கு உயிர்த்துணையாய்ச் சிறந்து, அஞ்சியுட னிருந்து அவனது அருள் அன்பு வீரம் தியாகம் நியாயம் முதலிய குணங்களைப் புகழ்ந்து, அவ் வப்போது பல கவிகள் பாடி, அவனை மகிழ்வித்திருந்தனர்.

ஒளவையார் அதியமானுடன் இங்ஙனம் அமர்ந்துவரும் நாளில், காஞ்சிமாநகரத்தை ஆண்டுகொண்டிருந்தவனாகிய **தொண்டைமான்** என்னும் அரசன், தனக்குள்ள படைவலி காரணமாக அதியமானைத் தன்னினும் மெலியவனெனக் கருதி, அவனோடு போர்செய்யச் சமயம் நோக்கியிருந்தான். இதனை உணர்ந்த அதியமான் தன் ஆற்றலையும் சிறப்பினையும் அஞ்சாமையையும் தூதுமூலம் தொண்டைமானுக்கு அறிவித்தற்குக் கருதியவன், 'இவ்வரும்பெருஞ்செயலுக்குத் தக்கவர் நாவன்மையும் பாவன்மையும் அரசியலறிவும் மிக்க ஒளவையாரே' எனத் துணிந்து, அவரை அவனிடத்துத் தூதுசெல்ல வேண்டினன். ஒளவையாரும் அவ்வரசியற் பெருங்காரியத்தைப் பின்னிடைவின்றி ஏற்றுக்கொண்டு, புறப்பட்டுப்போய்க் காஞ்சிமாநகரடைந்து, தொண் டைமானைக் கண்டார். அவனும் புலவராயும் தூதராயும் வந்த ஒளவை யாரை முகமன் உரைத்து உபசரித்தான். ஒளவையார் அவனது அரண்மனைக்கண் அன்று உண்டியருந்தி இளைப்பாறித் தங்கியிருந்தார்.

பின்னர் தொண்டைமான் தனது அரண்மனைக்காட்சியைப் பகை யரசனாகிய அதியமானிடத்திருந்து வந்த ஒளவையாருக்குக் காண்பிப் பான்போலத் தன் படைமிகுதியையும் பேராற்றலையும் உணர்த்த நினைந்து, இவரை அழைத்துச் சென்று பல இடங்களையும் காட்டி வந்தான். தனது ஆயுதசாலைக்கு அழைத்து வந்து அங்கு நெய்பூசி உறையிட்டு அலங்கரித்து அணிஅணியாய் வைத்திருக்கும் ஆயுதங்களை யெல்லாம் காட்டி நின்றான். ஒருவர் மனத்தது அறிந்து பாடும் ஆற்றல் வாய்ந்த ஒளவைப்பிராட்டியாருக்கு அவனது உட்கிடையை அறிதல் அரியதாமோ? இவர் படைக்கலங்களைப் பார்த்து, அவனுக்குச் செருக் கடங்க அறிவுகொளுத்த நினைந்து, சில கூறுபவராய், "இப் படைக் கருவிகளெல்லாம் போரில் பயன்படாமையால் மயிற்பீலி அணியப்பட்டு

மாலை சூட்டப்பட்டுத் திரண்ட காம்பு திருத்தி நெய்பூசி, காவலையுடைய அரண்மனைக்கண் வினை இருக்கின்றன; தான் பெற்ற செல்வத்தைப் பல்லோர்க்கும் பகுத்துண்ணும் வன்மையுடைய எம் அதியமானது ஆயுதங்கள், பன்முறை போரில் பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனியும் முரிந்து, செப்பனிடக் கொல்லனது பணிக்களரியாகிய சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன," என்று கருத்தமைத்து, ஒரு பாட்டினைப் பாடி இவனது படைக்கலத்தைப் புகழ்பவர்போல் இகழ்ந்தும், அதிகமான் படைக்கலத்தைப் பழிப்பவர்போல் புகழ்ந்தும், குறிப்பால் தொண்டைமான் வீரத்தினும் தமது அதியமான் வீரமே சிறந்ததெனக் காட்டினர். அவ்வளவில் தொண்டையர்கோன் ஔவையாரை நோக்கி, "அம்மையே, அப்படியாயின், நும் நாட்டுள் என்னோடு போர்செய்யும் வலிமையுடையாரு முளரோ?" என வினவினன். அதற்கு அவர், "வேந்தே, நீ போர்செய்யக் கருதுவையாயின், எம்முடைய நாட்டின்கண், அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரரு முளர்; அவரேயுமன்றி, மன்றின் கண் தூங்கும் மத்தளவாத்தியத்தில் காற்றடித்தலால் எழுந்த ஓசையைக் கேட்டாலே, அது போர்ப்பறை என்று கருதி மகிழும் போர் விருப்புடைய என்னுடைய தலைவனும் உளன்," என்று அதியமானது போர்விருப்பத்தையும் அஞ்சாமையையும் எடுத்துக் கூறித் தொண்டைமானது தருக்கை அடக்கிவிட்டுத் தகடூர் வந்துசேர்ந்தார்.

இவர் காஞ்சிக்குத் தூதுபோய் மீண்ட சின்னாட்களுக்குப் பின்னர், திருக்கோவலூர் அரசனாகிய **மலையமான் திருமுடிக்காரி** யென்பான், பல வேற்றரசர்களைப் போரில் வென்று அடக்கி, வெற்றி மிகுந்து, தனக்கு நிகராவார் ஒருவருமிலரென்று பெருமிதங்கொண்டிருந்தான். இதனை அறிந்த அதியமான் அவனது ஆற்றலை அடக்கித் தன் புகழை மேம்படுத்தக் கருதி, அவனோடு பகைமைகொண்டு, நால்வகைப் பெரும்படையோடும் போய், மலையமானது கோவலூர்மதிலை வளைத்தனன். கோவலூர் அரசனாகிய காரியும் **காரிக்குதிரை** ஊர்ந்து படையுடன் வந்தெதிர்த்துக் கடும்போர் புரிந்தனன். அதியமான் தனது வேலாலும் வாளாலும் ஆளாலும் கரியாலும் பரியாலும் காரியின் படையை முறியடித்துப் பெருஞ்சமர் நிகழ்த்தினன். அவ்வமயம் அதியமானுடன் போர்க்களஞ் சென்றிருந்த ஔவையார், காரி அதியமான் அஞ்சியின் போர்வெல்லுந் திறத்தை யறியானாய் வந்து பொருதலால், பல உயிர்கள் மடிவதற்கிரங்கி, அவனுக்கு அதிகமானின் ஆற்றலை

அறிவுறுத்திப் பணிந்துபோகுமாறு கூறிப் போரை ஒழித்தற்குக் கருத்துக்கொண்டார். மலையமானையும் அவனது துணைவீரர்களையும் நோக்கி, "அதியமான் போர்செய்தற்கு, நின்ற இடத்தினின்று பெயர்ந்து உலாவி, உறையினின்றும் உருவிய வாட்கள், பகைவரது உடம்பின் தசையின்கண்ணே முழுகிப் பதிந்து கதுவாய் போய் வடிவிழந்தன. அவன் வேல்கள் குறும்பரது அரண்களை வென்று, அவர்களது நாட்டை அழித்தலால் காம்பும் ஆணியும் அசைந்து கெட்டன; அவன் களிறுகள் கணையமரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது பகைவரது அரணை அழித்தலால், பெரிய தந்தக்களிற் கட்டிய பூண்கள் கழன்றன; அவன்குதிரைகள் போர்க்களத்திற் பொருத வீரர்களது மார்பு உருவழியும்படி ஓடி உழக்குதலால், இரத்தக்கறைபட்ட குளம்புகளை யுடையவாயின; அதியமானோ, நிலவுலகம் அடங்காத படையையும், கழல்வடிவாகவும் கிண்ணிவடிவாகவுஞ் செய்த செறித்த அம்புகள் துளைத்த கேடயத்தையு முடையவன்; போர்க்களத்தில் அவனாற் கோபிக்கப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுளது? நெல்வளமிக்க உங்களுடைய ஊர்கள் உங்கட்கு உரியன ஆக விரும்புவீர்களாயின், அவனுக்குத் திறைகொடுத்தல் வேண்டும்; அங்ஙனம் நீங்கள் கொடுக்க மறுப்பீர்களாயின், அவ்வுரிமையை நீங்கள் அடைய அவன் உடன் படுவானல்லன்; அவனது போர்த்திறத்தை நான் உள்ளவாறு சொல்லியும் நீங்கள் பிரிதல் வியப்பன்று. ஆகையால், அதனை ஆராய்ந்து போர் செய்மின்;" "எங்கள் வீரன், நாளொன்றுக்கு எட்டுத் தேரைச் செய்யுங் கைவன்மையையுடைய தச்சன் ஒருமாதகாலம் ஆராய்ந்து செய்யப்பட்ட ஒரு தேர் உருளையை ஒத்த விரைவும் வன்மையு முடையவன்," என்று அதிகமானது ஆற்றலையெல்லாம் எடுத்துரைத்தார். இங்ஙனம் இவர் உரைத்தும், மலையமான் வென்றியில் மிக்க வேட்கையுடையவனாதலின், தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் இரங்காது எதிர்நின்று போர்செய்து இறுதியில் அதியமான் அஞ்சிக்கு அஞ்சிப் புறங்கொடுத்தோடினன். அவனுடைய படைகளும் நிலைகலங்கிக் கலைந்தன. கோவலூர் அதியமானது ஆட்சிக்குட்பட்டது. அவனது போர் வெற்றியைக் கண்ட **பரணர்** என்னும் பெருந்தகையும் ஔவையாரும் வியந்து அதனைப் புகழ்ந்தனர்.

இங்ஙனம் அவ் வதியமான் கோவலூரவரை வென்று கைக்கொண்ட பின்னர், ஔவையாருடன் மீண்டு, தகடூர் புகுமளவில் அவ்வமயத்து நீண்ட நாளாக மகப்பேறில்லாம லிருந்த தனக்குத் தலைமகன் பிறந்

திருக்கிருனென்று தெரிந்து, புதல்வன் பிறந்தவுடன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழவேண்டுமென்பது அறநூல் விதியாகலின், தான் பூண்ட போர்க்கோலத்தைக் களையாமலே விரைவிற் போய் மகன் முகத்தைக் கண்ணுற்ருன். உடனிருந்த ஔவையார் அப்போது அத்தன்மையை, "கையின்கண் உள்ளது வேலே; காலின்கண் உள்ளது வீரக்கழல்; உடம்பின்கண் உள்ளது வியர்வை; கழுத்தின்கண்ணது பகைவர்படை பாய்ந்த ஈரம் புலராத பசிய புண்; பகைவரை வெகுண்டு பார்த்த கண், தன் மகனைக் கண்டும் சிவப்பு நீங்கினதில்லை; ஆதலால், இவன் கோபத்துக் காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ? என வியந்து, அதிகமானது வீரத்தைப் புனைந்துரைத்தார்.

இவர்கள்செய்தி இங்ஙனமாக, அதியமானஞ்சியால் வெல்லப்பட்டுத் தனது கோவலூரை இழந்த மலையமான், இழந்த ஊரை எவ்வாற்ருலேனும் மீண்டும் பெறக் கருதி, அதற்குத் துணைதேடி, முன்பு பல முறையும் போரில் தன்னைத் துணையாகப் பெற்றவனும் சிறந்த வீரனுமாகிய **சேரமான் பெருஞ்சேரலிரும் பொறை** என்னும் அரசனை அடைந்து, தனக்கு உதவிபுரியுமாறு வேண்டினன். அவன் தன் நண்பனுகிய அவனுக்குத் துணைசெய்ய ஒருப்பட்டுப் பெரும்படையோடு புறப்பட்டவன் **வல்வில்ஓரி** என்னும் வள்ளலுக்குரிய வளமிக்க **கொல்லி மலையை** முதற்கண் பொருது கைப்பற்றவேண்டுமென்ற கருத்தை வெளியிட்டான். மலையமான் அதற்கிசைய, இருவரும் கூடிக்கொல்லி மலையைமுற்றுகையிட்டனர். அவ்வமயம் ஓரி மலையமானுக்குப் பகைவனுகிய அதியமான் நெடுமானஞ்சியைத் தனக்குத் துணையாக உதவும்படி வேண்டினுன். அதியமான் தன்மீது படையெடுக்கக் கருதி யிருக்கும் பெருஞ்சேரலிரும்பொறையையும் மலையமானையும் வலி தொலைப்பதற்கு இதுவே நல்ல தருணமென நினைத்து, தன் நட்பரசராகிய சோழனையும் பாண்டியனையும் தன்னுேடு சேர்த்துக் கொண்டு ஓரியின் கொல்லிக்கூற்றத்துக்கு வந்து ஓரியுடன் சேர்ந்து, சேரமானுேடும் மலையமானுேடும் பெரும்போர் புரிந்தான். அப்போரில் பெருஞ்சேரல் அதிய மானையும் சோழபாண்டியரையும் வென்ருேட்டி, அவரது முரசுங் குடையுங் கவர்ந்து, ஓரியைக் கொன்று, கொல்லிமலையைக் கைப்பற்றிக் கொண்டான். அதியமான் தனது தகடூர் போய் மதிலினுள் மறைந்திருந்தான், மலையமானும் பெருஞ்சேரலும் தகடூர்மேற் படையை நடாத்தி மதிலை வளைத்தனர். அதியமான் மதிலுள்ளிருந்து வெளிவந்து எதிர்த்துப் போர்செய்யாதிருந்தனன். பகைவர் மதிலினை வளைத்தலை

யும் அதியமான் வாளா இருத்தலையுங் கண்ட ஔவையார், அதியமானுக்கு அவனது ஆற்றலை எடுத்துக்காட்டிப் போரில் மனஞ்செல்ல ஊக்கமூட்டுதற்குக் கருதி, அவனை அணுகி, 'மலைச்சாரலிலுள்ள புலியானது சீறுமிடத்து, அதற்கு எதிர்நிற்க வல்ல மான்கூட்டமும் உளவோ? சூரிய மண்டலம் கொதித்து எழுமாயின், ஆகாயத்தினும் திசையின்கண்ணும் இருளுமுளதோ? அவைபோல, நீ போர்க்களம் புகுந்தால் இவ்வுலகத்தில் உனது நாட்டைக் கவர்ந்து ஆரவாரிக்கும் வீரரும் உளரோ?' என்று கூறினர்.

இதுகேட்ட அஞ்சி, வீரங்கொண்டு போர்விருப்புற்று அஞ்சாது பகைவரை ஓட்டுதற்கு மதிற்புறத்துப் போர்க்களம் புகுந்து, பகைவர் வேல் வரினும் விழித்த கண் இமையாது வீரதீரமோடு போர் உடற்றினன். அப்போது பகைவர் விடுத்த படைகள் பல அதியமானது மார்பினும் கழுத்தினும் முகத்தினும் பட்டுப் புண்படுத்தின; அவ்வமையத்தும் ஔவையார் அதியமான்முன் சென்று,"பெருந்தகாய், பெருஞ்சமர் புரிந்து நீ விழுப்புண் பட்டபடியால், உன்னோடு எதிர்த்த அரசர் பலர், தங்களுக்கு யுத்தத்தில் இறவாமையால் உளதாகும் குற்றம் நீங்கும்படி இப்போது உன் வாட்போரில் மாண்டனர். இனி நீ வருந்திப் போர் செய்து வெல்ல வேண்டுவது யாதுளது?" என்று பின்னரும் அவனை ஊக்கினர்.

அதியமான், அப்புண்பட்ட நிலையினும் தளராது போர்புரிந்தான்; இறுதியில் பெருஞ்சேரல் விடுத்த வேலொன்று, காற்றினுங் கூற்றினுங் கடுக வந்து, அதிகமான் அஞ்சியின் நெஞ்சிற் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. அதனால், அதியமான் சோர்ந்து தேரிற் சாய்ந்து உயிர்துறந்தான். அந்தோ! அவ்வமயத்து அவனது இன்னுயிர் நண்பரான ஔவை எய்திய கௌவையை எங்ஙனம் கூறுவது! புலவர் அவனது இன்குணங்களையெல்லாம் நினைந்து நினைந்து வருந்திப் பிரிவாற்றாது புலம்புகின்றவராய், "சோறு எல்லார்க்கும் பொதுவாதலால், இது சிறு அளவினதாக உள்ளபோதும், மிகப் பல கலத்தோடும் பலரோடுங் கூட உண்பான்? அது கழிந்ததே! மிக்க அளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப்பலரோடுங் கூட உண்பான்; அது கழிந்ததே! உணவிருக்கும் இடமுழுதும் எங்களுக்கு (உண்டு களிக்க) அளிப்பான்; அது கழிந்ததே! அம்பும் வேலும் தைத்து உருவு மிடமாகிய போர்க்களம் முழுதும் தான் சென்று நிற்பான்; அது கழிந்ததே! நறுமண

முள்ள தன்னுடைய கையால் எம்முடைய தலையைத் தடவி அன்பு செய்வான்; அது கழிந்ததே! அதியமான் மார்பகத்துத் தைத்த வேல், அவன்மார்பில் மாத்திரம் தைத்ததன்று; அது பாணரது பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவித் தன்னுற் புரக்கப்படும் சுற்றத்தாரது கண்ணின் கருமணிஒளி மழுங்கப் புலவரது நாவின்கண்ணேயும் போய் விழுந்தது. எமக்கு ஆதாரமாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ! இனி, இவ்வுலகத்தில் பாடுவாருமில்லை; பாடுவார்க்கொன்று ஈவாருமில்லை; குளிர்ந்த நீர்த் துறைக்கண்ணே பூக்கும் பகன்றைப்பூ, பிறரால் பறித்துச் சூடப்படாமல் வீணே கழிந்தாற் போல, பிறர்க்கு ஒருபொருளைக் கொடாது மாய்ந்துபோகும் உயிர்கள் மிகப்பல; அத்தன்மையதே எம்மரசன்!"; "அவனையின்றிக் கழிக்கின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக" என வருந்திக்கூறினர்; பின்னர், துஞ்சிய அஞ்சியை ஈமச்சிதையில் ஏற்றி எரியூட்டினர்; ஈமத்தீ அவனது உடலிற் பற்றியது. அப்போது ஔவையார், "ஈமத்தீ இவனுடல் சிதையாமல் அவியினும் அவிக; அன்றிச் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஞாயிற்றை ஒப்போனது புகழுடம்பு ஒரு காலத்தும் அழியாது," என்று அவன் புகழுடம்பை வியந்து கூறி, இரங்கினவராய்த் தகடூரின்கண்ணே தங்கியிருந்தனர்.

I பொருள்கூறுக :—

பாணர், நல்லிசைப்புலமை, மெல்லியலார், விழுமிய, பொன்னு, விறலி, வள்ளல், பரிசில், கங்கு பணிக்களரி, கரி, பரி, கதுவாய், கூற்றம், விழுப்புண் சிதை.

II வாக்கியங்களில் அமைக்க :—

உயர்வு தாழ்வு, மறுவற்ற மதிபோல், திருவுடைமன்னர் முறியடித்து, வீரதீரம், கண்ணின் கருமணி, புகழுடம்பு.

III விடைகொடு :—

1. தமிழ் நாட்டின் எல்லைகள் எவை?
2. பண்டைத் தமிழ் நாட்டின் தன்மைகள் யாவை?

3. தகடூரை ஆண்ட மன்னன் யார் ?

4. அதியமான் அஞ்சி ஔவையாருக்குப் பரிசில் அளியாது நீட்டித்தது ஏன்?

5. பரிசில் பெற்ற ஔவை அதியமானை எவ்வாறு வாழ்த்தினுள் ?

6. அதியமான் கருநெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுக்கக் காரணமென்ன ?

7. நெல்லிக்கனியின் சிறப்பையறிந்த ஔவை அதியமானை எவ்வாறு வாழ்த்தினுள் ?

8. ஔவையார், தொண்டைமான் வீரத்தினும் அதியமான் வீரமே சிறந்ததென எவ்வாறு புலப்படுத்தினுள் ?

9. அதியமானது போர் விருப்பத்தையும் அஞ்சாமையையும் ஔவையார் எவ்வாறு தொண்டைமானுக்கு எடுத்துக் கூறினுள் ?

10. அதியமான், மலையமான் திருமுடிக்காரியுடன் போர்செய்யக் காரணமென்ன ?

11. அதியமானது வாட்கள் ஏன் கதுவாய் போய் வடிவிழந்தன ?

12. அதியமானது களிற்றுகளின் பூண்கள் ஏன் கழன்றன ?

13. அதியமான் கோபத்துக்காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ ? என்று ஔவை கூறக் காரணம் யாது ?

14. அதியமான் எப்பொழுது தகடூர் மதிலினுள் மறைந்தான் ?

15. மதிலினுள் மறைந்த அதியமான் வீரங்கொண்டு போற்செய்யக் காரணம் யாது ?

16. அதியமான் இறந்ததும் ஔவைதன் கௌவையை எங்ஙனம் வெளியிட்டாள்?

# 7. செல்வத்தின் இரகசியம்

(நேமம், நா. நடராசன் அவர்கள், M. A.)

இந்தியா ஏழைகள் மிகுந்த நாடு. இந்தியருட் பெரும்பாலர் வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கியுள்ளனர். அவர்கள் வறுமை நீங்கச் செல்வம் வேண்டும்; அறியாமை நீங்கக் கல்வி தேவை. கல்வி பரப்பச் செல்வம் வேண்டும். எனவே, மக்களுடைய வறுமையும் அறியாமையும் அகலச் செல்வது செல்வமேயாகும். இதனை நன்குணர்ந்த அரசாங்கத்தார் செல்வ நிலையை உயர்த்தத்தகும் பொருளாதாரத் திட்டங்களை ஆய்ந்துவருகின்றனர். மக்களது வாழ்க்கையை வளப்படுத்துவதே பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாக அமைதல் வேண்டும். இவ்வடிப்படை நோக்கத்தை எவ்வாறு நிறைவேற்றுவது ?

அமெரிக்கா செல்வம் மிகுந்த நாடு என்று கூறப்படுகிறது. அங்கு ஓராண்டில் காணப்படும் பொருள் உற்பத்தியின் அளவு, அதே மக்கள் தொகையுள்ள வேறு எந்த நாட்டையும் விட மிகுதியாகும். ஏறக்குறைய ஒவ்வோர் அமெரிக்கனும் உற்பத்தி செய்யும் பொருள் பிறநாட்டுத் தொழிலாளி உற்பத்தி செய்தலைவிட மிகுதியாகும். மேலும் ஓர் அமெரிக்கத் தொழிலாளிக்கு ஒரு மணி நேர வேலை மூலம் கிடைக்கக் கூடும் பணம் வேறெந்த நாட்டுத் தொழிலாளிக்கும் கிடைப்பதைவிட மிகுதியாகும். ஒரு நாளில் பத்து அல்லது பதினைந்து ரூபாய் ஊதியம் பெறும் அமெரிக்கத் தொழிலாளர் லட்சக் கணக்கானவர். மோட்டார்ப் பேரரசர் எனப் புகழப்பெறும் ஹென்றி போர்டின் தொழிற்சாலையில் வேலை புரியும் தொழிலாளர் பலர் சொந்தத்தில் மோட்டார்களை வைத்துள்ளனர் என்பது, அந்நாட்டுத் தொழிலாளரது வாழ்க்கை வளத்தினை அங்கைக் கனியெனக் காட்டுகிறதன்றோ ?

இங்ஙனம் அமெரிக்கத் தொழிலாளர் வளத்துடன் இருக்கக் காரணம் யாது? உற்பத்திப் பெருக்கமே உற்ற காரணமாகும். பொருள் உற்பத்திப் பெருக்கமே செல்வ வளர்ச்சிக்குரிய இரகசியம் ஆகும். எனவே, உற்பத்திப் செய்யப்படும் பொருள்களின் அளவு மிகுதிப்பட வேண்டும்; மிகுதிப்படச் செல்வம் பெருகும். உற்பத்திப் பெருக்கத்திற்குத் தொழிலாளியின் உழைப்பாற்றலும் நாட்டின், மூலப்பொருள்

களுமே சிறப்புக் காரணங்கள் ஆகும். கடந்த ஒரு நூற்றாண்டாக அமெரிக்காவில் பல இயந்திரங்கள் தொழில் உற்பத்திக்குப் பயன்படுத் தப்பட்டு வருகின்றன. மனித ஆற்றலுக்குத் துணை செய்யும் நீராவிச் சக்தி, மின்சாரச் சக்தி முதலியன பொருள் உற்பத்தியைப் பெருக்கி வருகின்றன. ஆகவே பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தொழி லாளர் மட்டுமே காரணர் அல்லர். அவர்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ள இயந்திரங்களும், அவை இயங்குதற்குக் காரணமான பிற சக்தி களும் காரணமாகும். தொழிலாளர் ஆற்றலும் இயந்திர வலியும் இயற் கைச் சக்திகளின் ஆற்றலுமே **மூலதனம்** (Capital) என்று சொல் லப்படும்.

மனிதனது உழைப்பாற்றல் பொருள் உற்பத்திப் பெருக்கத்திற் சிறப்பிடம் பெருகிறது. ஆயின், அவ்வாற்றலைப் பயன்படுத்த உதவும் இயற்கை வசதிகள் இல்லை எனின், உழைப்பாற்றல் மட்டும் இருந்தும் பயன்படாது. ஆகவே, உழைப்பாற்றலைப் பயன்படுத்த நாட்டில் பல துறைகள் இருத்தல் வேண்டும். உழைப்பு, மூலதனம், பொருளா தாரத் துறைகள் முதலியன நாட்டின் செல்வத்தை வளருமாறு செய் கின்றன. ஆதலின், உற்பத்திப் பெருக்கம் என்பது உழைப்பு, உழைப் புத் துறைகள், இயந்திர சாதனங்கள் என்பவற்றைப் பொறுத் துள்ளது.

இயந்திரங்கள் இயற்கைச் சக்திகளை மனிதனுக்கு அடிமையாக்கி விட்டன. இயந்திரம் பல ஆட்களின் வேலையை ஒருவர் மேற்பார்வை யிற் செய்கின்றது; மேலும், பலர் சேர்ந்தும் செய்ய முடியாத வேலை களையும் செய்து முடிக்கின்றது; ஒரு வேலையைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் விரைவாய்ச் செய்கிறது. இதுவே இயந்திரத்தின் உற்பத்தி ஆற்றலுக்கு முக்கிய காரணம்.

இக்கால நாகரிகம் இயந்திர ஆற்றலை அடிப்படையாய்க் கொண் டது. இயந்திரம் சமூக நன்மைக்கு உதவியாயிருக்க வேண்டும். உழைப்பாளியின் நலன், பெருமை ஆகிய இரண்டும் பாதுகாக்கப்படல் வேண்டும். உற்பத்திப் பெருக்கத்துக்குத் தேவையான தொழில் துறைகளையும் கருவிகளையும் ஏற்பாடு செய்வதற்கு மூலதனம் தேவை. இந்த மூலதனம் தொழில் துறைகளை வளர்க்கிறது. ஆதலின் பொருள் உற்பத்தியின் நன்மைகளில் அதற்கு ஒரு பங்குண்டு. உற்பத்தியின் பயனைக் கீழ்க்காணும் நான்கு வகையாகப் பங்கிடல் வேண்டும்: (1)

தேய்மானம், (2) நிருவாகம், (3) மூலதனச் சேமிப்பு, (4) தொழிலாளர் ஊதியம்.

ஒரு நாட்டின் செல்வநிலைக்கும் மக்கள் தொகைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மக்கள் தொகை மிகக்குறைவாக இருப்பின் செல்வ உற்பத்தி தடைப்படும். நாட்டின் செல்வ உற்பத்தியினைல் காப்பாற்றக் கூடும் அளவுக்கு மிகுந்த மக்கள் இருத்தலும் கெடுதலேயாகும். இவ்வாறு மக்கள் தொகை பொருளாதார நலனைப் பாதிக்கிறது.

செல்வத்தைப் பெருக்கி, அதனை நேரிய முறையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டும். ஒருநாட்டின் செல்வத்தை ஒரு பெரிய ஏரிக்கும் அதன் சமூக, பொருளாதாரத் துறைகளைப் பெரிய வாய்க்கால்களுக்கும் ஒப்பிடலாம். நாட்டின் செல்வம் பிரிந்து போகும் பெரிய வாய்க்கால்கள் பின் வருவன: (1) குடியானவர் ஊதியம், (2) தொழிலாளர் ஊதியம், (3) வணிகர் வருமானம், (4) பலதுறை அலுவலர் பெறும் ஊதியம், (5) குத்தகை, வட்டி எனப் பலவாறு முதலுக்குக் கிடைக்கும் ஊதியம் முதலியன.

முதலாளித்துவ முறையில், சமூகத்தின் செல்வத்தில் ஒரு பெரும் பகுதியை ஒரு சிறு கூட்டத்தார் எடுத்துக் கொள்கின்றனர். பெரும்பாலர்க்குச் சிறிய பகுதி தரப்படுகிறது. இதனுற்றான் குழப்பமும் பூசலும் தொழிலாளர் வேலைநிறுத்தங்களும் உண்டாகின்றன. நாட்டில் எல்லோருக்கும் நல்வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் இன்றியமையாதது. ஒரு நாட்டின் பொருளாதார நிலையை, அதன் மக்களின் சராசரி வருமானத்தால் குறிப்பிடலாம். அந்த நாட்டில் உற்பத்தியாகும் விவசாயப்பொருள்கள், இயந்திரசாலைச் சரக்குகள் இவற்றை மதிப்பிட்டு, தர சமூக வேலைகளையும் மதிப்பிட்டு மொத்தம் கூட்டி மக்கள் தொகையால் வகுத்துவரும் ஈவுக்கு இந்தப் பெயர் தரப்படுகிறது. இதற்கும் மக்களது வாழ்க்கை நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவற்றினை உயர்த்தலே நாட்டின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். இப்பொழுது உள்ளவாறு சொத்தையோ, பிறப்பையோ, செல்வாக்கையோ மனத்திற் கொண்டு செல்வப் பிரிவினை செய்வது ஒழுங்காகாது, அவரவர் அறிவுக்கும் உழைப்பின் தகுதிக்கும் ஏற்றவாறு, ஆனல் எல்லோரும் சுகவாழ்வு வாழத்தக்க முறையில் ஊதியம் கொடுக்கப்பட வேண்டுவது இன்றியமையாதது. இந்த நாட்டிற் பிறந்த எந்தத் தனிமனிதனும் வீடின்றியோ - உணவின்றியோ - உடை

யின்றியோ-வேலையின்றியோ - போதிய வாழ்க்கை வசதிகள் இன்றியோ வாட்டமுறுதல் கூடாது. இந்த உயிர் நாடி எண்ணத்தை உள்ளத்திற் பதித்து அரசாங்கமும் பொருளாதார அறிஞர்களும் நாட்டிற்கு நலம் விளைக்கும் திட்டத்தை வகுத்தல் வேண்டும்; வகுத்து அதனை நடைமுறையில் நடத்திவைத்தல் வேண்டும்.

சீன நாட்டுத்தலைவருட் சிறந்த **சன்யாட் சென்,** மக்களுக்கு இருக்கவேண்டும் மூன்று கொள்கைகளை வகுத்தார். அவை (1) நாட்டுப்பற்று, (2) குடியரசு, (3) வாழ்க்கை வசதி என்பன. "மனித உணர்ச்சி மதிக்கப் படவேண்டும். மனிதனுக்காக நாடு; மனிதனுக்காக அரசு. சுருங்கக் கூறின், மனிதவாழ்க்கைக்கே எல்லாம். எனவே, மனிதனது வாழ்க்கை வசதியோடு நடைபெறல் வேண்டும். அவ்வசதியை ஏற்படுத்துவதுதான் அரசின் கடமை. அரசு தன் கடமையைச் செய்யத் தவறினால், அறிவுள்ள குடிகள் தாங்களாகவே தங்கள் வாழ்க்கை வசதியை அமைத்துக்கொள்வார்கள். அத்தகைய நிலை ஏற்படுமுன், அரசு குடிகளுக்கு நலன் புரிதல் வேண்டும்," என்று உருக்கமாகப் பேசிய பேச்சுக் கவனிக்கத் தக்கது.

இன்று இந்தியாவில் உணவுப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை உணவு உற்பத்திக்கென்று செலவிடுகிறது. ஆயின் நமது உணவு உற்பத்தி பெருகி, இறக்குமதியின் மதிப்புக் குறைந்ததாகத் தெரியவில்லை. உணவு இறக்குமதியால் நமக்குள்ள வெளிநாட்டு நாணயச் சொத்தும் நமது கையிருப்புப் பணமும் பெரிய அளவில் சுருங்கிவிட்டன. பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்க நாம் செலவு செய்துள்ள பெருந்தொகை நம்மிடம் இருந்திருப்பின், நாட்டின் கைத்தொழில் வளர்ச்சித் திட்டங்களை நடை முறையிற் கொணர்ந்திருக்கலாம். நமது தேவைக்குத் தகுந்த அளவு உணவு உற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பற்றுக் குறையை விரைவில் நீக்க உழைக்கவேண்டும். நாம் ஒவ்வோர் அடி நிலத்தையும் பசிய வயலாக்க முற்படல் வேண்டும்; பெருவாரியான நீர்த்தேக்கத் திட்டங்களைக் கவனித்து நிறைவேற்ற வேண்டும். அவற்றால் உழவுக்குப் பாதுகாப்பு உண்டாதலுடன் உற்பத்தியும் பெருக வழியுண்டு. இந்த நீர்த் தேக்கங்களால் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு சிற்றூர்களிலும் சிறிய கைத்தொழில்கள் பலவற்றைத் துவக்கி நடத்தலாம். பயிர்த்தொழில் நிலைமை உயரவேண்டுமாயின்

உழவர்க்குப் பயிர்த்தொழில் பற்றிய கலைகளைக் கற்பிக்கவேண்டும்; உற்பத்திக்கான முயற்சிகளையும், காலத்தைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளும் முறையையும் அவர்கட்கு அறிவுறுத்த வேண்டும். விஞ் ஞானத் துறையில் வேளாண்மை நடைபெறத் திட்டம் வேண்டும்.

நாம் முதலில் பணத்தைக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து இயந் திரங்களை வாங்கவேண்டும்; அவற்றைப் பயன் படுத்தும் அறிவு பெறவேண்டும்; ஒவ்வொருவரும் சிக்கன வாழ்க்கை நடத்தி மிகுந்த பொருளைச் சேமித்துக் கைத்தொழில் - உழவுத் தொழில்கட்கு மூல தனமாக உதவ வேண்டும். நம் நாட்டுச் செல்வம் நம் நாட்டிலேயே உலவத் தக்கமுறையில் நம் நாட்டுப் பொருள்களையே - வாழ்க்கைக் குத் தேவையானவற்றை - வாங்கவேண்டும்; ஆயின், நாட்டு முன் னேற்றத்துக்கான வழியில் பொருளைச் செலவிட வேண்டும்; ஆலைத் தொழில் ஆராய்ச்சியைச் செய்ய முற்பட வேண்டும்; இந்நாட்டிற் பிறந்த முதலாளி - தொழிலாளி - அரசாங்க அலுவலர் - உழவர் முத லிய அனைவரும் நாட்டு நலனை - நன்கு கருதித் தத்தம் கடமையைத் தவறாது செய்தல் வேண்டும். ஒருவரை ஒருவர் சுரண்ட முற்படுதல் நாட்டிற்குப் பெருங்கேடு விளைப்பதாகும். நாட்டில் வறுமை ஒழிய மூலதனம் பெருக வேண்டும்; பயிர்த் தொழிலும் கைத்தொழிலும் வளம் பெறவேண்டும். இவற்றுக்கு அரசாங்கமும் குடிமக்களும் மன மொத்து உழைக்க வேண்டும். முடியாதது உண்டா?

I பொருள் தருக:—

ஆய்ந்து, ஊதியம், அங்கை, குடியரசு.

II வாக்கியங்களில் அமைக்க:—

நன்குணர்ந்த, அங்கைக்கனி. ஒப்படைக்கப்பட்டுள்ள, அத்தகைய, வேளாண்மை.

III விடை எழுதுக:-

1. பொருளாதாரத் திட்டத்தின் நோக்கம் யாது?

2. மோட்டார்ப் பேரரசர் யார்?

3. செல்வத்தின் இரகசியம் யாது?

4. எவை மூலதனம் எனப்படும்?

5. நாட்டின் செல்வத்தை வளரச் செய்பவை எவை?

6. இயந்திரங்களால் ஏற்பட்ட நன்மைகள் எவை?

7. உற்பத்தியின் பயனை எவ்வாறு பங்கிடவேண்டும்?

8. நாட்டின் செல்வம் எவ்வழிகளில் செலவிடப்படுகிறது?

9. தொழிலாளர் வேலை நிறுத்தங்களுக்குக் காரணமென்ன?

10. நாட்டிற்கு நலம் விளைக்கும் திட்டங்களை வகுப்போர் கவனிக்க வேண்டியவை எவை?

11. சன்யாட்சென் மக்களுக்கென வகுத்த மூன்று கொள்கைகள் எவை?

12. அரசின் கடமை யாது?

13. உணவுப் பஞ்சத்தைப் போக்கும் வழிகள் யாவை?

14. நம் நாடு நலனுறச் செய்யவேண்டியவை யாவை?

# 8. கிராமச் சிறு கைத்தொழில்

( ச. முத்தையா அவர்கள் M. A. )

நம் நாட்டினரிடையே 'எல்லாம் கர்ம பலன்' என்று முடிவு கட்டும் குணம் மிகவும் வலுத்து நிற்கின்றது; 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்,' என்ற வாழ்க்கைத் தத்துவமே தலையெடுத்து உலவுகிறது. 'எல்லாம் அவன் செயல்,' என்று எந்தக் காரியத்திற்கும் வியாக்கியானம் கொடுப்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது. கஷ்டப்படுவோர் அக்கஷ்ட நிவர்த்திக்கான முயற்சி செய்வதில்லை. அக்கஷ்டம் தலையெழுத்தின்படியாம் என்று அநேகர் சும்மா இருப்பது கண்கூடு. இப்படிப்பட்ட போலி வேதாந்தம் பேசிப்பேசி நம்மவர் பலர் விண் பொழுது போக்குகின்றனர். அவர்கள் தங்கள் பொருள் நிலையை விருத்தி செய்ய விரும்புகிறார்களில்லை; அதற்காக முனைந்து முயற்சி செய்கிறார்களில்லை. நகரங்களிலிருக்கும் மாந்தர்களைவிடக் கிராமவாசிகள் இந்த விஷயத்தில் பெரிய குற்றவாளிகளாய் இருக்கிறார்கள்.

கிராமவாசிகள் ஓர் ஆண்டில் சுமார் 4 அல்லது 6 மாதங்களே வேலை செய்கிறார்கள். தக்க இயந்திரங்களின் உதவியைக் கொண்டு சாஸ்திரீயமான முறையில் அதே வேலையை 40 நாட்களுக்குள் செய்து விடலாமென்று அறிஞர் கூறுகின்றனர். நல்ல நீர்ப்பாசன வசதிகள் இல்லாத இடங்களிலே வருஷத்துக்கு 150 முதல் 270 நாட்கள் வரையில் வீண் பொழுது போக்க வேண்டியிருக்கிறது எனக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் சிலேட்டர் என்பார், 'வருஷத்தில் பன்னிரண்டில் ஐந்து பங்கு (5/12) காலத்தைத் தான் விவசாயி பயனுள்ளதாகச் செலவிடுகிறான்,' எனக்குறிப்பிடுகிறார். அரசாங்க விவசாயக் குழுவின் அங்கத்தினர், "பொதுவாகக் கூறுமிடத்து விவசாயி மிகக் குறைந்த பட்சம் இரண்டு முதல் நான்கு மாதம் வீண்பொழுது போக்குகிறான்,' என அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். பம்பாய் டெக்கானைப்பற்றி எழுதியுள்ள திரு. கீட்டிஞ்சு, 'விவசாயி சாதாரணமாக 180 முதல் 190 நாள்கட்குமேல் வேலை செய்யக்காணேன்,' என எழுதியுள்ளார். திரு. கால்வர்ட் என்பவர், 'பஞ்சாபு மாகாணத்தில் சுமார் 150 நாள்கட்கு மேல் விவசாயிகட்கு வேலை இல்லை,' எனக் கண்டிருக்கிறார். ஐக்கிய

மாகாண பாங்கு விசாரணைக் கமிட்டியார், 'விவசாயிகட்கு 200 நாள் கட்கு மேல் வேலை இல்லை,' எனக் கூறியுள்ளார்.

எனவே, வேலை செய்த நாட்கள் தவிர ஏனைய நாட்களை விவசாயி கள் வீணே கழிக்கின்றனர்கள். விவசாயத்தில் மாத்திரம் போதிய வரும் படி கிடைப்பது அரிதாயிருக்கிறது. எனவே, திரு. டார்லிங்கு என்பார் கூறியுள்ளபடி விவசாயி கடனுண்டு வாழாமல், வறுமையால் வருந்தாமல் இருக்கவேண்டுமானால், ஏதேனுமோர் உதவிக் கைத் தொழிலைக் கைக்கொள்ளவேண்டும். ஐரோப்பிய நாடுகளில், முக்கிய மாகப் பிரான்சு, ஜெர்மனி, இட்டாலித் தேசங்களில், ஆடுமாடு போஷணை செய்தல், பன்றி வளர்த்தல், கோழியைப் பெருக்கல் முத லியவை முக்கியமான கிராமக் கைத்தொழில்களாகும். அவை நல்ல பயனையும் தருகின்றன.

இந்திய விவசாயிகட்கு ஏற்றனவாக, அவர்களின் விவசாய முயற் சிக்கு இடையூறு இல்லாதனவாக, வருவாய் தரத்தக்கனவாக, சில கைத்தொழில்களை ஏற்படுத்த வேண்டும். சர் ஆல்பிரட் சேடர்டன் ( Sir Alfred Chatterton ) கூறியுள்ளது போல இந்தியாவில் அநேக சிறு கைத்தொழில்கள் விருத்தியாவதற்கு ஏற்ற வசதிகள் உள் ளன. கடந்த நூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவில் எல்லா இடங் களும் எல்லாக் கைத்தொழிலிலும் சிறந்திருந்தன. கிழக்கிந்தியக் கம் பெனியாரின் ஆதரவில் டாக்டர் புக்கனன் ( Dr. Buchanan ) என் பவர் வட இந்தியா தென்னிந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கைத்தொழில்களின் நிலைமையைப்பற்றி விவரமாய் எழுதியிருக்கிறார். அக்குறிப்புகள் 1838-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அவற்றைப் பார்த்தால் நாடெங்கும் எல்லாத் தொழில்களும் செய்யப்பட்டன என் பதை அறியலாம். குறித்த சில ஜாதியாரே குறித்த தொழில்களைச் செய்யலாம் என்ற கட்டுப்பாடு அவ்வளவாக அப்போதில்லை. உதா ரணமாகப் பார்ப்பனப் பெண்டிர் தவிர மற்ற எல்லாச் சாதிப் பெண் களும் நூல் நூற்பதையும், பட்டு இழைப்பதையும், தமது வேலையாக வீடுகளில் செய்து வந்தார்களென அவர் குறிப்பிட்டிருக்கிறார். அத் தொழில்களெல்லாம் அரசினர் நோக்கு முறை வேறுபாடுகளாலும், மில்களின் போட்டியாலும் அழிந்தொழிந்து போயின; வறுமை மிகுந் தது. எனவே, அக்கைத்தொழில்களைப் புத்துயிர் பெற்று எழுந்துல வும்படிச் செய்ய வேண்டுவது இன்றியமையாதது.

கைத்தொழில்களை உயிர்ப்பிக்கும் போதும், துவக்கும் போதும் சில விஷயங்கள் கவனிக்கற்பாலன. சிறு கைத்தொழிற்சாலைகளில் உண்டாக்கப்படும் பொருள்கள் மிக்க பிரயோஜனமானவையாக இருக்க வேண்டும். திரு. உல்பு (Mr. Wolf) என்பவர், "இங்கிலாந்தில், இந்தியப் பொருள்கள் ஜப்பான் பொருள்களைப்போல அவ்வளவு நன்ருக விற்பதில்லை. இந்தியப் பொருள்கள் அழகியவாகவும் செவ்வையாகவும் செய்யப்பட்டிருப்பினும், ஜப்பான் பொருள்களைப்போல அத்துணை உபயோகமானவையாக இல்லை" எனக் குறிப்பிட்டிருக்கிருர். எனவே, கிராமங்களில் செய்யப்படும் பொருள்கள் மிகவும் பிரயோஜனமானவைகளாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாகக் கிராமங்களில் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் பெரும்பாலான பாகம் தொழிலாளியின் உழைப்பினுல் ஏற்பட்டதாய் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட பொருள்களை உண்டாக்கினுற்ருன் தொழிலாளிக்குத் தக்க ஊதியம் கிடைக்கும். அந்தந்த இடத்தில் எந்த மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்கின்றனவோ, அவற்றிற்கேற்ற பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டும். இங்குக் குறிப்பிட்டவைகளில் இரண்டாந் தன்மையைப் பெற்றுள்ளவை கண்ணுடி வளையல் தொழில் போன்றவை.

மூன்ருவதாகக் கவனிக்கவேண்டிய விஷயம் கிராமங்களில் மிக அழகிய, தனிப்பட்ட மனிதர் விரும்பத்தக்க, பொருள்களையே உற்பத்தி செய்யவேண்டுமென்பதே. சாதாரணமான, பெருவாரியான மக்கள் உபயோகிக்கிற, ஒரே மாதிரியான பொருள்களை இயந்திர உதவியால் அபாரமாக உற்பத்தி செய்து குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடும். அப்படிப்பட்ட பொருள்களைக் கிராமத்தினர் உற்பத்திசெய்ய முயலுவதில் பயனில்லை. விசேஷத் தன்மையதாய், ஒன்றைப் போல மற்ருென்றில்லாததாய் தனவந்தர் விரும்பக் கூடியதாய் உள்ள பொருள்களைக் கிராமங்களில் உற்பத்தி செய்தால், பெரும் பயன் கிட்டும். உதாரணமாக, இரத்தினக் கம்பளத்தை எடுத்துக் கொள்வோம். நெய்வோன் திறமைக்கேற்றவாறு பல வேறு விதமான அழகிய கம்பளங்கள் நெய்யலாம் அல்லவா?

சமீப காலம் வரையில் நீராவியையே இயந்திரங்களை இயக்குவதற்கு உபயோகித்தனர். இப்போதோ, மின்சார சக்தியின் உதவியால் கிராமங்களில் சிறு கைத்தொழிற்சாலைகள் எளிதில் ஏற்படுத்தலாம்.

கிராமங்களில் மிக முக்கியமாக வளர்க்கக்கூடிய கைத்தொழில் ஆடுமாடு சம்ரக்ஷணை. பால், பாலேடு வியாபாரத்தில் டென்மார்க்கு தேசத்தினர் மிக்க இலாபம் அடைகின்றனர். அவர்களைப்போல நாமும் நல்ல பசுக்களைச் செவ்வையாகப் போஷித்து, திரண்ட பாலைப் பக்கத்திலுள்ள பட்டினங்கட்கு அனுப்பலாம். வெண்ணெயை டின்களில் அடைத்து, நீண்ட தூரத்திலுள்ள இடங்கட்குக் கூட அனுப்பலாம். அம்மிருகங்களின் சாணம் முதலியவை தக்க எரு ஆகும். திரு. கீட்டிஞ்சு என்பவர், விவசாயிகட்கு இதுவே மிகச் சிறந்த தொழிலாகும் எனக் கூறுகிறார்.

'கோழி வளர்த்தல்' நல்ல தொழில். வற்றிய உடம்புடன் ஊர் முழுதும் திரிந்து வரும்படி கோழிகளை வளர்த்தல் அறிவுடைமையன்று. கோழிகட்கெனக் கூண்டுகள் தயாரித்து, நல்ல போஷணையில் வைத்து, நல்ல ஜாதிக் கோழிகள் வளர்த்தால், முட்டைகளைப் பக்கத்து ஊரிலோ அல்லது சற்றுத் தூரத்தில் உள்ள ஊரிலோ விற்று நல்ல ஊதியம் பெறக் கூடும்.

'தேனீ வளர்த்தல்' இலாபகரமான ஒரு தொழில். தேனீக்கட்கென நல்ல கூண்டுகள் தயாரித்து, நல்ல பூச்சிகளை விட்டு விட்டால், நிறையத் தேனைப் பெறலாம். சென்னையிலுள்ள கோகுலத்தாரும், சென்னை விவசாய டிபார்ட்மெண்டாரும் இதைப்பற்றிய முழுவிவரங்களையும் மகிழ்வுடன் தெரிவிப்பார்கள்.

விவசாயத்திற்கு வேண்டிய சிறு கருவிகளை ஆங்காங்குச் சிறு தொழிற்சாலைகளில் கிராமவாசிகள் செய்ய முயலவேண்டும். அப்போது தொலை தூரத்திலிருந்து கொண்டுவரும் தூக்குக் கூலி இல்லாது போகும்; நமது இஷ்டப்படி வேண்டிய கருவிகளைச் செய்து கொள்ளலாம்.

'பட்டுப் பூச்சி வளர்த்தல்' மிக நல்ல கைத்தொழிலே. ஆனால், அதை எல்லா விடத்திலும் செய்யமுடியாது. சீதோஷ்ண ஸ்திதி முதலியவை ஏற்றவையாக இருக்கு மிடங்களிற்றான் அத்தொழிலைச் செய்ய முடியும்.

'பூ, பழத் தோட்டங்கள் வைத்தல்' மிகப் பிரயோசனகரமானது. பல இடங்களில் காய் கறிகளைப் பயிராக்குவதில்லை ; இனிய பல பழங்களை உண்டாக்குவதில்லை; அழகிய மணமுடைய பூச்செடிகளை வளர்ப்பதில்லை. இந்தத் துறையில் கிராமவாசிகள் முயன்றால், நல்ல இலாபம் பெறலாம்.

இவையல்லாமல், குறிப்பிடத்தக்க சிறு கைத்தொழில்கள் எத்தனையோ உள. சரிகை தைத்தல், துணிகளில் பூ வேலை செய்தல், அரக்கு வேலை செய்தல், நெட்டி வேலை செய்தல், விளையாட்டுச் சாமான்கள் செய்தல், மூங்கில் பிரம்பு சாமான்கள் செய்தல், கயிறு திரித்தல், பின்னல் வேலைசெய்தல், பீடி, சுருட்டு, சிகரெட்டுச் செய்தல், கண்ணாடி வளையல் செய்தல், மரச் சாமான்கள் செய்தல், கம்பளி ஜமக்காளம் நெய்தல், மா அரைத்தல், நெல் குற்றல், எண்ணெய் ஆட்டல், பழங்களையும் பழங்களாலான பண்டங்களையும் டின்களிலடைத்து அனுப்பி வியாபாரஞ் செய்தல், மண் பாண்டங்கள் செய்தல், தாவரப் பொருள்களிலிருந்து சாயம் இங்கி வர்ணம் முதலிய பொருள்களை உற்பத்தி செய்தல், பொத்தான்கள் செய்தல், பென்சில் பேனுக்கட்டை முதலியன செய்தல், எனுமல் சாமான்கள் செய்தல், சோப்பு வாசனைத் திரவியங்களைச் செய்தல், சர்க்கரை செய்தல், கத்தி முதலிய சாமான்கள் செய்தல், தீக் குச்சி செய்தல், தோல் சாமான்கள் செய்தல், பனியன் கால் மேல்ஜோடு முதலியவைகளைப் பின்னல், காகிதஞ் செய்தல், பிரஷ் செய்தல் (Brush Making) முதலிய பலவாகும். ஒவ்வொரு தொழிலையும் பற்றிய குறிப்புகளையும் இங்கே விரிவாக எழுதுவதற்கிடமில்லை.

எனவே, கிராமவாசிகள், தங்கள் நேரத்தை வீணுக்காது, பல துறைகளில் புகுந்து பல தொழில் மூலமாகவும் பொருள் விருத்தி செய்தால், இல்லாமை இல்லாததாகி விடும்.

I பொருள் எழுதுக:--

வியாக்கியானம், முனைந்து.

II வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக :—

வாழ்க்கைத் தத்துவம், உயிர்ப்பிக்கும் போது.

III. விடை எழுதுக:—

1. கிராம வாசிகள் எந்த விஷயத்தில் பெருங்குற்றவாளிகளாய் இருக்கிறார்கள் ?
2. கிராமவாசிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலையில்லை என்பது எவ்வாறு விளங்குகிறது ?
3. எவை முக்கியமான கிராமக் கைத்தொழில்களாகும் ?
4. டாக்டர் புக்கனன் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் யாவை ?
5. கைத்தொழிலகளை உயிர்ப்பிக்கும்போது கவனிக்க வேண்டியவை எவை ?
6. கிராமவாசிகளுக்குரிய கைத்தொழில்கள் எவை ?

# 9. நிலக்கரி

[திருவாளர் R. K. விசுவநாதன் அவர்கள், எம். ஏ.]

சுமார் மூப்பது கோடி ஆண்டுகளுக்கு முன்னர், நிலத்துள் புதைத்து வைத்த பொருள் நிலக்கரி. இதை யார் புதைத்து வைத்தார்கள்? இது எப்படி உண்டாயிற்று? என்பவை பற்றிய உண்மை நெடுநாள்வரை மறைபொருளாகவே இருந்து வந்தது. அண்மையில் இதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். கதிரவனுடைய ஆற்றலைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் இந்த நிலக்கரிக்கு அடிப்படைப் பொருள் மரங்களும் மற்றத்தாவரங்களுமே. உலகில் பல இடங்களில் இருந்த பெரிய காடுகள் அழிந்து மரங்கள் விழ, காலப் போக்கில் அவை மண்ணால் மூடப்பட்டிருக்க வேண்டும். நிலப்பரப்பின் மேடு பள்ளங்கள் மாறும்போது இவை யனைத்தும் நிலத்திற்குள் ஆழப் புதைந்திருக்க வேண்டும். மேலும் மேலும் தாவரங்கள் நசிக்கும் போது அவற்றிற்கும் இத்தகைய நிலையே ஏற்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு கோடிக் கணக்கான ஆண்டுகளாக நிலத்தின் வெப்பத்துக்கும் இறுக்கத்துக்கும் (Pressure) உள்ளாகி வந்ததன் பயனாக இத்தாவரங்களெல்லாம் பல மாறுதல்கள் அடைந்து நிலக்கரியாக மாறி இருக்கின்றன என்று நிலக்கரி ஏற்பட்டதற்கு விஞ்ஞானிகள் காரணம் கூறுகிறார்கள். சில கரிச் சுரங்கங்களில் இலை பழம் முதலியவற்றின் உருவங்களை யொத்த கரித்துண்டுகள் காணப்படுவதே இதற்குப் போதிய சான்றாகும். மற்றும் நிலக்கரியைச் சோதிக்கும் போது தாவர இனத்துக்குரிய குழல் நரம்பு முதலியவை எல்லாம் நன்கு புலனாகின்றன. கண்ணாடிக் குடுவைக்குள் மருந்தைப் பேணி வைத்திருப்பது போல நிலமடந்தை கதிரவனின் ஆற்றலை இதில் அடைத்து வைத்திருக்கிறாள். நிலக்கரிப் புதையல் முதலில் ஆங்கிலேயருக்குத்தான் கிடைத்தது. அவர்கள் இப்புதையலை வைத்துக்கொண்டு இத்துணைக் காலம் உலகத்தில் ஒரு பெரிய வல்லரசாக ஆட்சி செலுத்தி வந்தார்கள்.

நிலக்கரியை நிலத்திலிருந்து வெட்டி எடுப்பது எளிதான செயலன்று. நிலத்தினடியில் எந்த இடத்தில் நிலக்கரி இருக்கும் என்று ஐயுறுகிறார்களோ அங்கு முதலில் துளைத்துச் சோதித்துப் பார்ப்பார்கள். பிறகு கிணறுகள் இறக்குவது போல நிலத்தைத் தோண்டிக் கொண்டே போய்ப் பக்கத்திலுள்ள மண் சரியாமல் இருப்பதற்குத் தேக்குமரம் அல்லது இரும்புத் தகடு இவற்றைக் கொண்டு சுவர்கள்

அமைப்பார்கள். தோண்ட வேண்டிய இடம் பாறை நிலமாக இருக்கு மானால் வெடி மருந்தைப் பயன் படுத்திப் பாறையை உடைப்பார்கள். சதுப்பு நிலமாக இருந்தால் தண்ணீர் பிறிட்டுக்கொண்டு வரும். அகன்ற அவ்விடங்களில் தோண்டும் போது சிறிது ஆழம் சென்றவுடன் சிமிட்டியைச் (Ferro Concrete) செலுத்தி, பக்கங்களைக் கெட்டிப் படுத்திக்கொண்டு தான் மேலும் தோண்டுவார்கள் ; ஒரு மைல் ஆழம் வரை தோண்டப்பட்ட சுரங்கங்களும் உண்டு ; தோண்டிய பின் அடியி லிருந்து நாலாப்பக்கங்களிலும் செல்லுவதற்கு வழியை வைப்பார்கள். சுமார் ஒரு சதுர மைல் பரப்பு வரை சென்று கரியை வெட்டி எடுப்ப துண்டு. கரியைக் கையினால்தான் வெட்டி எடுக்க வேண்டும் ; கூடிய வரைபெரிய கட்டிகளாகவே வெட்டி எடுப்பார்கள். சுரங்கத் தொழில் தான் பிற தொழில்கள் எல்லாவற்றையும் விட இடர் நிறைந்தது. தொழி லாளிகளின் உடல் நலம் சுரங்கத்தில் விரைவில் கெட்டுவிடும். இச்சுரங் கங்களில் மூச்சு விடுவதற்கு நல்ல காற்று சுரங்கத்தினுள் செலுத்தப் படும், உள்ளிருக்கும் கெட்ட காற்று வெளியேறிச் செல்லுவதற்கும் வழி செய்யப்பட்டிருக்கும். சுரங்கத்துக்கு அடியில் வெளிச்சமும் கிடையாது. விளக்கை வைத்துக்கொண்டுதான் வேலை செய்ய வேண்டும். இதனால் தீப்பற்றுதல் எளிதில் ஏற்பட்டுப் பலர் மாண்டு வந்தார்கள். இச்சுரங்கங்களில் Mathane என்ற வாயு எப்பொழு தும் இருந்து கொண்டிருக்கும். இது விரைவில் நெருப்புப் பிடித்துப் பெரிய வெடியை உண்டாக்கும் தன்மை உடையது. இதனால் பலர் மாண்டார்கள். இவ்விடரை நீக்கியவர் 'டேவி' என்ற விஞ்ஞானி. இவர் புதுவகையாக ஒரு விளக்கை அமைத்து இவ்விடர் ஏற்படாத வாறு செய்தார். இவர் அமைத்த விளக்கில் ஓர் உலோகக் கம்பி சல்லடைக் குழாய் வடிவத்தில் திரியைச் சுற்றி நிற்கும். இச்சல்லடைக் கம்பியின் வெப்பம் கடத்தும் திறனால் (Heat Conductivity) வெளியிலுள்ள Methane வாயு வெடிப்பதற்கு வேண்டிய அளவு சூடேறுவதில்லை.

நிலக்கரியில் பலவகை உண்டு. அவற்றில் பீட் (Peat) என்று சொல்லப்படும் இளங்கரி, லிக்னைட் (Lignite) என்று சொல்லப்படும் பழுப்புக்கரி, பசைக்கரி (Bituminous Coal) கெட்டிக்கரி (Anthracite Coal) என்ற வகைகள் முக்கியமானவை. இவை அவற்றி லுள்ள கார்பன் (Carbon) பிராண வாயுக் (Oxygen) களின் விகிதங்களைப் பொறுத்து வேறுபடுகின்றன. நிலக்கரியில் எழுபது

முதற்கொண்டு தொண்ணூற்றிரண்டு சதம் வரை கார்பன் இருக்கும். பிராணவாயு சுமார் நான்கு சதம் முதற்கொண்டு பதினைந்து சதம் வரை இருக்கும். இவ்விரண்டையுந்தவிர, கந்தகம், வளிரம் (Nitrogen) இவையும் சிறிதளவுக்கு நிலக்கரியில் இருக்கும்; சிறிது ஈரமும் சாம்பலும் கலந்திருக்கும். நிலக்கரி உண்டாகிய காலத்தைப் பொறுத்து இவற்றின் அளவு எல்லாம் கரிக்குக்கரி மாறுபடுகின்றன. ஈரம் சாம்பல் இவற்றை நீக்கியபின்தான் நிலக்கரியின் மேல் கீழ் வகைகளை மதிப்பிடுவர். நிலக்கரியின் மதிப்பு அது கொடுக்கக் கூடிய சூட்டின் அளவைப் பொறுத்திருக்கிறது. ஒரு கிராம் நிறை தண்ணீரை ஒரு சென்டிகிரேடு உயர்த்துவதற்கு வேண்டிய சூட்டை அலகாகக் (Unit) கொண்டு பலவகைக் கரிகளின் சூட்டினளவு (Calorific Value) அளக்கப்படும். ஒரு கிராம் நிறையுடைய உயர்ந்த ரக நிலக்கரி சுமார் ஒன்பதினாயிரம் கலோரி (Calorie) சூட்டைத் தரும்.

நிலக்கரியை நீராவி எஞ்சின்களில் காற்றுப்பட அனல் மூட்டுவார்கள். இவ்வாறு நிலக்கரியை எரிப்பதில் சேதம் Temperature சீராக இராது. ஏனெனில் கரி எரிய மேலும் கரியைப் போட வேண்டியிருப்பதால் வெப்பம் உயர்ந்துகொண்டும் குறைந்து கொண்டும் இருக்கும். மற்றும் இதில் புகைத் தொல்லை வேறு உண்டு. புகையினால் சுற்றிலுமுள்ள காற்றுக் கெட்டு விடும். பெரிய ஆலைகள் இருக்குமிடங்களில் இப்புகையினால் மூச்சுவிடுவதற்கு நல்லகாற்று கிடைப்பது அரிதாகிவிடும். இதனால் மக்களின் உடல் நலம் குன்றிவிடும். இவ்வாறு பயன்படுத்தாமல் நிலக்கரியைக் காற்றுப்படாமல் பெரிய பாத்திரங்களில் (Retorts) எரித்தால் ஒரு வாயு வெளிப்படும். இதற்கு நிலக்கரி வாயு (Coal gas) என்பது பெயர். இதை எரிய வைத்துப் பல விதங்களில் சூட்டைப் பயன் படுத்தலாம். வீடுகளில் அடுப்பு மூட்டிக் கொண்டு தொல்லைப்படாமல் இவ்வாயுவைப் பயன்படுத்திப் பெரிய நகரங்களில் மேனாட்டார்கள் சமையல் வேலையைச் செய்வது வழக்கம். மின்சார சக்தியைக் கொண்டு போவதைப் போல இந்நிலக்கரி வாயுவை ஓரிடத்தில் உற்பத்தி செய்து, அதைக் குழாய்களின் மூலமாக வீடுகளுக்குக் கொண்டு செல்வது வழக்கம். விளக்கேற்றுவதற்கும் இவ்வாயு பயன்படும். மேனாட்டில் தெருக்களில் மின்சார விளக்குகள் ஏற்படுவதற்கு முன் இவ் வாயுவைக் கொண்டுதான் விளக்கேற்றி வந்தார்கள். நம் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள ஆய்வுச் சாலைகளிலும் (Laboratories) இவ்வாயுவைக் கொண்டுதான்

புன்ஸன் அடுப்பு (Bunsen burner) என்னும் கருவி வேலை செய்கிறது. இதில் ஒரு பங்கு நிலக்கரி வாயுவும் இரண்டு முதல் மூன்று பங்கு வரை காற்றுஞ் சேர்ந்து எரியும்.

நிலக்கரியைக் காற்றுப்படாமல் எரிக்கும் போது நிலக்கரி வாயுவுடன் நீராவியும் தார் எண்ணெயும் (Tar) வெளிவரும். இவற்றை நீக்கிய பின்னர்தான் நிலக்கரி வாயு பயன் படுத்தப்படும். இவற்றை நீக்குவதற்கு வாயுவை இரும்புக் குழாய்களின் மூலமாகச் செலுத்திக் குழாய்கள் குளிர வைக்கப்படும். தாரும் நீராவியும் குளிர்ந்து குழாயில் தங்கிவிட நிலக்கரி வாயுமட்டும் வெளியேறிவிடும். எரித்த பாத்திரங்களில் தங்கி நிற்கும் சுட்ட நிலக்கரிக்கு Coke என்பது பெயர். இதை எரித்தால் அது புகையாமல் நின்று எரிந்து அதிக சூட்டைக் கொடுக்கும். சுட்டகரி மற்றொரு வழியிலும் பயன் படுகிறது. இரும்பைப் பண்படுத்தும்போது இதையும் சேர்த்துக் கொள்ளுவார்கள். இக்காலம் மோட்டார் வண்டிகளில் எண்ணெய்க்குப் பதிலாகப் உலைக் காற்று (Producer gas) என்ற வாயுவே பயன்பட்டு வருகிறது. இதுவும் சுட்ட கரியிலிருந்துதான் பெறப்படுகிறது. சாதாரணக் கரியும் பயன் படும். கரியை நன்றாகச் சூடு செய்துகொண்டு அதன்மீது காற்றுச் செலுத்தப்படும். அப்பொழுதுதான் இவ்வாயு வெளிப்படும். பெட்ரோலைக் காட்டிலும் இவ்வாயுவை மலிவாகப் பெறலாம். பதினறு பவுண்டு கரியிலிருந்து வெளிப்படும் வாயுவைக் கொண்டு ஒரு காலன் பெட்ரோல் செய்யும் வேலையைப் பெறலாம். பதினறு பவுண்டு கரியின் விலை ஒரு காலன் பெட்ரோலின் விலையைவிட மிகக்குறைவு. போர்க் காரணமாகப் பெட்ரோல் கிடைக்காததனல் இவ்வாயு பயன்பட்த் தொடங்கிய போதிலும் இனிப் பெட்ரோலுக்குப் பதிலாகப் பஸ் முதலிய பெரிய மோட்டார் வண்டிகளுக்கு இது தான் பயன் தரத்தக்கது என்று சொல்லுகிறார்கள். சூடு செய்த சுட்டகரியின்மீது காற்றைச் செலுத்தாமல் நீராவியைச் செலுத்தினல் அப்பொழுதும் ஒரு வாயு வெளிப்படுகிறது. இதற்கு நீர்-வாயு (Water gas) என்பது பெயர். இதையும் எரிய விட்டு மிகுந்த சூட்டைப் பெறலாம்.

நிலக்கரியை நன்றாகப் பொடி செய்து அப்பொடியைப் பயன் படுத்தும் எஞ்சின்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் வாயுவை எரியவைப்பதுபோலப் பொடியையும் எரியவைப்பதற்குத் தகுந்த அடுப்புகள் இருக்கும். காற்றின் உதவியைக் கொண்டு பெரிய

குழாய்களின் மூலமாக இப்பொடி உறிஞ்சப்பட்டு இவ்வடுப்புக்குள் செலுத்தப்படும். நிலக்கரியை அப்படியே எரியவைப்பதைவிட இம் முறையில் அதிக சூடு பெறப்படுகிறது. மற்றும் பொடியை எளிதில் பல இடங்களுக்கு ஏற்றி அனுப்பலாம்; எல்லாக்கரியையும் சேத மில்லாமல் பயன் படுத்தலாம். ஆனால் பெரிய ஆலைகளில் மட்டுந்தான் இம்முறையில் கரி பயன்பட்டு வருகின்றது.

இக்காலத்தில் நிலக்கரியைக் காட்டிலும் அதிலிருந்து பெறப்படும் தார் எண்ணெய்க்குத்தான் மிகுந்த மதிப்பு. இவ்வெண்ணெயில் உயர்ந்த பயனுள்ள பொருள்கள் பல இருக்கின்றன. இதை உணரா மல் முன்னாளில் ரோடு அமைப்பதற்குத் தார் பயன் படுத்தப்பட்டு வந்தது. இப்பொழுது இதினின்று பலவகைச் சாயங்களையும், நறுமணப் பொருள்களையும், மருந்துகளையும், வெடி மருந்துகளையும் செய்து வருகிறார்கள். தார் எண்ணெயைக் காய்ச்சி வடித்தால் பல வெப்ப நிலைகளில் பல்வேறு பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றில் முக்கியமானவை பென்ஜீன் (Benzene), டோலுவின் (Toluene), பீனல் (Phenol), நாப்தலீன் (Napthalene), ஆன்திரசின் (Anthracene) என்பவை. முதலிரண்டும் திரவ நிலையில் பெறப்படுகின்றன. கடைசி மூன்றும் திட நிலையில் பெறப்படுகின்றன. பென்ஜீன் என்னும் பொருள்தான் சாயங்கள் செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் மூலப் பொருள். டோலுவின் என்னும் திரவப்பொருள்தான் வெடி மருந்துக்கு மூலப்பொருள். பீனல் என்பது தான் மருத்துவ நிலையங்களில் பயன்படும் கார்பாலிக் ஆசிட். இவை போல எல்லாப் பொருள்களும் பயன்படுகின்றன. எனவே நிலக்கரியின் பயன் முன்னிலும் பெருகி விட்டது.

I. பொருள் எழுதுக:—

தாவரங்கள், நசிக்குப்போது, இறுக்கம், வல்லரசு, அனல், ஆய்வுச் சாலை.

II. விடை கொடு.—

1. நிலக்கரி தோன்றக் காரணம் யாது ?
2. தாவரங்கள் நிலக்கரியாய் மாறின என்பதற்கு ஆதாரங்கள் யாவை?
3. சுரங்கத்தொழில் பிறதொழில்கள் எல்லாவற்றையும் விட இடர்நிறைந்த தென்பது எவ்வாறு பொருந்தும்?
4. டேவியின் விளக்கினால் ஏற்பட்ட நன்மை யாது ?
5. நிலக்கரியில் முக்கியமான வகைகள் எவை ?
6. நிலக்கரியின் மதிப்பு எதனைப் பொறுத்துள்ளது ?
7. நிலக்கரி வாயுவினால் ஏற்பட்ட நன்மைகள் எவை ?
8. தார் எண்ணெய் எவ்வாறு கிடைக்கிறது ?
9. அதிலிருந்து பெறப்படும் பொருள்கள் எவை ?

# 10. ஜேம்ஸ் குக்கின் முதற் கடற் செலவு

(வித்துவான் பு. செல்வராசன் அவர்கள்)

## சொசைடித் தீவுகள் - பெயர் வந்த காரணம்

1772-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 13-ஆம் நாள் 'எண்டவர்' கப்பல் மூன்று மாதகாலம் வரை தங்கியிருந்த டாஹிட்டித் தீவினின்று புறப்பட்டது. சுதேசித் தலைவர்கள் கப்பலுக்குவந்து தங்கள் அன்பைத் தெரிவித்துப் பிரியா விடை தந்தனர்; பலர் கண்ணீர் உகுத்தனர். டுப்பியா தன் மகனுடன் கப்பலில் ஏறினர். அவர் தம் உறவினரையும் தாய் நாட்டையும் விட்டுப் போவதால் சுதேசிகள் பெரிதும் வருந்தி அவருக்கு விடை அளித்தனர்.

'எண்டவர்' கப்பல் டாஹிட்டித் தீவினின்று புறப்பட்டு, மூன்று நாள் பயணத்திற்குப்பின் **உவாஹீன்** என்னும் தீவை அடைந்தது; அதன் அரசனாகிய ஓரி என்பானுடன் நட்புக்கொண்டு, அங்கு நான்கு நாட்கள் தங்கினர். போதுமான அளவு உணவுப் பொருள்களை அங்குச் சேர்த்துக்கொண்டபின், உலியட்ட ஓடாஹா, போல போலா முதலிய தீவுகளைக் கண்டு அவற்றை எல்லாம் ஆங்கில ஆட்சிக்கு உட்படுத்தினர். அத்தீவுகள் டாஹிட்டி தீவிலிருந்து சுமார் 60 கல் தொலைவில் இருக்கின்றன. அக்காலத்தில் ஒவ்வொரு தீவிலும் ஒவ்வோர் அரசனும் வெவ்வேறு பழக்கவழக்கங்களுள்ள மக்களும் இருந்தனர். உலியட்ட தீவில் சுதேச ஆண்களும் பெண்களும் இக்காலப் பரத நாட்டியம் போன்றதொரு நாட்டியமும், நாடகமும், இக்கால வட இந்திய நடனம் போன்ற ஒரு வகை நடனமும் ஆடிக்காட்டினர்.

டாஹிட்டி, எய்மியோ, மெய்ட்ட, மையாவிட்டி, டிட்டுவாரோ, என்னும் ஐம்பெருந் தீவுகளும் பல சிறு தீவுகளும் ஒரே கூட்டமாக இருப்பதை முன்னிட்டு, இவை அனைத்தையும் சேர்த்து, ராயல் சொஸைடியின் நினைவாக **"சொஸைடித் தீவுகள்"** என்று ஜேம்ஸ் குக் பெயரிட்டார். இத்தீவுக் கூட்டத்தை முதலில் கண்டவர் ஸ்பெயின் நாட்டவரான பெர்னண்டோ டிகுவிரோஸ் என்பவரே. இவர் 1606-இல் இவற்றைக் கண்டு, 'சகிட்டோரியா தீவுகள்' என இவற்றிற்குப் பெயரிட்டார். இத்தீவுக் கூட்டத்தில் டாஹிட்டித் தீவே பெரியதாகும். அத்தீவின் அரசனுக்கு மற்றத் தீவுகளின் அரசர் பணிய வேண்டியவர்க

ளாவர். டாஹிட்டித் தீவை இதற்குப் பின்னர்க் காப்டன் வாலிஸ் என்பார் 1767-இல் கண்டு, மூன்றும் ஜார்ஜ் தீவு என அதற்குப் பெய ரிட்டிருந்தார்.

## சொஸைடித் தீவுகளின் மக்கள் வாழ்க்கை

டாஹிட்டி உட்பட்ட இத்தீவுகளின் மக்களைப் பற்றியும் அவர் களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும் ஜேம்ஸ் குக் தம்முடைய நாட்குறிப்புச் சுவடியில் குறித்து வைத்திருந்த விவரங்கள் வருமாறு:

" இத்தீவுகளின் சுதேசிகள் ஐரோப்பியரினும் கம்பீரமான தோற் றம் உடையவர்கள். ஆண்கள் நெட்டையாய், வலிமை மிக்கோராய், அழகிய உடலமைப்புடன் பழுப்பு நிறம் உடையவர்களாய் விளங்கினர். பெண்கள், ஐரோப்பியப் பெண்கள் போன்ற வளர்ச்சி உடையவர்கள் ; மஞ்சள் கலந்த வெண்மை நிறத்தினர் ; பட்டுப் போன்ற மென்மை யான உடல் அமைப்புடையவர்கள் ; அவர்களுடைய கண்கள் கவர்ச்சி மிக்கவை ; பற்கள் வெண் முத்துக் கோவைபோல வரிசையாயுள் ளவை; கூந்தல்; நல்ல கறுப்பு நிறமுடையது. ஆண்களும் பெண் களும் சினமூட்டப் படாதவரை மிகவும் நல்லவர்கள்; ஆனால் கள வாடும் குணமுடையவர்கள்.

" பெண்கள் கூந்தலை நீள வளர்க்காமல் குட்டையாக வெட்டிக் கொள்வர், ஆண்கள் முடியை நீள வளர்த்து உச்சியில் முடிந்து அதில் பறவைகளின் இறகுகளைச் செருகிக் கொள்வர். ஆண்களும் பெண்களும் அன்றாடம் விடியற்காலை, பகல், இரவு படுக்கைக்குப் போகுமுன் என மும்முறை குளிப்பவர்கள் ; துணிகளைத் துவைத்து உடுத்துபவர்கள் ; உடல் முழுவதும் 'பச்சை' குத்திக் கொள்பவர் கள் ; புதிய முறைகளை விரும்புபவர்கள்.

" அவர்கள் முரட்டுத் துணிகளையும், கோரைப் புற்களால் நெய் யப்பட்டிருந்த பாய்களையும் உடுத்துபவர்கள். பெண்கள் இடுப்பைச் சுற்றிப் பலசுற்றுகளாகத் துணியை உடுத்துவார்கள். ஆண்களும் பெண்களும் சிப்பி, கற்கள், முத்து, கிளிஞ்சல் முதலியவற்றைக் காது களில் துளையிட்டுக் கடுக்கன்களாக அணிவர்.

" பன்றி, நாய், கோழி, மீன் மற்றும் அங்குக் கிடைக்கும் பழ வகைகள் ஆகியவைகளே அவர்களின் உணவு. அவர்கள் இவற்றினை

ஒரு வகையாகச் சமைத்து உண்கின்றனர். தண்ணீரும் தேங்காய்ப் பாலுமே அவர்கள் அருந்தும் குடிவகை. அவர்கள் கைகளையும் வாய்களை யும் கழுவிக்கொண்டு உட்கார்ந்து, எதிரில் இலைகளை விரித்து, அவற் றில் உணவுகளை வைத்து உண்கின்றனர். உண்டு முடிந்த பிறகு, கை, வாய்களை மீண்டும் கழுவிக் கொள்வது அவர்களின் பழக்கம். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி உட்கார்ந்து, தத்தம் பங்கு உணவைத் தனித்தனியே எடுத்துக் கொண்டு, ஒருவரோடொருவர் பேசாமல் உண்கின்றனர்.

"இசை, நடனம், நாடகம், மற்போர், வேட்டை முதலியவை அவர்களுடைய விளையாட்டுக்களாகும். புல்லாங்குழலும் முழவுகளுமே அவர்கள் அறிந்திருந்த இசைக் கருவிகள். அவர்களின் முழவுகள் இப்போதைய கஞ்சிராவை ஒத்தவை.

"அவர்கள் நெகிடிக் கட்டைகள் மூலம் தீ உண்டாக்குபவர்கள்; இரவில் எண்ணெய்ப் பசையுள்ள வித்துக்களை நசுக்கிவைத்துக் கட்டிய பந்தங்களை எரித்து ஒளி உண்டாக்குபவர்கள்.

## கைத்தொழில்

அவர்களுடைய தொழில், நெசவு, வேட்டை, மீன் பிடித்தல் ஆகியவை. அத்திமரம், மல்பெரிமரம் முதலியவற்றின் பட்டைகளி லிருந்து நார் எடுத்துத் துணி நெய்கின்றனர்; இவ்வாறு நெய்யும் நார்த் துணி மென்மையாகப் பட்டுப் போன்றுள்ளது. பிரெட் பழ மரப் பட்டையிலிருந்து நார் எடுத்து நெய்யும் துணி முரடாக இருக்கிறது. மூன்றும் வகையாகக் கோரைப்புற்களின் மூலம் துணி நெய்கின்றனர்; இது மெல்லிய கோரைப்பாய் போன்றுள்ளது. துணிநெசவினும் பாய் நெசவைச் சுதேசிகள் மிகுதியாகச் செய்கின்றனர். இக்கால ஐரோப் பியர்கள் நெய்தவற்றிலும் உயர்ந்த வகைப் பாய்களை இந்தத் தீவுகளில் சுதேசிகள் நெய்து பயன்படுத்தினர்.

"கூடை முடைதல், தென்னைநார்க்கயிறுகள் பின்னுதல் முதலிய வற்றில் அவர்கள் மிகுந்த திறமைசாலிகள். மீன் பிடிக்கும் வலைகளை அவர்கள் பின்னியது போல உலகத்தில் அக்காலத்தில் வேறெங்கும் வேறெவரும் அத்துணை உறுதியாகப் பின்னவில்லை.

"கற்சுத்தியல், கற்கோடாரி, எலும்பு உளி, பவளப் பாறையின் மணல் முதலிவற்றைக் கொண்டு, மரத்தை வெட்டி வழவழப்பாகத் தேய்த்து, மெருகேற்றி வீடு கட்டுதல், படகு கட்டுதல் முதலியவற்றை அவர்கள் செய்தனர். பெரிய வீடுகளும் சிறிய குடில்களுமாக அவரவர்கள் தகுதிக் கேற்ப அவர்கள் வீடு கட்டியிருக்கின்றனர்; சில குடிசைகள் சுவரேயின்றி வெறுங்கால்கள் நட்டுப் பந்தல் போலக் கட்டப்பட்டுள்ளன. ஈட்டி, நீண்ட தடிகள், வில், அம்பு முதலியவைகளே அவர்களுடைய போர்க் கருவிகளாகும்.

## கடவுள் கொள்கை

"நில நடுக்கங்களை உண்டாக்குபவர் கடவுள்" என்பது அவர்கள் மதக்கொள்கை. "புரோகிதர்களே கடவுளிடம் வேண்டுதல் செய்தற்கு உரியவர்கள் புரோகிதர்கள் தலைமுறை தலைமுறையாக வரும் குடும்பத்தினர். அவர்கள் தவிர, பிற எவரும் புரோகிதராக முடியாது. தலைவர்கள். அரசர்கள், அவர்களுடைய இனத்தவர் ஆகியோரே கடவுளுக்குகந்த மக்கள்" என்பது சுதேசிகளின் நம்பிக்கை.

"சொஸைடித் தீவுகள் அனைத்திலுமாகச்சேர்த்து இப்போது சுமார் 6000 சுதேசிப் போர் வீரர்கள் இருக்கின்றனர்.

## உணவுப் பொருள்கள்

"மிகுந்த உழைப்பின்றியே கரும்பு, வள்ளிக்கிழங்கு, மல்பெரி, பிரெட் பழம், தெங்கு, வாழை, அத்தி போன்றவை அங்கு நிறையப் பயிராகக்கூடியவாறு நிலம் நல்ல வளமுடையதாகும். கூலங்கள் ஒன்றேனும் அங்குப் பயிராகவில்லை. பன்றி, நாய், கோழி, புறு, வாத்து முதலியவைகளும், காட்டுப்பறவைகளும் அங்கு இருக்கின்றன. எலிகள் மிக்குள்ளன. பாம்பு ஒன்றேனுமில்லை. கடலில் எண்ண இயலா அளவு எத்தனையோவகை மீன்கள் கிடைக்கின்றன.

## மற்போர்

"அவர்களுடைய மற்போர் குறிப்பிடத்தக்க தாகும். இருவரும் எதிரெதிரே நின்று ஒருவரை ஒருவர் கைகொடுத்துப் பிடித்துத் தூக்கியடித்து மல்லாத்திக் கிடத்தப் பெரிதும் முயல்வர். எவர் மல்லாந்து

விழுந்தவரோ அவர் தோற்றவர்; மல்லாத்தி விழுத்தியவர் வென்றவர். வயது முதிர்ந்தவர்கள் கைகொட்டி வென்றவரைப் பாராட்டி வாழ்த்து வர். இவ்விளையாட்டில் ஈடுபடுபவர்கள் மிகுந்த உணர்ச்சியும் ஊக்கமும் காட்டுவர். வென்றவர் தம் வெற்றியின் பெருமை குறித்துக் கொக்கரித்து ஆர்ப்பாட்டம் செய்வதில்லை; தோற்றவர் வெட்கித் தலைகுனிந்து வெளியேறுவதுமில்லை. ஒரே சமயத்தில் பத்துப் பன்னிரண்டு இரட்டையரிடையே இவ்விளையாட்டு நடைபெறுகிறது. ஓர் இரட்டையரிடை மற்போர் நடந்து ஒரு நிமிடத்துக்குள் எவரும் மல்லாத் தப்படவில்லை எனின், அவ்விருவரும் பிரித்துவிடப் படுகின்றனர். இவற்றைக் கண்காணித்து மேற்பார்வை யிடவும், பார்வையிட அவண் வந்து குழுமியுள்ள மக்களை அமைதியாக இருக்கச் செய்யவும் ஒருவர் குறுந்தடி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு ஒழுங்கை நிலை நாட்டு வார்; ஒழுங்கை மீறித் தள்ளிக்கொண்டு முன்னே வர முயன்றவரைத் தம் கையிலுள்ள குறுந்தடியால் மெல்லத் தட்டி எச்சரிப்பர்; இடை யிடையே அதே மேடையில் நடனமும் நடைபெறும். விளையாட்டிலோ. நடனத்திலோ ஈடுபட்டவர்கள் வேறெதனையும் கவனியாமல், தாங்கள் ஈடுபட்ட ஒன்றிலேயே கருத்தூன்றி வெற்றிபெற முயல்வர்.

### சவ அடக்கச் சடங்கு

"அச்சுதேசிகள் தங்களுள் இறந்தவரை உடனே புதைப்பது மில்லை; எரிப்பதுமில்லை. அவர்களின் இறுதிச் சடங்கு விந்தை மிக்கது; செத்தவன் உயிருடன் இருந்தபோது வசித்த இடத்தருகில் ஒரு குடிசை எழுப்புகின்றனர்; அதில் ஐந்தடி உயரத்தில் தூண்கள் நட்டுப் பரண்போன்று சிதை அமைக்கின்றனர்; சிதைமீது ஒரு பாய் விரித்து, அதில் ஒரு வெள்ளைத்துணி பரப்பி, அத்துணிமீது பிணத்தைக் கிடத்துகின்றனர்; பிணத்தின் தலையருகில் இரு தேங்காய்க் கொட்டங் கைச்சி (சிரட்டை) களும், காலருகில் பசுந்தழைக் கொத்துக்களும், உலர்ந்த சிறு மரக்கிளைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய கட்டும் வைக்கின்றனர்; எதிரில் ஒரு கல்லைத் தரையில் நடுகின்றனர்; அத னருகில் ஒரு வாழைக்கன்றை நடுகின்றனர்; பனைமரத்துண்டு ஒன்றை எதிரில் புதைத்து அதன்மீது தேங்காய்ச் சிரட்டையில் தண்ணீர் வைக்கின்றனர்; ஒரு பையில் பிரெட்பழச் சதைகளைப் பொரித்து வைக்கின்றனர். இறந்தவனின் உயிர் இவற்றைத் தின்று நீர் அருந்திச் சாந்தி அடையும் என்பது அம்மக்களின் கருத்துப்போ

ஆம்! பிறகு அப்பிணம் காய்ந்து வற்றலாகி எலும்பானதும், அதனை எடுத்துக் குழிவெட்டிப் புதைக்கின்றனர்.

## மூக்கினால் இசைக்கும் இன்னிசைக்கருவி

" அச்சுதேச மக்கள் இன்னிசையில் பெருவிருப்பமுடையவர்கள். அவர்களுட் சிலர் ஜெர்மன் புல்லாங்குழல் போன்றதோர் இசைக்கருவி மூலம் ஒரு நாள் இன்னிசை வழங்கினர். ஆனால், வாய்மூலம் ஒரு நாள் இன்னிசை வழங்கினர். ஆனால், வாய்மூலம் ஊதுவதற்குப் பதிலாக, அம் மக்கள் மூக்கில் அக்கருவியை வைத்து மூச்சை இழுத்து விரைவாக விட்டு அவ்விசைக் கருவியை இயக்கினர். இதனின்று கிளம்பிய இன்னிசைக்கேற்பப் பெண்கள் குரல் மூலம் இசை எழுப்பினர். இந்த இசை கேட்பதற்கு இனிமையாகவும் பார்ப்பதற்கு விந்தையாகவும் இருந்தது.

## அண்ணனுக்கு தங்கை மனைவி

" மற்றொரு வழக்கம் அவர்களிடை இருந்ததை எதிர்பாரா வண்ணம் அறியமுடிந்தது. ஒரு நாள் ஓஆமோ என்னும் சுதேசித் தலைவன் தன்னுடன் ஒரு சிறுவனையும், சிறுமியையும் அழைத்துக் கொண்டு கப்பலுக்கு வந்தான். அவ்வமயம் கப்பலிலிருந்த ஒபரியா அரசி, அவனை மிகுந்த அன்புடன் வரவேற்றாள். அவன் ஒபரியாவின் கணவன் என்றும், சிறுவனும் சிறுமியும் ஒபரியா பெற்ற பிள்ளைகள் என்றும் தெரிந்தது. கணவனும் மனைவியும் சிறிது காலம் பிரிந்து வாழ்வதென்று இருவரும் இணங்கி ஒப்பந்தம் செய்து, அதன்படி பிரிந்து வாழ்கின்றனர். ஒபரியாவின் மகன் தக்க வயதடைந்தவுடன் ஒபரியாவின் மகளை — தன் தங்கையை மணந்து கொள்வான் என்று அங்கிருந்த சுதேசிகள் விளக்கிக் கூறினர். அந்தச் சுதேச மக்களிடையே அண்ணன் தங்கையை மணந்துகொள்ளும் வழக்கம் இருந்தது

" அச்சுதேசிகளுக்குக் கப்பல் ஆட்களுட் சிலரைத் தங்களுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்னும் அவா இருந்தது. இரண்டு முறை கப்பலாட்களுட் சிலர் காணமற் போயினர். அவர்களை அச்சுதேசிகள் ஆசை வார்த்தைகள் கூறிச் சுதேசிகளின் உடுப்பணிவித்துக் கொண்டுபோய் வைத்திருந்தனர். ஒன்றிரு கப்பலாட்கள் சுதேசிப் பெண்களை மணந்துகொண்டு அத்தீவிலேயே இருந்துவிடுவதாகவும்

கூறினர். சில கப்பலாட்களைச் சுதேசிகள் கடத்திச் சென்றும் வைத்திருந்தனர். ஆனால், கடுமுயற்சியின் பலனாக அனைவரும் கப்பலுக்கு அழைத்துவரப்பட்டனர்."

I. விடை எழுதுக :—

1. 'எண்டவர்' டாஹிட்டித் தீவை விட்டு எப்பொழுது புறப்பட்டது?
2. சொசைடித் தீவுகளுக்கு அப்பெயர் வரக்காரணமென்ன?
3. மூன்றும் ஜார்ஜ் தீவின் வேறு பெயர் யாது?
4. சொசைடித் தீவுகளில் உள்ள மக்கள் விளையாடும் விளையாட்டுக்கள் எவை?
5. அவர்கள் இசைக் கருவிகள் எவை?
6. அவர்களுடைய போர்க்கருவிகள் எவை?
7. அவர்களுடைய மற்போரில் வென்றவர் யார்? தோற்றவ:
8. அவர்கள் சவ அடக்கச் சடங்கு எவ்வாறு செய்கின்றனர்?